பாரதநாட்டுப்

பஞ்ச

ரத்தினங்கள்

(Approved by the Text Book Committee)

HERS' PUBLISHING HOUSE, MADRAS.

உ

கடவுள் துணை

—

பாரதநாட்டுப் பஞ்சரத்தினங்கள்

திரு P M. G வேங்கடகிருஷ்ண முதலியார்

இயற்றியது.

பதிப்பாளர்:

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்

சென்னை

பதிப்புரிமை] 1930 [விலை அணா. 8.

THE MADURA TAMIL SAN

பொருளடக்கம்.

க.	கௌதம புத்தர்	....	1
உ.	பத்மினி	....	27
ரு.	சிவாஜி	....	38
ச.	இராஜா ராம் மோகன ராய்	....	67
ரு.	ஸ்ரீகோபால கிருஷ்ண கோகலே	....	90

The Progressive Printers,
Coral Merchant St., Madras

பத்மினி
சிவாஜி
ராம்மோஹனராய்
கௌதமபுத்தா
கோகலே

க. கௌதமபுத்தர் சரித்திரம்

உலகின் இயற்கை வளங்களுக்கு நடுநாயகமாய் விளங்கும் நம் பரதகண்டத்தின் வடஎல்லையா யுள்ளது இமயமலை என்னும் தெய்விக மலைத்தொடராகும். இதன் சாரலிலிருக்கும் நேபாளநாட்டை இரண்டாயிரத்தைந் நூறு ஆண்டுகளுக்குமுன் சுத்தோதனர் என்ற அரசர் பரிபாலித்து வந்தார். அவர் சாக்கிய வம்சத்தைச் சேர்ந் தவர். அவர் இராஜ்ஜியத்துக்குத் தலைநகரா யமைந்திருந் தது கபிலவஸ்து என்னும் கடிநகராகும். அவருடைய மனைவியின் பெயர் மாயாதேவி. அவ்வம்மையார் அருந் ததிக்குச் சமமான கற்பினையுடையார்: திருவள்ளுவர் கூறியுள்ள 'தெய்வந் தொழாஅள் கொழுநற் றொழுதெழு வாள் பெய்யெனப் பெய்யு மழை' என்ற பொய்யாமொ ழிக்கு இலக்கானவர். இன்னும், அவ்வரசர் மகா யுத்த வீரர். அவர் குடிகளிடமிருந்து ஆறிலொரு கடமை வாங்கி வந்தார். குடிகளைத் தன்னுயிர்போல் பாவித்து அன்பு அருள் இரக்கங்கொண்டு பாதுகாத்து வந்தார். குடி களுக்குத் தன்னாலும், தன் பரிஜனத்தாலும், பகைவர் களாலும், மிருகங்களாலும் இடையூறு நேரிடாவண்ணம் பாதுகாத்து வந்தார். இங்ஙனமவர் தம் குடிகளைப் பாதுகாத்து வரவே, அவர்களும் 'நம் அரசனைப்போல் வேறு ஓர் அரசனும் உளனோ? இவர் தெய்வாமிசம் போலும். இத்தகைய நற்குணங்கள் வாய்க்கப்பெற்ற

இவர் நமக்கு அரசராக அமைந்திருப்பது நம்முடைய பாக்கியமே போலும்' என்று கொண்டாடி அவரிடம் நீங்கா அன்புகாட்டி வசித்து வந்தார்கள்.

சுத்தோதனரும் மாயாதேவியும் நோற்ற நோன்பின் பயனுக அவர்களுக்கு நல்ல சுபதினத்தில் ஓர் ஆண் மகவு பிறந்தது. அம்மகவு எல்லாவித இலட்சணங்களை யும் தன்னகத்துக் கொண்டு விளங்கியது. அம்மகவுக்குப் பெற்றோர்கள் சித்தார்த்தர் என்று நாமகரணஞ் சூட்டி அதனை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாகச் சீராட்டிப் பாரட்டிக் காதலித்து வளர்த்து வந்தனர்.

நிற்க, சுத்தோதனர் இந்து சமயத்தைச் சேர்ந்தவ ரானபடியால் அவர் அச்சமய வழக்கத்திற் கிணங்க ஜோதிடர்களை வரவழைத்துத் தம்முடைய குமாரனு டைய ஜாதகத்தைக் கணிக்கும்படிக் கூறினர், அவர் களும் அரசருடைய கட்டளையைச் சிரமேற் றுங்கி அவர் விரும்பியவண்ணம் ஜாதகம் கணித்தனர். பின்னர் அவர் கள் அரசரை நோக்கி, 'வேந்தே! தங்களுடைய குமாரர் உலக சுகங்களைத் துறந்து தன்னலமற்றுப் பிறர் துயரங் களைக் களைவதிலேயே கண்ணுங் கருத்துமா யிருப்பார். இன்னும் அவர் அத்துறையில் நீங்காப் புகழையும் மேன் மையையும் அடைவர் என்று எங்களுடைய சிற்றறிவுக்குப் புலனுகிறது. அப்படி யில்லாவிட்டால் அவர் மன்னர் களுக்கு மன்னர் என்று சொல்லும்படியான ஏகசக்ராதி பத்யம் பூண்டு இப்பூவுலகைத் துஷ்டநிக்கிரகம் சிஷ்டபரி பாலனம் என்னும் அரச தருமத்தை மேற்கொண்டு

தேவர்களும் வியக்குமாறு பரிபாலித்துவருவார்' என்று கூறினார்கள்.

இங்ஙனம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ண முமாக, அம்மான்மார் தோள்மேலும் அத்தைமார் மடிமேலும், சீராட்டிப் பாராட்டி வளர்க்கப்பட்ட சித்தார்த் தருக்கு வயது எட்டாயிற்று. அதன்மேல் மன்னர், தம்முடைய மந்திரிகளையும் பிரதானிகளையும் இன்னு முள்ள பெரியார்களையும் தம்முடைய கொலுமண்டபத் திற்கு வரவழைத்து, அங்குக் குழுமி யிருந்தவர்களை விளித்து, 'ஐயன்மீர்! யான் சித்தார்த்தனுக்கு வித்தியா ரம்பம் செய்ய எண்ணியுள்ளேன் என்பது தங்களுக் கெல்லாம் தெரிந்ததேயாம். சற்குருவை யடுத்து ஒவ் வொருவரும் கல்வி கற்பது அவசியமாதலின் சித்தார்த்த னுடைய கல்விப் பயிற்சிக்குத் தக்க குரு யாவர் என் பதை எனக்குத் தெரிவிக்கும்படியாய்க் கேட்டுக்கொள் கிறேன்' என்றார். அரசர் இங்ஙனம் கூறியதைக் கேட்ட அப்பெரியார்கள் தக்க ஒரு குருவின் நாமதேயத்தை அவர்க்கு எடுத்துச் சொன்னார்கள். தமக்கு இராஜ்ஜிய சம்பந்தமான விஷயங்களில் சந்தேகம் ஏற்படும் போதெல் லாம் 'பெரியாரைத் துணைக்கொள்' என்பதற்கேற்ப அர ச்ரும் அவர்கள் கூறிய அப்பெரியாரிடம் சென்று தம் சந்தேகத்தைத் தீர்த்துக்கொண் டிருந்தமையால், அவர் கள் கூறியது முறையானதென்று அவர்க்கும் புலப் பட்டது. அதன்மேல் அவர் அக்குருவை வரவழைத்து அவரை முறைப்படி வரவேற்று உபசரித்துத் தக்க ஆசனமளித்துப் பின்னர் தம் கருத்தை வெளியிட்டனர்.

அரசருடைய உள்ளக் கருத்தை அறிந்த குருவானவர் சித்தார்த்தருக்குத் தம்மால் கூடிய அளவுக்குக் கல்வி கற்பித்து அவரை முன்னுக்குக் கொண்டு வருவதாகவும் வாக்களித்தார். இதனைச் செவிமடுத்த அரசர் உவகை பூண்டவராகிக் குருவுக்குப் போதுமான காணிக்கை முதலானவைகள் கொடுத்து அவரை உபசரித்தனுப் பினர். சித்தார்த்தர் குருவினிடம் நான்கு வேதம், ஆறு சாஸ்திரம், அறுபத்தினான்கு கலை ஆகியவைகளை முறைப்படி கற்றுவந்தார். அத்துடன் அவர் கூரிய மதியினரா யிருந்த தைக் கண்ட குருவும் அவர்பால் அத்தியந்த அன்பு காட்டி னர். ஆனல் அதற்காகச் சித்தார்த்தர் செருக்குக் கொள் ளாமல் வேண்டியவைகளெல்லாம் முறைப்படி கற்றார்.

சுத்தோதனர் வெற்றி வீரர் என்று முன்னமே சொன்னோமல்லவா? அதற்கிணங்க அவர்தம் புத்திரரை யும் தம்மைப்போல் சுத்தவீர சிகாமணி யாக்கும் நோக் கத்துடன் அவருக்கு வேண்டிய யானையேற்றம், குதிரை யேற்றம், வில்வித்தை வாள்வித்தை முதலான படைக் கலப் பயிற்சிகளைப் பயிற்றுவிப்பதற்காகத் தக்க ஆசிரி யர்களை நியமித்தார். சித்தார்த்தரும் யானையேற்றம் குதிரையேற்றம் வாள் வில் வித்தைகள் முதலான படைக் கலப் பயிற்சிகளில் நிகரற்று விளங்கிக் கண்டோர் கொண் டாடும் வண்ணம் சிறப்புற்றோங்கி வருவாராயினர்.

இங்ஙனம் சித்தார்த்தர் கல்வி கேள்விகளிலும் படைக் கலப் பயிற்சிகளிலும் மேன்மையுற்று வருதலைக் கண்ட அவருடைய பெற்றோர்கள், 'ஈன்ற பொழுதில் பெரிதுவக் கும் தன் மகனைச் சான்றோனெனக் கேட்ட தாய்' என்ற

மறைமொழிக் கிணங்க ஆனந்தக் கடலில் மூழ்கித் திளைத்தார்கள். அவர்கள் மாத்திரமல்லாமல் அந்நாட்டு மாந்தரனைவரும் கூட சித்தார்த்தருடைய நற்குண நற்செய்கைகளைப் பாராட்டினார்கள். சித்தார்த்தர் கூரிய மதியுடன் அழகும், அழகுக்கேற்ற நற்குண நற்செய்கைகளும், மலர்ந்த முகமும், இனிய வசனமும், இரக்கந் ததும்பும் சித்தமும் கொண்டவரா யிருந்தார்.

இத்தகைய நற்குண நற்செய்கைகள் கொண்ட சித்தார்த்தருக்குப் பதினைந்து பிராயங்களாயின. அவர்க்குத் தாயாதிகள் அநேகரிருந்தமையால் அவர்களுடன் சேர்ந்து அவர் அடிக்கடி காட்டிற்கு வேட்டையாடச் செல்வதுண்டு. இங்ஙனம் செல்லுங் காலங்களில் அவர் மான் கூட்டங்களைக் காணச் சந்தர்ப்பங்கள் நேரிடுவதுண்டு. அப்போது அவர் வில்லை நாணேற்றி வளைத்து அம்மிருகங்களைக் கொல்ல எண்ணுவார். ஆனால் உடனே அவர்க்கு, 'இவைகளும் நம்மைப்போல் கடவுளால் படைக்கப்பட்டவை யாகும். நம்மைப்போல் இவைகளும் சுகதுக்கங்களை அநுபவிக்கின்றன. இவைகளின் கண்களுடைய வனப்பு என் மனதைக் கொள்ளை யிடுகின்றது. புலவர்களும் 'மானேர் விழியார்' என்று பெண்களின் விழியைக் குறித்து வியந்து சொல்லி யிருக்கிறார்கள். மற்றும் இவை பிறருக்குத் தீங்கிழைப்பனவாகவும் காணப்படவில்லை. ஆகவே நான் என் இவைகளை வீணே கொன்று ஒழிக்கவேண்டும்' என்ற எண்ணம் ஏற்படும். உடனே வளைத்திருந்த வில்லிலுள்ள அம்புகளை அம்மிருகங்களின் மேல் பிரயோகிக்காமல் எடுத்து அம்புப்

புட்டியில் போட்டுவிட்டு, வீட்டிற்குத் திரும்பிவிடுவார். என்னே சித்தார்த்தருடைய கருணை! பிள்ளைகளே! நீங்களும் இத்தகையவராக முயலுங்கள்.

சித்தார்த்தர் குதிரைப் பந்தயங்களில் சிரத்தை காட்டுவார். தாம் ஏறிச்செல்லும் பரியானது இரைக்கக் கண்டால் அதனை இன்னும் துன்புறுத்துவது பாபமான செயலாகும் என்று அவர் கருதிக் குதிரையை மேலும் ஓட்டாமல் மிகவும் மனச் சந்துஷ்டியுடன் பந்தயத்தை இழந்து விடுவர். ஒரு சந்தர்ப்பத்தில் சித்தார்த்தர் தாயாதிகளுடன் குதிரைப் பந்தயத்திற்கு ஆயத்தமாகிப் பந்தயத்தில் கலந்துகொண்டு குதிரையைத் திறம்பட நடத்திச் சென்றுகொண்டிருந்தார். வெற்றி இன்னும் சில நிமிடங்களுக்குள் இவருடையதாகும் போலிருந்தது. அச்சந்தர்ப்பத்தில் சித்தார்த்தர் தம் தாயாதிகளை நோக்கினர். அவர்களுடைய முகம் வாட்டமுற்றிருந்தது. அவர்களுடைய முகவாட்டத்திற்குத் தாம் காரணமென்றும், தாம் பந்தயத்தில் ஜெயித்து அவர்களுக்கு முகவாட்டத்தை யுண்டாக்குவதைக் காட்டிலும் பந்தயத்தை இழந்து அவர்களுக்குச் சந்தோஷத்தை யுண்டாக்குவதே தம் கடமையென்றும் கருதி, அவர்களே பந்தயத்தை ஜெயிக்கும்படியாய் விட்டுவிட்டார்.

சித்தார்த்தருக்கு அத்தை ஒருத்தி இருந்தாள். அவளுக்கு ஒரு புத்திரன் இருந்தான். அவனுடைய பெயர் தேவதத்தன். தேவதத்தனும் சித்தார்த்தரும் ஒரு நாள் அரண்மனையைச் சேர்ந்த உத்தியான வனத்தில் விளையாடிக்கொண்டிருந்தார்கள். இவர்கள் விளை

யாடிக்கொண்டிருக்கையில் ஆகாயத்தில் அன்னப் பறவைகள் தம் இருப்பிடத்தை நோக்கிச் சென்றுகொண்டிருந்தன. அவைகளைக் கண்ட தேவதத்தன் தன்னுடைய வில்லை நாணேற்றி வளைத்து ஓரன்னப் பறவையின்மேல் இலக்குவைத் தெய்தான். உடனே அப்பறவையானது கறகறவென்று சுழன்று தைக்கப்பட்ட அம்புடன் சித்தார்த்தருடைய மடியில் அடைக்கலம் புகுவதைப்போல் வந்து வீழ்ந்தது. அதனுடைய பரிதாப நிலையினைக் கண்ட நமது கதாநாயகர் மனம் பதைபதைத்து வாடித் தளர்ந்து என் செய்வதென்று தோன்றாமல் திகைத்து நின்றார். பின்னர் அவர் ஒருவாறு மனந்தெளிந்து தம் மடியின்மீது வீழ்ந்து கிடந்த பறவையைப் பஞ்சுபோன்ற தம் மெல்லிய கரங்களால் எடுத்து, அதன் உடலில் தைத்திருந்த அம்பினை மெதுவா யெடுத்தார். பிறகு அதற்குக் கொஞ்சம் ஜலம் ஊற்றி அதனுடைய களையையாற்றி அதற்கு உயிர் வரும்படியாய்ச் செய்தார்.

பறவை உயிர்பெற் றெழுந்ததைக் கண்ட தேவதத்தன் சித்தார்த்தரை நோக்கி, 'பறவையை ஆகாயத்தினின்று வீழ்த்தியவன் யானே யாவன். ஆதலால் அப்பறவை எனக்குச் சொந்தமாகும். அதை என்னிடத்தில் கொடுத்து விடு' என்று சொன்னான். இவ்வார்த்தைகளைக் கேட்ட சித்தார்த்தர் அத்தேவதத்தனை நோக்கி, 'ஏ, தேவதத்தா! நீ அப்பறவையை ஆகாயத்தினின்று வீழ்த்தியது உண்மையே. யான் அதை மறுக்கின்றேனில்லை. பறவையானது அடைக்கலம் புகுந்ததைப்போல் என் மடியின்மீது வந்து வீழ்ந்தமையால் அதை

யான் அடைக்கலப் பொருளாகக் கொண்டுள்ளேன். அடைக்கலம் என்று வந்தடைந்தவர்களைப் பகையாளிக ளிடம் ஒப்படைப்பது இராஜ தருமமல்ல. இதை நீயும் உணர்ந்திருக்கிறாய். ஆதலால் உனக்கு யான் அதிகம் சொல்ல வேண்டுவதில்லை" என்றார். இங்ஙனம் சித்தார்த்தர் கூறியபின்பும் தேவதத்தன் ஒரே பிடிவாதமாய் அப்பற வையைத் தன்னிடம் கொடுத்துவிடும்படி வற்புறுத்தினான்.

அதன்மேல் இருவரும் தங்களுடைய வழக்கை அரசரிடம் முறையிட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று. அவர்களுடைய முறைப்பாடுகளைக் கேட்ட சபையினரில் ஒரு சாரார் சித்தார்த்தரையும் இன்னொரு சாரார் தேவ தத்தனையும் ஆதரித்தார்கள். விஷயம் இங்ஙனமிருக்க, அதுகாறும் மௌனஞ் சாதித்துக்கொண்டிருந்த விருத் தாப்பிய மந்திரியொருவர் சபையினரை நோக்கி, "கல்வி அறிவாற்றல்களில் சிறந்த சபையோர்களே! கொன்று வீழ்த்துவது சுலபமான காரியம்; காப்பாற்றுவதுதான் கஷ்டம். ஆதலால் இப்பறவை காப்பாற்றியவனுக்கே சொந்தமானதாகும். தருமச் செயலாவது யாதெனில், பிற உயிர்களுக்குக் கேடு சூழாமல் இருப்பதேயாம். 'அற வினை யாதெனிற் கொல்லாமை;' 'கொல்லா நலத்தது நோன்மை;' 'அறமெனப்படுவது ஆருயிரோம்பல்' ஆகிய திருவாக்குகளைக் கவனித்துப் பாருங்கள்" என்று கூறி முடித்தார். மற்றவர்களும் அவருடைய கூற்று முறை யானதாகுமென்று கருதியதால் மேற் கூறப்பட்ட அன் னப்பறவை இராஜகுமாரனிடமே இருக்கவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. பின்னர் சித்தார்த்தர் பறவையை

அரணமனைக்கு எடுத்துச் சென்று அதற்குப் பறக்கும் சக்தி வந்தவுடன் அதனை விட்டுவிட்டார். இங்ஙனம் விடுதலை யடைந்த அன்னப்புள்ளும் இராஜ குமாரனை வாழ்த்தித் தன்னிருப்பிடம் சேர்ந்து தன் இனத்துடன் இனிது வாழ்ந்தது.

இச்சம்பவம் நிகழ்ந்த சின்னாட்களுக்குப்பின், மாந்தர்க்கும் ஏனைய ஜீவராசிகட்கும் மனச் சந்துஷ்டியை யுண்டாக்கும் வசந்த காலம் வந்துற்றது. அதனைக் கண்ட சுத்தோதனர் தம் குமாரனை ஒரு பொழுது நகரின் காட்சிகளைக் கண்டு களிப்பதற்காகத் தம்முடன் அழைத்துச் செல்ல எண்ணங்கொண்டார். எண்ணங்கொண்டவர் அங்ஙனம் ஒரு நாள் சித்தார்த்தரைத் தம்முடன் அழைத்துச் சென்று நகரின் வளங்களை யெல்லாம் அவர்க்குக் காட்டினார். ஆகாயத்தை அளாவி நிற்கும் மாட மாளிகைகளையும் கூட கோபுரங்களையும் கண்டு சித்தார்த்தர் மனங் களித்தார். சாலைகளின் இருபுறங்களிலும் ஓங்கி வளர்ந்திருந்த மரங்கள் குளிர்ச்சியான நிழலைத் தந்து அவரை மகிழ்வித்தன. மரங்களில் கூடு கட்டி வசித்துக்கொண்டிருந்த நாகணவாய்ப் புட்களும் குயில்களும் தம் இனிய குரலால் பாதசாரிகளை வரவேற்றன: மரமல்லி, மந்தாரை, வெட்சி, சண்பகம், கொன்றை, ஆத்தி, புன்னை முதலிய பூமரங்களும், மல்லிகை, முல்லை, கொடி சம்பங்கி முதலிய பூங்கொடிகளும் தம்முடைய புஷ்பங்களால் வருவோரை மகிழ்வித்து இன்பம் விளைவித்து வந்தன. பழங்கொடுக்கும் மரங்களில் அநேகம் தளிர்த்துப் பூத்துக் காய்த்து நறுமணத்தை வீசிக்கொண்டிருந்தன. தடாகங்களில் தா

மரைகள் நிறைந்து கண்களுக்கு ஆனந்தத்தைக் கொடுத்துக் கொண்டிருந்தன. மலைகளின் பள்ளத்தாக்குகளில் விரைந் தோடும் சிற்றாறுகளின் ஓசையும் ஒருவித உற்சாகத்தைக் கொடுத்துக்கொண்டிருந்தது. மலர்களில் உள்ள தேனை யுண்டு தேனீக்கள் ரீங்காரம் செய்தன. இங்ஙனம் எங்குப் பார்த்தாலும் சந்தோஷத்தை யுண்டாக்கக் கூடிய காட்சி களே சித்தார்த்தருடைய கண்களுக்குப் புலனாகி வந்தன.

இங்ஙனம் சுத்தோதனரும் சித்தார்த்தரும் சென்று கொண்டிருந்தகாலை உழவனொருவன் முதுகில் ஆறாத இர ணமுள்ள எருதொன்றினை ஏரில் பூட்டி நிலத்தை உழுது கொண்டிருந்தான். எருது பாதை காரணமாய் ஏரை இழுக் காமல் நின்றது. இதைக் கண்ட உழவன் சினங்கொண்டு எருதைப் புடைத்துத் துன்புறுத்தினன். இக் கோரமான காட்சியைக் காணச் சகியாமல் சித்தார்த்தர் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டார். அவ்விடத்தை விட்டு மேலே செல்லச் செல்ல எளியாரை வலியார் வாட்டு வதே சாதாரண செயலாக இருக்கக் கண்டார். கண்டவர் மிகவும் மனம் வாடித் தளர்ந்து அரண்மனை சேர்ந்து தாம் வழியில் கண்டவைகளைக் குறித்து ஆழ்ந்து சிந்திக்க லானார்.

சித்தார்த்தர் இங்ஙனம் இருந்துகொண்டிருக்கையில் அவர்க்குப் பத்தொன்பதாவது பிராயம் நடக்க வாரம் பித்தது. அதைக் கண்ட சுத்தோதனர் அவர்க்குத் தம் மரபிலேயே தக்க இராஜ குமாரி ஒருத்தியைத் தேடி மணம் முடித்தார். அவள் பெயர் யசோதை. அவள் அழகிலும், நற்குண நற்செயல்களிலும், பதி பக்தியிலும்

சிறந்தவள். அவளுடன் சித்தார்த்தர் இல்லற தருமத்தை ஒழுங்கு பெற நடத்தினார். இங்ஙன மிருக்கையில் அவர்களுக்குக் காலக் கிரமத்தில் ஓராண்மகவு பிறந்தது. அம் மகவின் பெயர் ரகுலன் என்பதாகும்.

சுத்தோதனர் சித்தார்த்தரது உள்ளக் கருத்தைப் பல தடவைகளில் உணர்ந் திருந்ததால் அவர்க்குப் பிணி மூப்புச் சாக்காடு என்பவை தெரியாமல் இருக்கவேண்டு மென்று கருதி நல்ல மாதிரியான நந்தவனத்தின் மத்தியில் அழகிய தோர் மாளிகை கட்டுவித்தார். அம் மாளிகையில் வசிக்கும் பேற்றைப் பெற்றவர்களுக்கு அது தேவேந்திர லோகம்போ லிருந்தது. அப்பூங்காவின் வழியாய்க் கங்கையின் சிற்ருறு ஒன்று பாய்ந்தது. இத்தகைய மாளிகையில் வசித்த சித்தார்த்தருக்குப் பிணி மூப்புச் சாக்காடு என்பவைகளைப்பற்றி ஒன்றும் தெரியாமலிருந்தது ஓர் ஆச்சரியமல்ல.

இவ்வரண்மனையில் சித்தார்த்தர் கற்பிற் சிறந்த யசோதையுடன் பூவும் மணமும் போல இல்லறதருமத்தை இனிது நடத்திக்கொண்டு வந்தார். இப்படியிருக்கையில் ஒரு நாள் சித்தார்த்தர் நகரைச் சுற்றிப் பார்க்க எண்ணங் கொண்டார். பின்னர் தம் சாரதியாகிய சந்தகனை விளித்துத் தம் கருத்தை வெளியிட்டு இரதத்தைத் தயார் படுத்தக் கட்டளையிட்டார். இக் கட்டளையை யேற்ற சந்தகன் சித்தார்த்தருடைய உள்ளக் கருத்தை அரசருக்குத் தெரிவித்தனன். அதன் மேல் மன்னர் சித்தார்த்தரைத் தம்முடைய இல்லத்திற்கு அழைத்து

நல்ல சுபதினம் பார்த்துச் செல்லுதல் முறைமை என்று சொன்னார். தந்தையின் விருப்பத்துக்கு மாறாக யாதும் செய்தறியாத சித்தார்த்தர் இவ் விஷயத்தில் மாத்திரம் வேறு விதமாக நடப்பரோ ?

சித்தார்த்தர் தம்முடைய அரண்மனைக்குச் சென்ற பின் சுத்தோதனர் மந்திரி பிரதானி முதலானவர்களை வரவழைத்து இளவரசருடைய உள்ளக் கருத்தை வெளியிட்டு நகரை முறைப்படி அலங்கரிக்கும்படி கட்டளையிட்டார். இன்னும் இளவரசர் ஊர்வலம் வரும்போது அவர் கண்ணுக் கெதிரில் கூன் குருடு செவிடு முதலிய அங்கவீனர்களையும் நோயாளிகளையும் காட்டக் கூடாதென்றும் கட்டளையிட்டார். இக்கட்டளைகளைச் சிரமேற்கொண்ட மந்திரி பிரதானிகளும் அங்ஙனமே செய்துமுடித்தனர்.

இளவரசரும் தேரூர்ந்து நகரின் காட்சிகளைக் கண்டு களித்து வந்துகொண்டிருந்தனர். அங்ஙன மிருக்கையில் தேரானது ஒரு தெருவின் வழியாகச் சென்றது. அது காலை அத்தெருவின் ஒரு பக்கம் அமைந்திருந்த குடிசையில் வசித்துக்கொண்டிருந்த கிழவனொருவன் தெருவில் ஏற்பட்ட பேரொலியைக் கேட்டு வெளியில் வந்தனன். அவன் தலைமயிரெல்லாம் வெளுத்துச் சுவரினுக்குச் சுண்ணம்பு தீட்டியதுபோ லிருந்தது. கண்கள் குழி விழுந்து ஆழ்ந்துபோயிருந்தன. பற்களெல்லாம் உதிர்ந் திருந்த படியால் வாய் பொக்கையாய்ப் போயிருந்தது. இங்ஙனம் இருந்ததினால் அவன் சொன்ன சொற்களும் சரியாய் விளங்கவில்லை. கோலூன்றிக் கொண்டும் அவனால் செவ்வையாய் நடக்கக்கூடவில்லை. இத்துடன் முதுகும் கூன்

பட்டிருந்தது. வயோதிகத்தின் காரணமாயும் அன்ன ஆகாராதிகள் இன்மை காரணமாயும் அக்கிழவனுடைய கண்கள் பஞ்சடைந்திருந்தன. அதனால் அவன் தன் எதிரில் வருவார் போவார்களைச் சரிவரப் பார்க்கக்கூடவில்லை. சதை சிறிதுமின்றி உடம்பெல்லாம் என்பு வரிசைகளே காணப்பட்டன. இத்தகைய நிலையினைக் கொண்ட அவ் வயோதிகனிடம் கருணை பாராட்டாதவருண்டோ ?

பிறருடைய கருணைக்குப் பாத்திரனாகிய அக்கிழவன், கையில் கோலூன்றிக் கூன் முதுகுடன் தளர்ந்து தள்ளாடி ஜனங்கள் நிற்குமிடம் போந்து தனக்கு ஏதாவது உதவி செய்யவேண்டுமென்று குறையிரந்து கேட்டான். அவனுக்கு க்ஷயரோகமும் பிடித்திருந்தமையால் அவன் அடிக்கடி மார்பினைத் தடவி இருமிக்கொண்டு பிச்சைகேட்டான். அதைக் கண்ட ஜனங்கள் அரசருடைய கட்டளைக்கு அஞ்சி அவன்பால் வெறுப்புக்கொண்டவர்களாகி அவனை நோக்கி, 'ஏ அறிவிலி! என் வெளியே வந்தாய்? அரசருடைய கட்டளையை அறியாய்போலும். உடனே உன்னுடைய குடிசைக்குள் செல். இல்லையேல் நீ தண்டனைக்கு ஆளாவது திண்ணம்' என்று கடுகடுத்துச் சொன்னார்கள். அவர்கள் இங்ஙனம் கூறியது இளவரசருடைய காதுக்கு எங்ஙனமோ எட்டியது. உடனே இளவரசர் சாரதியை விளித்துச் சமாசாரத்தைத் தமக்கு ஆதியோடந்தமாய்த் தெரிவிக்கும்படியாய்க் கட்டளையிட்டார். அதன்மேல் சாரதி அரசிளங்குமரனை நோக்கி, 'ஏ அரசிளங்குமரனே! இவன் ஒரு வயது முதிர்ந்த கிழவன். இவன் தளிர்த்துப் பூத்துக் காய்த்துப் பழுத்துப் பட்டுப்போன மரத்துக்கு ஒப்பாவான். இவன்

வாலிபத்தில் மன்மதனும் நாணத்தக்க அழகினனாயிருந் தான். இப்போது வயது முதிர்ந்ததன் காரணமாய் இவன் நரைத்துத் தளர்ந்து தள்ளாடிப் போயிருக்கிறான். இவனை அத்துடன் க்ஷயரோகம் என்ற கொடிய நோயும் பிடித் தாட்டுகின்றது. இக் கிழவனுடைய நிலைக்குத் தான் மூப்பு என்று பெயர். இதைக் குறித்துத் தாங்கள் கவலைப் படவேண்டியதில்லை' என்று கூறினன்.

சாரதி இங்ஙனம் கூறி முடித்ததைக் கேட்ட அரசி ளங்குமரர் அச்சாரதியை நோக்கி, 'ஏ சாரதியே! நீ இது காலை கூறிய அனைத்தும் இவனை அன்றி மற்றவர்களையும் பிடிக்குமோ?' என்றார். அதன்மேல் சாரதி 'அறிவாற்றல் களில் சிறந்த அரசிளங்குமரா! இக் கிழவன் அடைந் துள்ள ஆயுளைப் பெறுபவர்கள் அநேகமாய் இக் கதிக்கு ஆளாக வேண்டியவர்களே. பிணி மூப்புச் சாக்காடு என் பவை இவ்வுலகில் ஒருவரையும் விடுவதில்லை. அவரவர்கள் இவ்வுலகில் இருக்குமளவும் இன்ப துன்பங்களை அநு பவித்துச் செல்லுதல் வேண்டும். இன்ப துன்பங்களி னின்று மீண்டவர்கள் இப் பூவுலகில் ஒருவரும் இலர். "தாம் தாம் முன் செய்தவினை தாமே அநுபவிப்பர் பூந்தா மரையோன் பொறி வழியே" என்பதும் கவனிக்கத் தக்கது' என்று புகன்றனன்.

இவ்வார்த்தைகளைக் கேட்ட சித்தார்த்தர் மன முடைந்து இரதத்தை அரண்மனைக்குத் திருப்பும்படி சாரதிக்குக் கட்டளையிட்டார். சாரதியும் அங்ஙனமே செய்யச் சித்தார்த்தர் அரண்மனை போய்ச் சேர்ந்தார். பின்னர் தாம் வழியில் கண்டவைகளையும் கேட்டவைகளை

யும் குறித்து ஆழ்ந்த சிந்தனையிலிறங்கி ஊணும் உறக்கமுமின்றி வருந்துவாராயினர்.

இங்ஙனம் நாட் பல சென்றன. ஒரு நாள் தேவதூதனொருவன் சித்தார்த்தருடைய கனவில் தோன்றி, 'தள்ளாமையை ஒழிப்பது நினது கடன்; தள்ளாமை வந்தடைந்த காலத்தும் வருத்தந் தோன்றாது இன்ப மநுபவிப்பதற்குரிய காரியங்களைச் செய்தலும் உன்னுடைய கடன்' என்று கூறி மறைந்தனன். அதன் மேல் சித்தார்த்தருக்கு உலகத்தை உள்ளது உள்ளபடியே காணவேண்டுமென்ற அவா பிறந்தது. பின்னர் அவர் தன் தகப்பனாரை அணுகித் தம் கருத்தை வெளியிட்டுத் தம் கருத்துக்கு மாறாக நடக்காதிருக்கும்படி கேட்டுக்கொண்டார். இங்ஙனம் சித்தார்த்தர் கேட்டுக்கொள்ளவே சுத்தோதனரும் அவர் உலகத்தை உள்ளது உள்ளபடியே அறிவதற்கான ஏற்பாடுகளைச் செய்தார்.

பின்னர் சித்தார்த்தரும் அவருடைய சாரதியாகிய சந்தகனும் மாறுவேடம் பூண்டு நகர் முழுமையும் சுற்றி வந்தார்கள். இப்படி வருகையில் குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டவனொருவன் மிகவும் வருந்தி 'எனக்குதவி செய்வார் ஒருவரு மில்லையா' என்று கூச்சலிட்டுக்கொண்டிருந்தான். அவனுடைய கூச்சலுக்குச் செவிசாய்ப்பவர் ஒருவரும் அவ்விடத்தில் இல்லை. இதைக் கண்ட சித்தார்த்தர் சாரதியை விஷயம் என்னவென்று கேட்டார். அதன்மேல் சாரதி அவரை நோக்கி, 'இளவரசே! இவன் மிகவும் கொடிய வியாதியாகிய குஷ்டரோகத்தினால் பீடிக்கப் பட்டுள்ளான். இந்நோயானது தொட்டவர்களையும் ஒட்டிக் கொள்ளும்.

அதனால்தான் இவனுக்கு உதவிசெய்ய ஒருவரும் முன்வரவில்லை' என்றான். அதற்குப் பின்னரும் இளவரசர் சாரதியை நோக்கி, 'ஏ சாரதியே! இவ்வுலகில் இவன் மாத்திரந்தானா இத் தொழுநோயினால் கஷ்டமுறுகிறான்? இன்னும் பலரும் கஷ்டமுறுகின்றனரோ?' என்று கேட்க, சாரதி 'இவ்வுலகில் இவனைப்போல் கஷ்ட முறுகின்றவர்கள் பலர் இருக்கின்றனர். ஒருவன் அல்லது ஒருத்திக்கு நோய் எப்போதுதான் வருமென்று திட்டமாய்ச் சொல்ல முடியாது. இந்நிமிஷத்தில் சௌக்கியமாயிருப்பவன் மறுநிமிஷத்தில் கஷ்டம் சகிக்க முடியாத நோயினால் வருத்தமுறுவான். நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் திடீரெனக் குணமடைந்து விடுவார்கள். நோய் இவ்வுலகில் ஒருவரைப் பற்றும் ஒருவரைப் பற்றாது என்ற நியதி கிடையாது. அது யாரை வேண்டுமானாலும் பற்றிக்கொள்ளும் தன்மையுடையது. சிலர் வயதான பின் இறக்கின்றனர்; இன்னுஞ் சிலர் சிறுவயதிலேயே இறக்கின்றனர்; பின்னுஞ் சிலர் குழந்தையா யிருக்கும்போதே இறக்கின்றனர்; மற்றுஞ் சிலர் கருப்பப்பையி லிருக்கும்போதே இறக்கின்றனர். ஆகையால் இவ்வுலக வாழ்க்கையானது நிலைபற்றது' என்றனன்.

அதன்மேல் இளவரசர் பின்னரும் சாரதியை நோக்கி, 'இறத்தல் என்பதென்ன? அதை எனக்குக் காட்டு' என்று கேட்டுக் கொண்டார். அச்சந்தர்ப்பத்தில் தெய்வாதீனமாய்ச் சுடலைக்குச் சிலர் பிணமொன்றை எடுத்துச் சென்றுகொண்டிருந்தார்கள். அதைச் சாரதி சித்தார்த்தருக்குக் காட்டி, 'இதுதான் உயிரிழந்த உடல். இதைத்தான்

பிணம் என்று சொல்லுகிறோம். இதைச் சுடலையில் வைத்துத் தீமூட்டி எரித்துவிடுவார்கள். உலகிலுள்ள அனைவரும் ஒரு நாளைக்கு இறக்க வேண்டியவர்களே யாவர்' என்றான். அதன்மேல் சித்தார்த்தர் மிகவும் மனம் வருந்தி இத்துயரத்தினின்று நீங்குதற்குரிய வழியைக் காணுபவரைப் போல் ஆகாயத்தையும் பூமியையும் பன்முறை நோக்கினார். பின்னர் ஒருவாறு மனந்தெளிந்து சாரதியை நோக்கி இரதத்தை அரண்மனைக்கு ஓட்டும்படியாய்க் கட்டளையிட்டார். சாரதியும் அங்ஙனமே செய்து முடித்தான்.

அரண்மனையைச் சேர்ந்த சித்தார்த்தர் தாம் வழியில் கண்டவைகளையும் கேட்டவைகளையும் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தார். அவர் அன்ன ஆகாராதிகள் சரியாய் ஏற்றுக்கொள்ளவில்லை. பலவிதமான கஷ்டங்களை அநுபவித்து வரும் ஜனங்களை அக்கஷ்டங்களினின்றும் நீக்க வழி கிடையாதோ வென்று அவர் சதா சிந்திக்கலாயினர். இங்ஙனம் சிந்தித்துக்கொண்டே காலங் கழித்து இருக்கையில் ஒரு நாள் சித்தார்த்தர் ஒரு கனவு கண்டார். அக்கனவில் ஒரு தேவதூதன் அவருடைய கண்ணுக்கெதிரில் தோன்றி அவரை நோக்கி, 'உன் எதிரில் இரண்டு விஷயங்கள் இருக்கின்றன: ஒன்று, வெற்றிவீரனென்று பேர் படைத்து உலகையெல்லாம் ஒரு குடைகீழ்க் கட்டியாள்வது; இன்னொன்று, இராஜ போகங்களையெல்லாம் துறந்து சந்நியாசி வேடம் பூண்டு பிட்சை எடுத்துண்டு ஜனங்களுடைய கஷ்டங்களைத் தன்னலங் கருதாமல் தீர்ப்பது. காலமோ நெருங்கிக் கொண்டேயிருக்கின்றது. தாமதம் செய்ய வேண்டாம். இரண்டில் ஒன்றை உடனே செய்'

என்று கூறினன். இதே மாதிரி தேவதூதன் பின்னரும் இரண்டு சமயங்களில் சித்தார்த்தருடைய கனவில் தோன்றி மேற்கூறிய விதமே சொன்னன்.

இங்ஙனம் தேவதூதன் மூன்றுமுறை அவருக்குத் தென்படவே, அவர் இன்னும் காலங்கழித்துக்கொண்டு போவது சரியல்லவென்று கருதி, ஒரு நாள் நள்ளிரவில் படுக்கையை விட்டெழுந்து தாம் மேற்கொள்ள வேண்டியவைகளைப் பற்றிச் சிந்திக்கலாயினர். கடைசியில் இராஜ போகங்களைத் துறந்து சந்நியாசி வேடம் பூண்டு ஜனங்களுக்கு நன்மை செய்வதே முறையான தென்று தீர்மானித்தார். உடனே தம் சாரதியை விளித்து வேகமாய் ஓடக் கூடிய நல்ல குதிரை யொன்றினைக் கொண்டுவரும்படியாய்க் கட்டளையிட்டார். சாரதியும் குதிரையைக் கொண்டு தர, சித்தார்த்தர் அதன்மேல் ஏறிக்கொண்டு தம் வழியை நோக்கிச் சென்றார். சாரதியும் சித்தார்த்தரைப் பின் தொடர்ந்தான். நெடுந்தூரம் போனபின் சித்தார்த்தர் குதிரையை விட்டுக் கீழே இறங்கித் தம் கருத்தை வெளியிட்டு அதைத் தம் தகப்பனுருக்கும் மனைவி மக்களுக்கும் தெரிவிக்கும்படி கட்டளையிட்டார். அக்கட்டளையை யேற்ற சாரதி நகரடைந்து விஷயங்களை அரசனுக்கு ஆதியோடந்தமாய் எடுத்துக் கூறினன்.

மனைவி மக்களையும் பெற்றோர்களையும் துறந்து காட்டையடைந்த சித்தார்த்தர் காஷாயம் பூண்டு பிட்சை ஏற்றுண்டு ஜனங்களுக்கு நன்மை செய்யும் மார்க்கம் யாது என்பதைக் குறித்துச் சதா சிந்தித்துக்கொண்டே யிருந்தார். காட்டில் தாம் கண்ட சந்நியாசிகளிடம் ஜனங்களுடைய கஷ்டங்

களை நீக்குவதற்குரிய வழி யாதென்று கேட்டுவந்தார். அவர்கள் அனைவரும் உடலை வருத்தித் தவம் செய்தலே வழியாகுமென்று கூறினார்கள். அவர்களுடைய கூற்று சித்தார்த்தருக்குப் பிடிக்கவில்லை. அதன்மேல் அவர் தமக்குத் தெரிந்தவைகளை ஜனங்களுக்கு உபதேசித்து அதன் மூலமாய் அவர்களை நல்வழிப்படுத்த வெண்ணினார். இங்ஙனம் செய்வதுதான் துறவு என்று அவர்க்குப் புலப்பட்டது.

இவ்வுண்மையை மேற்கொண்டு சித்தார்த்தர் இராஜக்கிரகம் என்ற அரண்யத்தில் வசித்துக்கொண் டிருந்தார். அப்படி யிருக்கையில் ஒரு நாள் நண்பகலில் சில இடையர்கள் ஓர் ஆட்டு மந்தையை ஓட்டிக் கொண்டு செல்வதையும், அந்த மந்தையிலிருந்த ஆட்டுக்குட்டியொன்று காலில் ஏற்பட்ட காயம் காரணமாய் நடக்கக்கூடாமல் கஷ்டப்படுவதையும் அவர் கண்டு மனம் வருந்தினார். கடைசியில் அவ்விடையர்களை நோக்கி, 'மாலையில் என் இவ்வாட்டு மந்தையை ஓட்டிக்கொண்டு போகக்கூடாது? அப்போது குளிர்ச்சியா யிருக்கும்; உங்களுக்கும் இவ்வாடுகளுக்கும் கஷ்டம் தோன்றாது' என்று கூறினார்: அவருடைய வார்த்தைகளைக் கேட்ட அவ்விடையர்கள் அவரை நோக்கி, 'ஐயனே, இந்நாட்டை யாளும் பிம்பிசார மகாராஜா யாகமொன்றை நடத்தப் போகிறார். அதற்காக ஆடுகள் உடனே வேண்டுமென்று கட்டளையிட்டார். ஆகையால் தான் நாங்கள் இந் நண்பகலில் இவ்வாடுகளை ஓட்டிச் செல்லுகிறோம்' என்றார்கள். அதைக் கேட்ட சித்தார்த்தர் 'அப்படியானால் நானும் வருகிறேன்' என்று கூறி அவர்களுடன் புறப்பட்டுப் பிம்பிசாரனுடைய அரண்மனை சேர்ந்தார்.

பிற உயிர்களுக்கு நன்மை செய்தலையே தம் மதமாகக் கொண்ட சித்தார்த்தர் காயம் பட்டிருந்த ஆட்டுக் குட்டியைத் தம் முதுகின்மேல் வழிமுழுதுந் தூக்கிச் சென்றது ஓர் ஆச்சரியமல்ல.

நிற்க, அரண்மனையில் யாகக்குழி வெட்டப்பட்டு ஓமம் மந்திரம் முதலிய கிரியைகள் நடைபெற்றுக்கொண்டிருந்தன. பலிபீடத்தில் கயிற்றினல் கட்டப்பட்ட செம்மறியாடொன்று கிடத்தப்பட்டிருந்தது. அதை வெட்டுவதற்காக ஒரு பிராமணர் கையில் ஓங்கிய வாளுடன் நின்றுகொண்டிருந்தார். இதைக் கண்ட சித்தார்த்தர் அவ்வந்தணர் அருகில் சென்று அவர் கையிலிருந்த வாளைப் பிடுங்கி அப்பால் போட்டுவிட்டுக் கட்டப்பட்டிருந்த ஆட்டையும் அவிழ்த்து விட்டுவிட்டார். இச்செயலைக் கண்ட ஜனங்கள் அனைவரும் ஸ்தம்பித்துப் போய்விட்டார்கள். பின்னர் சித்தார்த்தர் தமக்குப் பேச உத்திரவு அளிக்கவேண்டுமென்று அரசனைக் கேட்டுக்கொள்ள, அரசனும் அங்ஙனமே உத்தரவளித்தான். அதன்மேல் சித்தார்த்தர் அங்குக் கூடியிருந்தவர்களை நோக்கி உயிர்க்கொலை மிக பாபமானதென்றும், எல்லா உயிர்களும் கடவுளால் படைக்கப்பட்டவை யென்றும், அவைகளைக் கொல்வது தகாத காரியமென்றும், உயிரை வாங்கி விடுதல் சுலபமென்றும், ஆனல் அதைத் திருப்பிக்கொடுப்பது ஒருவராலும் முடியாத காரியமென்றும், உயிர்களைக் கொன்று யாகம் முதலானவை செய்தலினல் மோட்சம் கிடையாதென்றும், பிற உயிர்களைத் தன்னுயிர்போல பாவித்தலே மோட்ச மார்க்கத்துக்குரிய மார்க்க மென்றும் கூறி முடித்தார்.

இத்தகைய உபதேசத்தைக் கேட்ட மன்னனும் மற்று

முள்ளவர்களும் தாங்கள் அறியாமல் செய்த அபராதங்களுக்காகத் தங்களை மன்னிக்கும்படி சித்தார்த்தருடைய காலில் வீழ்ந்து கேட்டுக்கொண்டார்கள். அதன்மேல் சித்தார்த்தரும் அவர்களுக்கு வேண்டிய நற்புத்திகளைப் புகட்டினர். பிம்பிசார மகாராஜன் எவ்வகைக் காரணத்தைக் கொண்டும் தம் இராஜ்யத்தில் உயிர்களை வதைக்கக் கூடாதென்றும், அங்ஙனம் யாராவது மீறி நடந்தால் தக்க தண்டனைக்கு உள்ளாவார்களென்றும் பறையறைவித்தான். அன்றுமுதல் கடவுளர்களுக்கு நெய், பால், தயிர் முதலியவைகளும், காய் கனி கிழங்குகளும் நிவேதிக்கப்பட்டு வந்தன.

நமது கதாநாயகராகிய சித்தார்த்தர் பிம்பிசாரனுடைய இராஜ்யத்தில் சின்னாள் தங்கியிருந்து தம் கோட்பாடுகளை ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லிக்கொண் டிருந்தார். பின்னர் அவர் அந்த இராஜ்யத்தை விட்டு எப்போதும் போல் கானகம் சென்று கங்கைக்கரை யோரமாய்ச் சுற்றித் திரிந்துகொண் டிருந்தார். இப்படியிருக்குங் காலங்களில் அவர் அநேக நாள்வரை அன்ன ஆகாராதிகள் கொள்ளாமல் தம்மையே மறந்து இருத்தலுமுண்டு. இப்படியிருக்குஞ் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் அவர் களைப்புண்டு கீழே விழுந்துவிட்டார். இதனைக் கண்ட ஆயச் சிறுவனொருவன் இவரருகில் ஆடொன்றினை நடத்திக்கொண்டுவந்து இவருடைய வாயில் பால் விழும்படியாய் அவ்வாட்டினைக் கறந்தனன். அதன்காரணமாய்க் களைப்பு நீங்கி எழுந்த சித்தார்த்தர் அந்தச் சிறுவனை நோக்கிப் பருக நீர் வேண்டுமென்று கேட்டார். அவன் தான் கீழ்ஜாதியைச் சேர்ந்தவனென்றும், தன்னுடைய பாத்திரத்திலிருந்து நீரைக் கொடுப்பது ஜாதி

தர்மத்தை மீறி நடப்பதாகுமென்றும் கூறினன். அதன்மேல் சித்தார்த்தர் கடவுளுக்கு ஜாதிமதபேதங்கள் இல்லையென்றும், கடவுள் முன்னிலையில் அனைவரும் சரி சமானமானவர்கள் என்றும் கூறினர். இன்னும் வெளிவேடத்தால் யாதும் பயனில்லை யென்றும், மனம் களங்கமற்று இருக்க வேண்டுமென்றும் அவர் கூறினர். அவருடைய வார்த்தைகளைக் கேட்ட அவ்விடைச்சிறுவனும் நல்லுணர்வு பெற்றனன்.

நிற்க, ஒரு கிராமத்தில் செல்வவான் ஒருவன் இருந்தான். அவன் ஏழைகளுக்குச் சகாயம் செய்யும் புண்ணியவான். அவனுக்கு ஒரு மனைவி இருந்தாள். அவள் பெயர் சுசாதை. அவள் கற்புக்கரசி. எல்லாவிதச் செல்வங்களிருந்த போதிலும் அவர்களுக்குப் பிள்ளை இல்லாக்குறை மாத்திரம் இருந்தது. அதற்காகச் சுசாதை கடவுள்களையெல்லாம் வேண்டிக்கொண்டு பூசைகள் நடத்தி வந்தாள். இறுதியில், தனக்குப் பிள்ளை யுண்டானல் வனதேவதைக்குப் பூசை போடுவதாகப் பிரார்த்தித்துக் கொண்டாள். இங்ஙனம் பிரார்த்தித்துக் கொண்ட சின்னட்களுக்குப்பின் அவள் கர்ப்பவதி யானள். காலக்கிரமத்தில் ஓர் ஆண் குழந்தையைப் பெற்றெடுத்தாள். அக் குழந்தையை நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தாள். இப்படி வளர்த்து வருகையில் தான் வன தேவதைக்குப் பூசை போடுவதாகச் செய்த பிரார்த்தனை அவளுடைய ஞாபகத்துக்கு வந்தது. உடனே அவள் தன் தாதியைக் காட்டுக்கனுப்பி அவ்விடத்தைச் சுத்தம் செய்து மெழுகிக் கோலமிட்டு வரும்படிச் சொன்னள். எஜமானியினுடைய கட்டளையை யேற்ற தாதியும் காட்டுக்குச் சென்று சித்தார்த்தர் உட்

கார்ந்திருந்த மரத்தடியை யடைந்தாள். அங்கே அவர் உட்கார்ந்திருந்ததைக் கண்டு அவர்தாம் வனதேவதை என்று தனக்குள் தீர்மானித்துக்கொண்டு, செய்ய வேண்டியவைகளையெல்லாம் விரைவில் செய்து முடித்து வீடு சேர்ந்தாள். சேர்ந்தவள் தன் எஜமானியை நோக்கிக் கும்பிடப்போன தெய்வம் எதிரே வந்ததைப்போல் வனதேவதை பூசையை ஏற்றுக் கொள்வதற்காக மரத்தடியில் உட்கார்ந்துகொண்டிருப்பதாகக் கூறினாள். அவள் கூற்றைக் கேட்ட எஜமானியும் தாம்பாளத்தில் பால் பழம் முதலானவைகளை எடுத்துச் சென்று வன தேவதைக்குப் படைத்துப் பின்னர் அதை ஊட்ட ஆரம்பித்தாள். பல நாள் ஆகாரங் கொள்ளாமல் இருந்த சித்தார்த்தர், உண்டபின் விஷயம் யாதென்று தெரிந்து கொண்டு, அவ்வம்மையை நோக்கித் தாம் வன தேவதையல்லவென்றும், உண்மையை நாடித் திரியும் ஓர் ஏழையென்றும், தம்மிடத்தில் ஒரு மகத்துவமும் இல்லையென்றும் கூறினார். இதைக் கேட்ட அம்மாதரசி சின்னேரம் மௌனஞ் சாதித்திருந்தாள். சித்தார்த்தர் குழந்தையைத் தம் அருகில் கொண்டுவரும்படி அம்மாதரசியை வேண்டிக் கொள்ள, அவளும் அங்ஙனமே கொண்டு வந்தாள். சித்தார்த்தர் அக்குழந்தையை ஆசீர்வதித்தார். பின்னர் அவர் அப் பெண்ணை நோக்கி, 'அம்மையே, நீ சந்தோஷமாய் இருப்பதற்குக் காரணம் என்னை?' என்று கேட்டார். அதற்கு அம்மாதரசி அவரை நோக்கி, 'ஐயா, எனக்கு வேண்டியனவெல்லாம் என் உள்ளத்திடையே உள்ளன. என் கடமையை யான் சரிவரச் செய்வேனாயின் அதுவே இறைவனுக்குப் பிரீதியாகும். "நன்மை விதைத்தால் நன்மை விளை

யும்; தீமை விளைத்தால் தீமை விளையும்'' என்பதனை யான் அறிந்திருக்கிறேன். வாழ்வை எங்ஙனம் போற்றுகிறேனே அங்ஙனமே சாவையும் போற்றுகிறேன். நான் கூறிய இவை யெல்லாம் சத்தியமே தவிர வேறல்ல. இக்காரணங்களால்தான் யான் சந்தோஷமாயிருக்கிறேன்' என்று கூறி முடித்தனள். இதைக் கேட்ட சித்தார்த்தர், புத்தி தெளிவடைந்தவராக அவ்விடத்தினின்றும் புறப்பட்டு, 'போதி' என்னும் விருக்ஷத்தின் கீழ் வந்து உட்கார்ந்து கொண்டு, அம்மா நரசி கூறியவைகளை ஆழ்ந்து சிந்தித்து அதன்படி ஒழுகுவதைத் தவிர வேறு மோட்ச மார்க்க மில்லையென்ற முடிவுக்கு வந்தார். இதுவரை கடந்த ஏழு வருடங்களாய்த் தாம் தேகத்தை வருத்தியதனால் பயன் ஒன்றும் கிடையாதென்று கண்டு கொண்டார். மேலும், தாம் ஏழு வருடகாலமாகத் தெரிந்துகொள்ள முயன்ற ரகசியங்களைக் கண்டு கொண்டதாகவும் அவர் அறிந்தார். அது முதற்கொண்டு அவர் தமக்குப் 'புத்தர்' என்று பெயர் சூட்டிக்கொண்டார். புத்தர் என்பதற்கு அறிவு தெளிவடைந்தவர் என்பது பொருளாம்.

இனிச் சும்மாயிருக்கக் கூடாதென்று கருதிய புத்தர், தம் கொள்கைகளைப் பலருக்கும் சொல்ல முற்பட்டு, ஆங்காங்குப் பிரசங்கங்கள் செய்யலானார். பின்னர்த் தம்முடைய தகப்பனாரின் பதிக்குப் போந்து அவ்விடத்திலும் தம் கொள்கைகளைப் பிரசங்கித்தார். அக்கொள்கைகளைச் சுத்தோதனர், மாயாதேவி, யசோதை, நகுலன் முதலானவர்கள் கடைப்பிடித் தொழுக வாரம்பித்து அவர்க்குச் சீடர்களானார்கள். இன்னும் மற்றவர்களும் இவருடைய கொள்கை

களைத் தழுவினர்கள். புத்தரால் ஏற்படுத்தப்பட்டமை யால் இதற்குப் 'பௌத்த சமயம்' என்ற பேர் வந்தது. தம் ஆயுள் காலத்திலேயே புத்தர் தம் சமயத்தை இந்தியாவின் பல பாகங்களிலும் பரவச்செய்தார்.

புத்தர் முக்கியமாக ஜனங்களுக்கு எடுத்துரைத்தவை இரண்டு. அவைகளில் ஒன்று ஆசையை அறுத்தல்; இன் னொன்று ஜீவவதை செய்யா திருத்தல். இவ்விரண்டையும் மேற்கொண்டவர்கள் மோட்சத்தை யடைவார்கள் என் பதில் சந்தேகமில்லை. புத்தருடைய நல்லுபதேசங்களில் சில வருமாறு:—மனிதன் ஒருவனே பரிசுத்தமானவன். அவன் அருளிற்கும் அன்பிற்கும் இருப்பிடமானவன். பிறர் நம்மி டம் எப்படி நடந்துகொள்ள வேண்டுமென்று விரும்பு கிறோமே அதைப்போல் நாமும் அவர்களிடத்தில் நடந்து கொள்ளவேண்டும். மானிட ஜன்மம் எடுத்ததன் பயன் பிற ருக்கு உதவி செய்வதற்கேயாம். நம்முடைய பூர்வ ஜன்ம நற்பயன் காரணமாய் இந்த ஜன்மத்தில் நமக்குச் செல்வம் கிடைத்திருக்கிறது. அதைப் பிறருடைய கஷ்டங்களை நீக்குவதற்காக உபயோகப்படுத்த வேண்டும். இறந்து போகும்போது நாம் எடுத்துச் செல்வ தொன்றுமில்லை. இதை உணர்ந்து அதன்படி நடந்துகொள்ள வேண்டும். நமக்கு ஒருவன் எவ்வளவு கெடுதல் செய்தாலும் அதைப் பொறுத்துக் கொள்ளவேண்டும்; அதற்காக வருந்தி யவனைத் திட்டவும் கூடாது. சத்தியத்தை மேற்கொண்டொழுகல் உத்தமம். தீமை செய்கிறவர்களுக்கும் நன்மையே செய்ய வேண்டும். பிராணிகளைக் காப்பாற்றுவதே பெரும் புண்ணி யம். அற்பப் பிராணியாயினும் அதற்குத் தீங்கிழைக்கக்

கூடாது. நாம் மனோவாக்குக் காயங்களால் தூயவராயிருக்க வேண்டும். ஐம்பொறிகளையும் அடக்கி ஆளவேண்டும். அங்ஙனம் ஆளுபவனே வெற்றிவீரன். கனவிலும் பொய்யை எண்ணலாகாது.

புத்தர் தம்முடைய கொள்கைகளை ஜனங்களுக்குச் சதா உபதேசித்துக் கொண்டுவந்து கடைசியில் தம்முடைய எண்பதாவது வயதில் இறைவனுடைய திருவடி நிழலை யடைந்தார். புத்தர் தம் சீடர்களுக்கும் மற்றுமுள்ளவர்களுக்கும் அடிக்கடி இடித்திடித்துக் கூறிவந்தது மனிதன் தன்னுடைய செயல்களுக்குத் தக்கபடி நன்மை தீமைகளை அடைந்து கொண்டு வருகிறான் என்பதாம்.

சீனா, ஜப்பான், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலுள்ளவர்களில் பெரும்பாலோர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்களே யாவர். உலகத்தின் ஜனத்தொகையில் ஏறக்குறைய பாதிபேர் பௌத்த சமயத்தைச் சேர்ந்தவர்களாவர்.

உ. பத்மினி

இந்துமகா சமுத்திரத்திற்கே ஒரு திலகமாய் விளங்கு வது இலங்கைத் தீவாகும். இத்தீவில் தேவர்களையும் தனக்கு அடிமையாக்கிக் கொண்டு இராவணன் என்னும் அசுரசன் ஒருவன் இராஜ்யபாரம் செய்து வந்தான் என் பதையும், அவ்வசுரன் ஸ்ரீராமரின் தருமபத்தினியாகிய சீதை யைக் கொண்டுவந்து அசோக வனத்தில் சிறை வைத்தனன் என்பதையும் நீங்களனைவரும் அறிவீர்கள்.

இத்தகைய சரித்திரத்தினைத் தன்னகத்துக் கொண்ட இவ்விலங்கைத் தீவைச் சுமார் அறுநூறு ஆண்டுகளுக்கு முன் இரஜ புத்திர வமிசத்திலுதித்த ஒரு மன்னவன் பரி பாலித்து வந்தான். அவனுடைய மனைவி மிகவும் நல்லவள். இவர்கள் இருவரும் செய்த அருந்தவத்தின் பயனாய் இவர் களுக்கு ஒரு பெண் மகவு பிறந்தது. இம்மகவு ரதியும் நாணத்தக்க அழகினைக்கொண் டிலங்கியது. இக்குழந்தை யின் பெயர் பத்மினி என்பதாகும். இதனைப் பெற்றோர் கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்த்து வந்தார்கள். இக்குழந்தையின் தாயார் அதற்கு அடிக்கடிச் சீதையின் கதையை எடுத்துச் சொல்வது வழக்கம். பெண்ணும் அதைக் கவனமாய்க் கேட்டுச் சீதை யின் தைரியத்தையும் கற்பையும் மெச்சிப் பாராட்டு வாள். நாளா வட்டத்தில் பத்மினி தக்க பருவத்தை யடைந் தனள். அதைக் கண்ட பெற்றோர்கள் அவளுக்குத் தக்க

வரன் எங்கிருக்கிறன் என்பதைக் குறித்துச் சதா சிந்தித்துக்கொண் டிருந்தார்கள். 'பெண்ணுதவும் சாலைப் பிதா விரும்பும் வித்தை' என்பதற் கேற்பப் பத்மினியின் தகப்பனுர் தனக்கு வாய்க்கப் போகும் மருமகன் கல்வி கேள்விகளிலும் வீரதீர பராக்கிரமங்களிலும் நிகரற்று விளங்க வேண்டுமென்று எண்ணினுர். தாயோ தன் பெண்ணுக்கு வரும் புருஷன் செல்வச் சீமானுயிருக்க வேண்டுமென்று கருதினுள்.

இப்படி யிருக்கையில் இரஜபுதனத்திலுள்ள சித்தூரைப் பீம்சிங் என்ற அரசர் ஆண்டு வந்தார். அவர் மகா சுத்தவீரர்; மானத்தையே பெரிதாகக் கொண்டவர்; எதிரிக்குப் புறங்காட்டி ஓடாத நேர்மையாளர். ஆனுல் இவர்க்குக் கலியாணம் ஆகாமல் இருந்தது. தகுந்த வாழ்க்கைத் துணைவியை எதிர்நோக்கி யிருந்தார்.

பீம்சிங்கின் குணுதிசயங்களைக் கேள்வியுற்றுப் பத்மினியின் தகப்பன் பீம்சிங்கையே மருமகனுகக் கொள்ளத் தீர்மானித்தான். கடைசியில் இவர்க்கும் பத்மினிக்கும் நல்ல சுபமுகூர்த்தத்தில் சிறப்பாக விவாகம் நடைபெற்றது. பத்மினியும் பீம்சிங்கும் ஒருவரை யொருவர் ஆதியோடந்தமாக நேசித்துப் பூவும் மணமும் போல் வாழ்ந்து இல்லற தருமத்தை ஒழுங்காக அநுஷ்டித்து வந்தார்கள்.

அப்படியிருக்கையில் தில்லியில் அரசாண்டுகொண்டிருந்த அலாவுதீன் என்னும் அரசன் இந்தியா முழுமையையும் ஜெயித்து ஒரு குடைக்கீழ் ஆள வேண்டுமென்று எண்ணினுன். அதன்படியே அவன் பக்கத்திலுள்ள நாடுகளை யெல்லாம் ஜெயித்துத் தன் நாட்டுடன் சேர்த்துக் கொண்டான்.

இங்ஙனம் செய்தவன் சித்தூரின் மீதும் படையெடுத்து அதையும் தன் நாட்டுடன் சேர்த்துக்கொள்ள எண்ணி அந் நாட்டின் மீது படையெடுத்தான். படையெடுத்து வந்தவன் பத்மினி அழகைக் கேள்வியுற்று அவளை எங்ஙனமாகிலும் தனக்கு மனவியாக்கிக்கொள்ள வேண்டுமென்று எண்ணி உக்கிரமாய்ச் சண்டை செய்தான். இரஜபுத்திரர்கள் சிறந்த வீரர்கள் : மானத்தைப் பெரிதாகக் கொண்டுள்ளவர் கள். ஆகவே அலாவுதீனோடு அவர்கள் வீராவேசத்துடன் சண்டை போட்டார்கள். அலாவுதீனும் சளைக்காமல் ஒரே பிடிவாதத்துடனிருந்து சண்டை செய்தான். இரண்டு பக் கத்திலும் சண்டை பலமாக நடந்தது. சண்டைபலமாயிருந் ததினால் இருதரத்தார்க்கும் அதிகமான நஷ்டம் ஏற்பட் டது. எவ்வளவு உக்கிரமாய்ச் சண்டை செய்தும் அலாவு தீனால் சித்தூரை ஜெயிக்கக் கூடவில்லை.

இதைக் கண்ட அலாவுதீன் பத்மினியைத் தனக்கு மனை வியாகக் கொடுத்துவிட்டால் சிததூரைத் தாக்காமல் விட்டுச் சென்றுவிடுவதாகக் கூறினான். உயிரை இழக்கவேண்டினும் இழந்துமானத்தை ஒருபோதும் இழக்க மனந்துணியாதவர் களாகிய இரஜபுத்திரர்கள் தங்களுடைய இராணியை ஒரு முகம்மதிய சுல்தானுக்கு மனைவியாக்க எங்ஙனம் உட்படுவார் கள் ? ஒருபோதும் உடன்படமாட்டார்கள் அல்லவா ? இதைக் கண்ட அலாவுதீன் பத்மினியின் முகத்தைத் தனக்குக் காட்டினால் அதைப் பார்த்துவிட்டுத் திருப்தி கொண்டு சித்தூரை விட்டுச் செல்வதாகச் சமாசாரம் சொல்லிய னுப்பினான். இதைக் கேட்டு இராஜசபையைச் சேர்ந்தவர் கள் தங்களுக்குள் ஒன்று கூடி விஷயத்தைப் பல வகையி

லும் ஆராயவாரம்பித்தனர். பலமான வாக்குவாதங்கள் நடந்தன. இவ்விஷயம் பத்மினிக்கும் அறிவிக்கப்பட்டது. அவளும் சிந்தை கலங்கி யாது செய்வதென்று தோன்றாமல் திகைத்தனள்.

அலாவுதீனுடைய வேண்டுகோளுக் கிணங்காவிட்டால், அவன் முற்றுகையை நீண்டநாள்வரை கலைக்காமல் இருப்பான். அதனால் அநேகர் மாளவேண்டிவரும். ஆனால் அதற்குப் பயந்து பத்மினியின் முகத்தை அவனுக்குக் காட்டினால் மானத்தை விற்றுச் சுதந்திரத்தைப் பெற்றதற்கு ஒப்பாகும். அவர்கள் அனைவரும் இருதலைக்கொள்ளி எறும்பு போலாகி மனக்கவலை என்னும் கடலில் ஆழ்ந்திருந்தனர். கடைசியில் மனதை ஒருவாறு தேற்றிக்கொண்டு, அலாவுதீன் பத்மினியினுடைய முகத்தை நேருக்கு நேராகப் பார்க்கவிட முடியாதென்றும், இஷ்டமிருந்தால் நிலைக்கண்ணாடி மூலமாய் அவளுடைய முகத்தைப் பார்க்கலா மென்றும் ஒரு முடிவு செய்தார்கள். இன்னும் அலாவுதீன் பத்மினியின் முகத்தை நிலைக்கண்ணாடியில் பார்க்கவரும்போது, தன்னுடன் காவலாட்களைக் கொண்டுவராமல், தான்மாத்திரம் தன்னந் தனியனாய் வரவேண்டுமென்றும் கட்டளையிட்டார்கள்.

பத்மினியின் பேரழகைப்பற்றிப் பல்லோர் சொல்லக் கேட்டிருந்தமையாலும், அவள்மேல் கொண்ட காமப்பயித்தியம் காரணமாயும், அவளுடைய முகத்தை நிலைக்கண்ணாடியிலேனும் கண்டு திருப்தியடைவதற்கு அலாவுதீன் உடன்பட்டான். அதன் பிரகாரமே அவன் ஒரு மெய்க்காவலனும் இல்லாமல் தன்னந் தனியனாய்ச் சித்தூர் கோட்டைக்குள் நுழைந்தனன். அங்கு அவன் ஒரு தனியான அறைக்கு

அழைத்துச் செல்லப்பட்டான். அவ்வறையில் நீண்டதோர் நிலைக்கண்ணாடி திரையிட்டு வைக்கப்பட்டிருந்தது. அதன் ஒரு புறத்தில் தேவர்களையும் அடிமையாக்கவல்ல அழகுடன் கூடிய பத்மினி வாடிய முகத்துடன் நின்றுகொண் டிருந்தாள். அக்கண்ணாடிக்கு எதிரில் சிறிது தூரத்தில் அலாவுதீன் நின்றான். சின்னேரத்துக்குள் திரையானது நீக்கப்பட்டது. அலாவுதீன் பத்மினியின் முகத்தைக் கண்ணாடியில் கண்டான். அதற்குமேல் அவன் அங்கிருந்தவர்களைப் பார்த்துத் தான் திருப்தி யடைந்துவிட்டதாகக் கூறினான்.

இரஜபுத்திரர்கள் சந்தோஷ மடைந்தார்கள். ராணா பீம்சிங்கும் தம்மை இவ்வளவு தூரம் நம்பி வந்த முகம்மதிய அரசனை வழிவிட்டுவருதல் முறையானதென்று கருதி அவனுடன் சிறிது தூரம் சென்றார். அலாவுதீன் தந்திரசாலியாகையால் ராணாவுடன் பேசிக்கொண்டே அவரை வெகு தூரம் அழைத்துச் சென்றுவிட்டான். போகும் வழியிலெல்லாம் அலாவுதீன் கண்முன் பத்மினியின் உருவந் தவிர வேறொன்றும் தோன்றவில்லை. அவளை எப்படியாகிலும் தனக்கு மனைவியாக்கிக் கொள்ளவேண்டும் என்ற எண்ணமே அவனைப் பிடித்தாட்டிவந்தது. ராணாவும் கோட்டையை விட்டுச் சிறிது தூரம் தன்னுடன் வந்திருப்பதைக் கண்ட அலாவுதீன் அவரைச் சிறைப்படுத்தி அதன் மூலமாய் அவருடைய மனைவியை யடையவேண்டுமென்று தீர்மானித்தான். தீர்மானித்தவன் பின்னும் ராணாவுக்குத் தன்னிடத்தில் நம்பிக்கை ஏற்படும்படி செய்து அவரை மெதுவாகத் தன் பாசறைக்குச் சமீபமாக அழைத்துச் சென்றுவிட்டான். பின்னர், தன் எண்ணம் கைகூடுவதற்கு அதுவே தக்க சமயமென்று அறிந்த

அலாவுதீன ராணுவைச் சிறைப்படுத்திவிட்டான். அத்துடன் நில்லாமல் அவன் சித்தூர் வாசிகளுக்குத் தூது போக்கிப் பத்மினியைத் தன்னிடம் ஒப்படைக்காவிட்டால் தான் ராணுபீம்சிங்கை விடுவிக்கப்போவதில்லையென்று விளம்பரப்படுத்தினன்.

இதைக் கேட்டவுடன் சித்தூர்வாசிகள் என்செய்வதென்று தோன்றுமல் கலக்கங் கொண்டார்கள்; அலாவுதீனுடைய துரோகச்செயலை வெறுத்தார்கள். பத்மினியும் இடியோசைகேட்ட நாகம்போலாயினள். அவளுக்கு யாது செய்வதென்று தோன்றவில்லை. சில சந்தர்ப்பங்களில் அலாவுதீனுடைய வேண்டுகோளுக் கிணங்கித் தன் கணவனை மீட்கலாமா என்று எண்ணுவாள். உடனே, 'இதென்ன என்புத்தி இருந்தவாறு! நளாயினி, சாவித்திரி முதலியவர்கள் தங்களுடைய கற்பின் மகிமையால் தங்களுடைய புருஷர்களைக் காக்கவில்லையா? அதைப்போல் நானும் ஏன் என்னுடைய கற்பின் மகிமையால் என் புருஷனைக் காப்பாற்றலாகாது?' என்று எண்ணுவாள். இங்ஙனம் எண்ணி யெண்ணி அவளுக்குத் தைரியம் பிறந்துவிட்டது. அலாவுதீன் பீம்சிங்கைச் சிறை செய்தபோது பத்மினியின் தாய்வீட்டைச் சேர்ந்தவர்கள் சித்தூருக்குப் போந்திருந்தார்கள். அவர்கள் பத்மினிக்குத் தக்க ஆலோசனைகள் கூறி அவள் தன்கணவனை மீட்பதற்குரிய மார்க்கங்களையும் சொல்லிக்கொடுத்தார்கள். அதன்படி பத்மினி அலாவுதீனுக்கு ஒரு திருமுகம் எழுதி அனுப்பத் தன் மந்திரி பிரதானிகளுக்குக் கட்டளையிட்டாள்,

அத் திருமுகம் வருமாறு:—

சித்தூர் கோட்டை.........ஹ......மீ......உ

மாட்சிமை தங்கிய தில்லி சுல்தான் அவர்களுக்கு. வேந்தே, தங்களுடைய திருமுகத்தைக் கண்ணுற்றேம். ராஞ பீம்சிங்கின் மனைவியாராகிய பத்மினிதேவியாரும் அதைக் கண்ணுற்றனர். தங்களுடைய விருப்பம் யாதென்பதைத் தேவியார் தெரிந்துகொண்டு அதன்படி நடக்க இசைந்துள்ளார். எனினும், அவர் தங்களை இரண்டு வரங்கள் கேட்கின்றார். ஒன்று, படையைத் தில்லிக்கு அனுப்பிவிட வேண்டுமென்பது; இன்னென்று, அவருடைய கௌரவத்துக்குத் தக்கபடி அவருடன் எழுநூறு தாதிகள் பல்லக்குகளில் வர உத்திரவளித்தல். இவ்விரண்டு வரங்களும் பூர்த்தி யாக்கப் பட்டால் இராணியார் தங்களுக்குச் சொந்தமாவர். இக்கடிதம் பத்மினி தேவியாரின் கட்டளையின்மேல் எழுதப் பட்டது.

இப்படிக்கு
தங்கள் ஊழியர்கள்.

இக்கடிதத்தைக் கண்ட அலாவுதீன் ஆனந்தக் கடலில் மூழ்கி, இனி இவ்வுலகில் தான் பெறுவதற்கரிய பேறு வேறென்றுமில்லை யென்று கருதிப் பத்மினி விருப்பத்தின் படியே தன்னுடைய சேனையின் பெரும் பகுதியைத் தில்லிக்கு அனுப்பி விட்டான். அத்துடன் நில்லாமல் பத்மினி தன்னைக் காண வரும்போது அவள் விருப்பத்தின்படியே எழுநூறு தாதிகளைத் தன்னுடன் அழைத்துக் கொண்டு வரலாம் என்றும் கட்டளை யிட்டான். இவைகளை அறிந்த பத்மினி தன் எண்ணம் நிறைவேறுவதற்குக் காலம் கிட்டி விட்டது என்று கருதி தான் வரும் நாளை அலாவுதீனுக்குத் தெரிவித்தாள். அலாவுதீன் அந்நாளை ஆவலுடன் எதிர் பார்த்துக்

3

கொண்டிருந்தான். இப்படி யிருக்கையில் அந்நாளும் வந்துற்றது. அத்தினத்தில் பத்மினி எழுநூறு பல்லக்குகளைத் தயாரித்து அவைகள் ஒவ்வொன்றிலும் ஒரு சிறந்த இராஜபுத்திரனை ஆயுதங்களுடன் உட்கார வைத்துப் பல்லக்குகளையெல்லாம் மூடி விட்டாள். பல்லக்குகளைத் தூக்கிச் செல்வதற்காக ஆட்கள் நியமிக்கப்பட்டார்கள். இவர்கள் பார்ப்பதற்குப் பல்லக்குத் தூக்கிகளைப் போல் காணப்பட்டாலும், உண்மையில் இவர்கள் அனைவரும் சித்தூர் படையைச் சேர்ந்த வெற்றிவீரர்களாவர். இவர்கள் அனைவரும் சித்தூர் கோட்டையை விட்டுப் புறப்பட்டு அலாவுதீன் இருக்கும் இடத்தை அடைந்தார்கள். நடுப் பல்லக்கில் பத்மினி சகலமான ஆடம்பரங்களுடன் வீற்றிருந்தாள். அலாவுதீனுடைய வேலையாட்கள் இவர்களைத் தக்க மரியாதைகளுடன் வரவேற்றார்கள். இவர்கள் வரவைக் கண்ட அலாவுதீனும் களிகொண்டான். ஒரு தூதன் அலாவுதீனை அணுகி, 'பத்மினிதேவி கடைசி முறையாகத் தன் கணவனுடன் சம்பாஷித்துவிட்டு வர விரும்புகிறாள்' என்றான். அலாவுதீனும் அதற்கிசைந்தான். இது தான் தக்க சமயமென்று கருதி பத்மினியைப் பீம்சிங் இருக்கும் படியான இடத்திற்குத் தூக்கிச் சென்றார்கள். பீம்சிங்கும் பத்மினியும் தப்பித்துக் கொண்டு வெளியேறி விட்டார்கள்.

பத்மினியும் பீம்சிங்கும் வெளியேறியது அலாவுதீனுக்குத் தெரிந்துவிட்டது. பல்லக்குகளில் வந்தவர்கள் அனைவரும் இராஜபுத்திர வீரர்களா யிருந்ததைக் கண்டான்; பல்லக்குகளைத் தூக்கிக் கொண்டு வந்தவர்களும் இராஜபுத்திர வீரர்களா யிருக்கக் கண்டான். அலாவுதீன் தன் படையை

அவர்கள் மீது ஏவினன். இருபடைகளுக்கும் சண்டை நடந்தது. கடைசியில் முகம்மதியர்கள் தோற்றுவிட்டு ஓடவேண்டியதாயிற்று. இதைக் கண்ட அலாவுதீன் சித்தூர் முற்றுகையைக் கலைத்துத தன் தலைநகர் போய்ச் சேர்ந்தான். எனினும் பத்மினியின் உருவம் அலாவுதீன் மனத்தகத்தினின்று சிறிதும் நீங்கவேயில்லை. அவன் தற்போதைய சாந்தியாகச் சித்தூரை விட்டு விட்டு வேறு பாகங்களில் சண்டை செய்து கொண்டிருந்தாலும், அவனை இரவும் பகலும் வருத்தியது பத்மினியின் அழகேயாம்.

இங்ஙனம் சதா பத்மினியை எண்ணிக் கொண்டிருந்த அலாவுதீன் சில ஆண்டுகள் கழித்து மறுபடியும் சித்தூரைத் தாக்கினன். இச்சமயம் முன்னைக் காட்டிலும் அதிக வீராவேசத்துடன் சண்டையிட்டான். அதன் பயனாய் அவன் சித்தூரின் தென் பகுதியைத் தன் வசமாக்கிக் கொண்டான். இனி அலாவுதீன் சித்தூரை ஜெயிக்காமல் போக மாட்டான் என்பதை பீம்சிங்கும் பத்மினியும் உணர்ந்து கொண்டார்கள். எனினும், அவர்கள் தங்கள் உயிர் போகும் வரையில் சித்தூரைக் காப்பாற்றித் தீருவதென்று தங்களுக்குள் தீர்மானித்துக் கொண்டார்கள்.

இருசாராரும் ஒருவருக் கொருவர் விட்டுக் கொப்படுதில்லை யென்று தீர்மானித்துக் கொண்டிருந்த படியால் சண்டை மிகவும் மும்முரமாய் நடைபெற்றது. பீம்சிங்குக்குப் பன்னிரண்டு குமாரர்கள் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் மகா பலசாலிகளும் வெற்றிவீரர்களு மாவர். நடந்த சண்டையில் பீம்சிங்கின் பதினேரு குமாரர்கள் உயிர் துறந்தார்கள். கடைசியில் பன்னிரண்டாவது குமாரனுடைய

முறை வந்தது. அவனும் தைரியமாய்ச் சண்டை போட்டு யுத்தகளத்தில் மாண்டான். பின்னர் பீம்சிங்கும் யுத்த களத்தில் மாண்டான். மற்றுமுள்ள இரஜ புத்திரர்களும் வீராவேசத்துடன் சண்டையிட்டு எதிர்களின் கையில் சிக்குருமல் யுத்தகளத்திலேயே மாண்டனர். தங்களுடைய கணவர்கள் இறந்ததற்குப் பின் தாங்கள் உயிர்வாழ இஷ்டப்படாதவர்களாகிய இரஜபுத்திர ஸ்திரீகள் பதின்மூன்ருயிரம் பேர்கள் தீ மூட்டி அதில் வீழ்ந்து தங்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். பத்மினியும் அத்தீக்குழியில் வீழ்ந்து மாண்டனள். என்னே இரஜ புத்திரஸ்திரீகளின் கற்பு இருந்தவாறு! இன்றைக்கும் இரஜ புதனத்தைச் சேர்ந்த பாடகர்கள் சித்தூர் முற்றுகையைக் குறித்தும், இரஜபுத்திர ஸ்திரீகளின் கற்பைக் குறித்தும் பாக்கள் பாடிக் கொண்டு ஜனங்களை மகிழ்வித்து வருகின்றனர்.

அலாவுதீன் போர் வென்று நகருக்குள் நுழைந்த போது நகரமெங்கும் பாழாய்ப் போய்க் கிடந்ததையும், இரஜ புத்திர ஸ்திரீகள் அனைவரும் தீக்குளித்து இறந்து கிடப்பதையும் கண்டான். இதைக் கண்ட அலாவுதீன் சின்னேரம்வரை ஸ்தம்பித்துப் போய்விட்டான். அவன் எண்ணுத எண்ணங்களை யெல்லாம் எண்ணினுன். கடைசியில் பத்மினியின் அழகு அவன் கண் முன்னின்று மறைந்து, அவளுடைய கற்பும் தைரியமும் பதி பக்தியும் அவன் மனதை அத்தனை வாட்களென அறுத்தன. பின்னர் அவன் தான் ஒரு பெண்ணிற்காகச் செய்த கொடுமைகளுக்காக வருந்திக் கடவுள் தன்னை ரட்சிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துக் கொண்டான்.

பிள்ளைகளே, பத்மினியின் சரித்திரத்தால் நீங்கள் அறிந்து கொள்வதென்னை? பத்மினி கற்பையே எல்லாவித அணிகலன்களிலும் சிறந்த அணிகலனாகக் கொண்டு விளங்கினாள். எதிர்பாராதபடி ஆபத்துகள் வந்த போது பத்மினி அவ்வாபத்துகளினின்று தன்னையும் தன் புருஷனையும் தைரியமாய் மீட்டுக்கொண்டாள். தன்னலமற்ற தியாகம் யாதென்பதை அவள் அறிந்திருந்தாள். அவள் கௌரவத்தையும் பதி பக்தியையும் தன் நாட்டு மக்களிடத்துக் காட்ட வேண்டிய அன்பையும் தன் சொந்த சௌகரியங்களைக் காட்டிலும் அதிகமாக மதித்து வந்தாள். அவள் சிறுவயதில் சீதை, தமயந்தி முதலியவர்களுடைய சரித்திரங்களைக் கேட்டது வீண் போகவில்லை. அச் சரித்திரங்கள் அவளுக்குத் தக்க சமயத்தில் உதவியாயிருந்து அவளுடைய கற்பைக் காப்பாற்றின. நம் நாட்டுப் பெண்கள் அனைவரும் பத்மினியின் கற்பையும் தைரியத்தையும் கொண்டு இலங்கித் தங்களுக்கும் தங்கள் கணவர்களுக்கும் தங்கள் தாய் நாட்டினுக்கும் கீர்த்தியைத் தேடுவார்களாக.

ந. சிவாஜி அல்லது மராட்டிய சிங்கம்.

பிள்ளைகளே, இப்பொழுது பம்பாய் இராஜதானி என்று வழங்கும் பாகங்கள் சுமார் நானூறு ஆண்டுகளுக்கு முன் மராட்டியர்கள் எனும் ஒருவகை ஜாதியினர் வசமிருந்தன. அவர்கள் இந்து சமயத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களுடைய வம்சபரம்பரையில் வந்தவர்கள் இன்னும் பம்பாய் இராஜதானியின் பற்பல பாகங்களில் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்து வருகின்றனர். இந்தியாவிலுள்ள சுதேச சமஸ்தானங்களில் பரோடா சமஸ்தானமும் இந்தூர் சமஸ்தானமும் மராட்டிய அரசர்களால் ஆளப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்களல்லவா ? அவர்கள் பலாட்டியமும் தைரியமும் வாய்ந்தவர்கள். எனினும், முன்னர் அவர்கள் ஒன்று சேர்ந்திராமல் பற்பல பாகங்களில் சிதறுண்டு கிடந்தார்கள். சிதறுண்டு கிடந்த மராட்டியர்கள் இப்போது அடைந்துள்ள நிலையை எங்ஙனம் அடைந்தனர் என்பதைக் குறித்தும், அதற்குக் காரண பூதராயிருந்த சிவாஜியைக் குறித்தும் இவ் வத்தியாயத்தில் நீங்கள் தெரிந்துகொள்வீர்கள்.

அக்பர் மொகலாய சக்ரவர்த்தியாய்த் தில்லியில் அரசாண்டு கொண்டிருந்தபோது ஆமத் நகர், பீஜபூர் என்ற இரண்டு முகம்மதிய இராஜ்ஜியங்கள் தென்னிந்தியாவில்

பிரசித்தி யடைந்திருந்தன. அவை மொகலாய ஆட்சிக் குட்படாத சுதந்திர ராஜ்ஜியங்களாயிருந்தன. அவைகளை ஜெயித்துத் தங்கள் ராஜ்யத்துடன் சேர்த்துவிட வேண்டுமென்று மொகலாய சக்ரவர்த்திகள் முயன்றனர். கடைசியில் அவுரங்கசீபின் காலத்தில் அவ்விரண்டு ராஜ்யங்களும் மொகலாயர்களுடைய ஆதிக்கத்துக்கு உட்பட்டன. இவ்விரண்டு ராஜ்ஜியங்களும் மொகலாய அரசாட்சிக்கு உட்படுவதற்கு முன் சிவாஜியின் தகப்பனாகிய ஷாஜிபான்ஸ்லே என்பார் இவ்விரண்டு இராஜ்ஜியங்களுக்கும் இராணுவ சம்பந்தமான உதவிகள் புரிந்து வந்தார். அதனால் அவருடைய கீர்த்தி தென்னிந்தியா வெங்கும் பரவி யிருந்தது. மொகலாயர்கள் ஆமத்நகரையும் பீஜபூரையும் தாக்கியபோது ஷாஜி இவ்விரு ராஜ்ஜியங்களைச் சேர்ந்த சுல்தான்களுடன் சேர்ந்து கொண்டு மொகலாயர்களை எதிர்த்தார். மொகலாயர்களுடைய படைகள் எண்ணிக்கையில் அதிகமாயிருந்தன; அத்துடன் அவைகள் சண்டைக் கென்றே பழக்கப்பட்டு வைக்கப்பட்டவை. பீஜபூர், ஆமத்நகர் சுல்தான்களின் படைகளில் ஒரு சிலவே சண்டைக்கென்று பழக்கப்பட்டவை. மற்றவை பல் வேறு தொழில்களைச் சேர்ந்தவர்களைக் கொண்டு திரட்டப்பட்டவை. இம்மாதிரி காரணங்களால்தான் ஆமத்நகர், பீஜபூர் சுல்தான்கள் தோல்வியுறவும் மொகலாயர் வெற்றியடையவும் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. பீஜபூர், ஆமத்நகர் சுல்தான்கள் தோல்வி யடைந்து விடவே அவர்களுக்கு உதவி புரிந்துவந்த ஷாஜி என்பார் தம் ஊருக்குச் சென்றுவிட்டார்.

பீஜபூர், ஆமத்நகர் சுல்தான்கள் தாங்கள் சுதந்திரம் பெற்றிருந்த காலையில் தங்களுக்குக் கீழ்ப்பட்ட வெற்றி வீரர்களுக்கு ஜாகீர்கள் கொடுத்திருந்தார்கள். முகம் மதியர்களுக்கு மாத்திரமல்லாமல் இந்துக்களுக்கும் அவர்கள் ஜாகீர்களைக் கொடுத்திருந்தார்கள். அந்த மாதிரியான ஜாகீர்களில் ஒன்றைச் சிவாஜியின் தகப்பனாகிய ஷாஜி என்பார் ஆமத்நகர் சுல்தானிட மிருந்து பெற்றிருந்தார். வேறு சிலரும் ஆமத்நகர் சுல்தானிட மிருந்தும் பீஜபூர் சுல்தானிட மிருந்தும் ஜாகீர்களைப் பெற்று வாழ்ந்து வந்தார்கள். இங்ஙனம் ஜாகீர்களைப் பெற்றவர்கள் சண்டை சச்சரவின்றி ஒற்றுமையாய் வாழ்வதற்குப் பதிலாகச் சண்டையிட்டுக்கொண்டு ஒற்றுமையை இழந்து வாழ்ந்தார்கள். ஆமத்நகர் சுல்தானிட மிருந்து ஜாகீர்களைப் பெற்றவர்களில் இரண்டு பேர் முக்கியமானவர்கள். அவர்களில் ஒருவர் சிவாஜியின் தந்தையாகிய ஷாஜி. இன்னொருவர் சிவாஜியின் தாயின் சகோதரராகிய லுக்ஜி யாதவராவ் என்பார். இவர் சிவாஜிக்கு மாமனாக வேண்டும். மராட்டியர்கள் அநேக குடும்பங்களாகப் பிரிந்திருந்தனர். அக்குடும்பங்களில் ஒன்றின் பெயர் யாதவ குடும்பம் என்பதாம். இக்குடும்பம் மற்றெல்லா மராட்டிய குடும்பங் களுக்கும் மேற்பட்டதாயும் செல்வாக்குக் கொண்டதாகவும் இருந்தது. சிவாஜியின் மாமனாகிய லுக்ஜி யாதவராவ் இக் குடும்பத்தைச் சேர்ந்தவராவர்.

நிற்க, சிவாஜியின் பாட்டனாகிய மாலோஜி என்பார் நீண்ட நாள்வரை புத்திர பாக்கியமில்லாமலிருந்தார்.

அவர் இக்குறையை நிவர்த்தித்துக் கொள்வதற்காகப் பிரார்த்தனைகள் செய்தார். அதன் பயனாய் அவருக்கு இரண்டு குமாரர்கள் பிறந்தார்கள். ஒரு குமாரனின் பெயர் ஷாஜி, இன்னொரு குமாரனின் பெயர் ஷீராப்ஜி. மாலோஜி பான்ஸ்லே என்பார் புத்தி சாதுர்யங்களுடன் சுறு சுறுப்பையும் கொண்டு விளங்கினாராதலால் அவர் படிப் படியாய் உயர்ந்த பதவிக்கு வந்துவிட்டார். இதைக் கண்டு யாதவராவ் அவரை மிகவும் நேசித்துக் கொண்டாட ஆரம்பித்தார். இப்படியிருந்துகொண்டிருக்கையில் யாதவராவ் குடும்பத்தில் ஒரு விசேடம் நடைபெற்றது. அதற்கு யாதவராவ் மாலோஜியை வரவழைத்திருந்தார். மாலோஜி தம்முடன் தம் குமாரனாகிய ஷாஜியை அழைத்துச் சென்றிருந்தார். அப்போது ஷாஜிக்கு வயது ஐந்து. ஷாஜி பார்வைக்கு அழகாயிருந்தார். இதைக் கண்ட யாதவராவ் ஷாஜியைத் தூக்கித் தன் ஒரு முழந்தாள் ஒன்றின் மேல் வைத்துக் கொண்டார். இன்னொரு முழந்தாளின் மேல் அவருடைய குமாரத்தியாகிய ஜீஜீபாய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவளுக்கு அப்போது மூன்று வயதாயிருந்தது. அவளும் அழகியாகவே இருந்தாள். சிறுவர்கள் இருவர்களையும் பார்த்து யாதவராவ் சந்தோஷங் கொண்டவராகி, மாலோஜியை விளித்துப் புன் சிரிப்புடன், 'இவ் விரண்டு குழந்தைகளும் எவ்வளவு அழகாயிருக்கின்றன பார்த்தீர்களா? இவ்விருவருக்கும் மண முடித்துக் கண்ணால் பார்க்காமல் இருப்பது நல்லதா?' என்று சொன்னார். அவர் இங்ஙனம் சொன்னதைக் கேட்ட மாலோஜி, அச் சமயத்தை விட்டால் வேறு சமயம்

கிடைத்தலரிதாகையால், காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ளவேண்டும் என்று எண்ணி, 'அப்படியே இருவருக்கும் கலியாணத்தை நடத்திவிடலாம்' என்றார். இதைக் கேட்டவுடன் யாதவராவுக்கு அடங்காக்கோபம் பிறந்துவிட்டது. அதன் மேல் அவர் மாலோஜியைக் கோபத்துடன் பார்த்துப் பின் வருமாறு சொன்னார்: 'நான் தமாஷ் முறையில் சொன்னவைகளைத் தாங்கள் நம்பிவிடலாமா? குலத்திலும் செல்வச்சம்பத்துக்களிலும் உயர்ந்த யாதவர்களுடன் பான்ஸ்லேக்கள் சம்பந்தம் செய்து கொள்ள எண்ணுவது முறைமையோ? இதை எண்ணிப் பாருங்கள். இந்த எண்ணம் தங்களுக்கு வேண்டாம். தங்களுக்குத் தக்க குடும்பத்தில் பெண் பார்த்துக் கலியாணம் செய்து வைப்பது தகுதியானதாகும்'.

இதைக் கேட்ட மாலோஜி இச் சந்தர்ப்பத்தில் அதிகமாய்ப் பேசக் கூடாதென்று சும்மா விருந்து விட்டார். எனினும், சந்தர்ப்பங்கள் வாய்க்கும்போதெல்லாம் இவ் விஷயத்தை யாதவராவுடன் கலந்து பேசுவதுண்டு. நாளா வட்டத்தில் யாதவராவும் பான்ஸ்லே குடும்பத்தில் சம்பந்தம் செய்துகொள்வதினால் பாதகம் ஒன்றும் ஏற்படாதென்று கண்டுகொண்டார். இவர்கள் இருவருடைய விஷயம் இங்ஙன மிருந்து வருகையில், ஷாஜியும் ஜீஜீபாயும் யௌவன பருவத்தை யடைந்தனர். கடைசியில் இவ் விருவருக்கும் தக்க சிறப்புக்களுடன் விவாகம் நடைபேற்றது. இவர்கள் இருவருடைய குமாரர் தான் நம் கதாநாயகராகிய சிவாஜி யாவர்.

ஆமத்நகர் சுல்தான் தோல்வி யடைந்து விடவே, அவ

ரிடம் வேலைபார்த்துக் கொண்டிருந்த சிவாஜியின் தகப்பனாராகிய ஷாஜி, பீஜபூர் சுல்தானிடத்தில் உத்தியோகத்துக் கமர்ந்தார். இப்படியிருக்கையில், பீஜபூர் சுல்தானுடைய ஆட்சிக்குட்பட்ட கர்நாடகத்தில் சண்டை சச்சரவுகள் அதிகரித்தன. அவைகளை அடக்கிவிட்டுவரப் பீஜபூர் சுல்தான் ஷாஜிக்குக் கட்டளையிட்டான். ஷாஜி அங்ஙனமே சென்று அக்கலகங்களை அடக்கிவிட்டு வந்தார். அதைக் கண்ட சுல்தான் அவர்பால் பெரிதும் சந்தோஷங்கொண்டு அவர்க்குத் தஞ்சாவூரில் ஒரு ஜாகிரைக் கொடுத்தான். இங்ஙனம் தஞ்சாவூரில் தமக்கு ஜாகிர் ஏற்படவே, ஷாஜி பூனா ஜாகீரையும் தம்முதல் மனைவியான ஜீஜீபாயையும் புத்திரரான சிவாஜியையும் தாதாஜி என்ற ஒரு பிராம்மணரிடத்தில் ஒப்படைத்து விட்டுத் தஞ்சாவூருக்குச்சென்று அங்கே வசித்துக்கொண்டிருந்தார். இங்ஙனமாகவே சிவாஜி தகப்பனாரைப் பார்ப்பதற்குக்கூடாமல் போய்விட்டது. அநேக வருடங்கள் வரை சிவாஜியும் ஷாஜியும் ஒருவரையொருவர் பார்க்காமல் அந்நியர்களைப்போல் வசித்துவர வேண்டியதாயிற்று.

நிற்க தாதாஜி என்ற பிராம்மணர் புத்தி சாதுர்யமுள்ளவர். அவர் எஜமானனிடத்தில் பய பக்தி விசுவாசம் கொண்டவர். தாதாஜி என்ற பிராம்மணரும் ஜீஜீபாயும் சிவாஜியும் பூனாவில் வசிக்க வேண்டியதாயிற்று. ஜீஜீபாய் கற்புக்கரசி. கல்வி கேள்விகளில் தேர்ந்தவள். தைரியமும் சாமர்த்தியமும் படைத்தவள். அவள் சிவாஜிக்கு இந்திய நாட்டில் பிறந்த வெற்றிவீரர்களின் பிரதாபங்களையும் அவர்களால் நாட்டுக்கு உண்டான நன்மைகளையும் அடிக்கடி எடுத்துச் சொல்வாள். அத்துடன் நில்லாமல் ராக்ஷஸர்களைப்பற்றியும்

ராக்ஷஸிகளைப்பற்றியும் மாயா விநோதக்கதைகளையும் சிவாஜிக்கு எடுத்துரைப்பாள். தினந்தோறும் இத்தகைய கதைகளைக் கேட்டுக்கொண்டு வரவே, சிவாஜியும் அவர்களைப் போல் தாமும் வீரதீர பராக்கிரமங்களில் தலைசிறந்து விளங்கவேண்டுமென்று அடிக்கடி எண்ணுவது வழக்கம். அத்துடன் அவர், பாடகர்கள் வெற்றி வீரர்களின் கதைகளை எடுத்துப் பாடும்போது, அவைகளைக் கவனமாய்க் கேட்டுவருவார். மேலும் தாதாஜி சிவாஜிக்கு இந்து மதத்தைக் குறித்து விவரமாக எடுத்துரைத்தார். இன்னும் அவர்க்கு வேண்டிய யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, வாள்வித்தை முதலான வித்தைகளையும் கற்பித்துக் கொடுத்தார்.

சிறுவயதில் சிவாஜி பூனாவிலுள்ள கோட்டையில் வசித்தார் என்று கூறினோமல்லவா? அப்போது அவர் அக்கோட்டையிலிருந்துகொண்டு தக்ஷிணத்தின் காட்சிகளைக் கண்டு இன்புறுவது வழக்கம். அக்காலத்தில் தக்ஷிணமானது பெருத்த காடாயிருந்தது. அக்காட்டின் மத்தியில் இங்குமங்குமாகப் பள்ளத்தாக்குகளும் பயிர் நிலங்களுமிருந்தன. காட்டாறுகள் நாலாபக்கங்களிலும் ஓடிக்கொண்டிருந்தன. அவ்வாறுகளுக்குப் பக்கத்திலிருந்த ஜனங்கள் காடுகளை அழித்து அவ்விடங்களில் கிராமங்களையும் பயிர்செய் நிலங்களையும் ஏற்படுத்திக்கொண்டார்கள். மலைகள் அக்காலம் போக்குவரவுக்கு இடைஞ்சலை உண்டுபண்ணி வந்தன. அதனால் அப்போது தக்ஷிணத்தில் போக்குவரவு அதிகமாய்க் கிடையாது. மலைத்தொடர்கள் ஜனங்களை வெவ்வேறு பகுதியினராகப் பிரித்துவைத்திருந்தன. அம்மலைகள் செங்குத்தாயும் காடுகள் அடர்ந்தனவாயுமிருந்தபடியால், ஜனங்

கள் அம்மலைகளின்மீது ஏறுவதற்குக் கூடவில்லை. இதை நோக்கியே முற்காலத்துக் கோட்டைகளெல்லாம் மலைகளின் மீது கட்டப்பட்டுவந்தன. அங்ஙனம் கட்டப்பட்டிருந்தத ஞல் அவைகளை எதிரிகள் சுலபமாய்க் கைகொள்ளக் கூடா மல் போய்விட்டது.

சிவாஜியின் காலத்தில் தென்னிந்தியாவிலிருந்த இராஜ் ஜியங்கள் ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக்கொண்டிருந்தன. இச்சண்டைகள் காரணமாய் நாட்டில் அமைதி குறைந்தி ருந்தது. அதைக் கண்ட சிவாஜி நாட்டில் அமைதி ஏற்படு வதற்கு என்ன காரியங்கள் செய்யலாம் என்று ஆலோசித் துக்கொண்டிருந்தார். நாட்டில் அமைதி ஏற்பட்டிராமை யால் மராட்டியர்கள் தங்களுடைய கிராமங்களை விட்டு விட்டுச் சண்டையிடும் கட்சிகளில் சேர்ந்திருந்தார்கள். அத ஞல் அவர்களுடைய கிராமங்களில் ஓநாய்களும் நரிகளும் தாராளமாய்க் குடியேறி வசிக்கலாயின.

கிராமங்கள் இங்ஙனம் பாழாய்ப் போய்விட்டிருப்ப தைக்கண்ட தாதாஜி இனியும் சும்மாவிருத்தல் தகுதியாகா தென்று கருதி அம்மிருகங்களையெல்லாம் வேட்டையாடிக் கொன்ருர். அதன்மேல் அக்கிராமங்களை விட்டுச் சென்றி ருந்த ஜனங்கள் திரும்பவும் அக்கிராமங்களில் வந்து குடி யேறிஞர்கள். அதன்மேல் சிவாஜி தம்நாட்டு மக்கள் பய மின்றி வாழாமல் பிறருடைய படையெடுப்புகளுக்கு அஞ் சியே வாழவேண்டியவர்களா யிருக்கிருர்கள் என்பதை அறிந்துகொண்டார். அறிந்தவர் அவர்களிடை ஏற்பட் டுள்ள பயத்தை ஒழித்து அவர்கள் நிர்ப்பயமாய் வாழ்வ தற்கான காரியங்களைச் செய்யவேண்டுமென்று எண்

ணிக்கொண் டிருந்தார். அவர்களுடன் சேர்ந்து பழகியத ளுல் அவர் அவர்களைப்போல் சுலபமாய் மலைகளின்மேல் ஏறவும் ஏறியதைப்போல் இறங்கவும் கற்றுக்கொண்டிருந் தார். சிறுவயது முதற்கொண்டே அவரிடம் பிறரை அடக் கியாளும் சக்தி ஏற்பட்டிருந்தது.

மராட்டியர்கள் ஒன்றுசேர்ந்திராமல் வெவ்வேறு பகுதியினராய்ப் பிரிந்திருந்தமையால் அவர்களுக்குள் ஐக் கியம் ஏற்படாமல் இருந்தது. அவர்களை ஒன்று சேர்த்து அடக்கி யாளுவதற்குத் தகுதியான தலைவர் ஒருவர் வேண் டியதாயிருந்தது. மராட்டியர்கள் தைரியம் வாய்ந்தவர் களாகவும் பயமற்றவர்களாகவும் வீரர்களாகவுமிருந்தார் கள். ஆனுலும் அவர்களுக்குள் ஒழுங்குமாத்திரம் இல்லை. இதைச் சிவாஜி கண்டுகொண்டார். அதன் மேல் அவர் மராட்டியர்களை ஒழுங்குபடித்திஞல் அவர்கள் தங்களுக் குள் ஏற்பட்டுள்ள ஒற்றுமையின்மையினின்று நீங்கி நன் னிலையை யடைவார்கள் என்று உறுதியாக எண்ணினுர். அவருடைய தாயார் அவர்க்குச் சிறு வயதில் எடுத்துச் சொன்ன கதைகளும் பிறவும் ஒன்றன்பின் ஒன்ருய் அவர் ஞாபகத்துக்கு வந்தன. அவை ஞாபகத்துக்கு வரவே மராட்டியர்களை நன்னிலைக்குக் கொண்டுவருதல் வேண்டு மென்கிற எண்ணம் நாளாவட்டத்தில் அவருக்கு அதிகரித் தது.

சிவாஜிக்குப் போதுமான பணமும் கல்வியும் ஆட் களும் இல்லாமல் போய்விட்டாலும், தைரியமும் தன் னம்பிக்கையும் மாத்திரம் அளவுக்கு மீறி ஏற்பட்டிருந் தன. வெற்றிக்குத் தன்னலம் கூடாதென்பதை அவர்

சிறு வயது முதற்கொண்டே அறிந்திருந்தார். ஆதலால் தான் அவர் பிற்காலத்தில் பசியையும் பனியையும் குளிரையும் இன்னுமுள்ள பிற அசௌகரியங்களையும் கவனிக்காமல் வெற்றியடைதலென்ற ஒன்றின்மேலேயே கண்ணுங் கருத்துமாயிருந்தார். அவர் சிறு வயது முதற்கொண்டே குதிரையேற்றத்தில் தகுதியான தேர்ச்சி பெற்றிருந்தார். அத்தேர்ச்சியானது அவர்க்குப் பிற்காலத்தில் பெருந் துணையாயிருந்தது.

சிவாஜி தந்திரமான செயல்களில் மகா சமர்த்தர். தம்முடைய காரியம் ஜெயமடைவதாயிருந்தால் அவர் பின் விளைவுகளைச் சிறிதும் கவனிக்கமாட்டார். அவர் இராஜ தந்திரத்தில் மகா நிபுணர். அவர் தாம் செய்த சண்டைகளிலெல்லாம் ராஜ தந்திரத்தையும் புத்தி சாதுர்யத்தையும் உபயோகித்து வெற்றி அடைந்தாரேயல்லாமல், அதிகமான படைகளைக்கொண்டும் தேக கஷ்டத்தாலும் வெற்றியடையவேயில்லை என்பது நிச்சயம்.

அவுரங்கசீப் காலத்தில் மொகலாயர்கள் தென்னிந்தியாவில் ஆதிக்கம் பெற்றிருந்தார்கள் எனினும், அவர்களுக்கு எந்த விடங்களில் பலவீனம் இருந்ததென்பதைச் சிவாஜி அறிந்து, அதன்படி காரியங்களைச் செய்து மொகலாயர்களை ஒரு கை பார்க்க அடிக்கடி சிந்தித்ததுண்டு. சில சந்தர்ப்பங்களில் சிவாஜி வெற்றியடைவார். சில சந்தர்ப்பங்களில் மொகலாயர்கள் வெற்றியுறுவார்கள்.

சிவாஜி கல்வியறிவற்றவராயிருந்தாலும் அவருக்கிருந்த புத்தி சாதுர்யங்கள் அபரிமிதமானவை. இத்

தகையு புத்தி சாதுர்யங்களினுல்தான் அவர் அரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். இதைக் கண்டு அவருடைய எதிரிகளும் அவரைக் கொண்டாடி வந்திருக்கின்றனர். சிலர் வாலிபத்தில் கல்வியைக் கற்கா விட்டாலும் பிற்காலத்தில் அதைக் கற்பதற்காகத் தங்களாலான முயற்சிகளைச் செய்தலுண்டு. சில சந்தர்ப்பங்களில் அவர்கள் அதில் வெற்றியு மடைந்திருக்கின்றனர். நமது கதாநாயகரான சிவாஜியோ அத்தகைய முயற்சிகளைச் செய்ததுமில்லை ; செய்யப் பிரயத்தனப்பட்டதுமில்லை. இப்படியெல்லாமிருந்துங் கூட அவர், தம்முடைய புத்தி சாதுர்யத்தினுல், புத்தகங்கள் ஒன்று மில்லாமலும், பிறருடைய அநுபவங்களை அறிந்துகொள்ளக் கூடாமலும் இருப்பினும், மிகவும் கெட்டிக்காரர்களான இராஜதந்திரிகளும் செய்து முடிக்காத காரியங்களைச் சாதித்திருக்கின்றனர்.

நமது கதாநாயகரான சிவாஜி யுத்தத்தில் பிடிபட்டவர்களை அன்பாய் நடத்தினுர். ஒரு கைதிக்காகினும் அவர் கேடு செய்யவில்லை. யுத்தத்தில் பிடிபட்ட கைதிகளுக்கு அவர் வெகுமானங்கள் கொடுத்தனுப்புவதும் வழக்கம். அவர் கோயில்களையும் மசூதிகளையும் கொள்ளையடித்தது கிடையாது. தெய்வஸ்தலங்களைக் கண்டால் அவர்க்கு மதிப்பு அதிகம். கடவுள் அவரவர்கள் விரும்புகிறபடி காட்சிகளை நல்கிக் கொண்டுபோகிருர் என்பதை அவர் அறிந்திருந்தார். இந்துக்கள் வணங்கும் மும்மூர்த்திகளும், முகம்மதியர்கள் வணங்கும் அல்லாவும், கிறிஸ்தவர்கள் வணங்கும் யேசுநாதரும் ஒரே

கடவுளாவர் என்பதை அவர் உணர்ந்திருந்தார். அவர் தம்முடைய பகையாளிகளையும் கொடுமையாய் நடத்திய தில்லை. பழிக்குப்பழி வாங்கவேண்டுமென்ற குணம் அவரிடத்தில் கிடையாது. தமாஷாகவே அவர் தம்முடைய எதிரிகளைச் சரிப்படுத்தி விடுவார். ஸ்திரீகளைத் துன்புறுத்தமாட்டார்.

ஒரு காரியத்தைச் செய்வதற்கு இடம் பொருள் ஏவல் அவசியமென்பதை உணர்ந்திருந்தார் சிவாஜி. ஆதலால் அவர் தாதாஜி உயிருடன் இருந்தவரையில் ஒரு காரியத்திலும் தலையிட்டுக் கொள்ளவில்லை. தாதாஜி இறக்கும்போது சிவாஜிக்கு வயது இருபது. தாதாஜி தம்முடைய முயற்சிகளினால் பூனாவைச் சுற்றிலும் மலைகளிலும் காட்டுப் பிராந்தியங்களிலும் வசித்திருந்த நாகரீகமற்ற மராட்டியர்களை நாகரீக முள்ளவர்களாகச் செய்து, அவர்களுக்கு இராணுவப் பயற்சியும் செய்து வைத்திருந்தார். அதனால் சிவாஜிக்குத் தாதாஜி இறக்குங் காலத்தில் துணைபுரிவதற்காகச் சிறியதோர் படையும் ஏற்பட்டிருந்தது. இப்படையின் துணையைக் கொண்டு அவர் இன்னுமதிகமான படையைத் தனக்குதவியாகத் திரட்டிச் சேர்த்துக்கொண்டார். ஷாஜி உயிருடனிருந்த வரையில் அவரும் தாதாஜியும் பீஜபூர் சுல்தானுக்குக் கப்பங் கட்டிக்கொண்டு வந்தார்கள். ஷாஜியும் தாதாஜியும் இறந்தவுடன் ஜாகீர்கள் சிவாஜிக்குச் சொந்தமாயின. ஆனால், அவர் அவைகளுக்காகக் கட்டவேண்டிய பகுதிப் பணத்தைக் கட்டாமல் இருந்தார். அத்துடன் நில்லாமல் பீஜபூர் சுல்தானுக்குச் சொந்த

மான கோட்டைகளையும் ஒவ்வொன்றாய் ஆக்கிரமித்துக் கொள்ளலானார். இங்ஙனம் அவர் ஆக்கிரமித்துக் கொண்ட கோட்டைகளில் முக்கியமானவை தோர்னியா, சிங்கூர், புரந்தர் என்பவைகளாகும். அவர் ரெய்கூர் என்னுமிடத்தில் தமக்கென்று ஒரு கோட்டையைக் கட்டினார். அவ்விடத்தில் பெரியதொரு புதையல் இருக்கக் கண்டு அதையும் தம்முடையதாகச் செய்து கொண்டார்.

சிவாஜி இங்ஙனமெலாம் அக்கிரமங்கள் செய்து கொண்டு போவதைக் கண்ட பீஜபூர் சுல்தான் இனியும் சும்மா விருக்கலாகாதென்று கருதிக் கோபமூண்டு தஞ்சாவூரில் இருந்த ஷாஜியைக் கொணர்ந்து சிறைச்சாலையில் அடைத்துவிட்டார். அத்துடன் நில்லாமல், சிவாஜி பீஜபூர் சுல்தானுக்கு அடங்கி நடப்பதாக வாக்குறுதி கொடுக்க வேண்டுமென்றும், இல்லா விட்டால் ஷாஜியை விடுவிக்கப்போவதில்லையென்றும், அவசியம் நேரிட்டால் ஷாஜி கொல்லப்படுவார் என்றும் பீஜபூர் சுல்தான் விளம்பரப்படுத்தினார். இதைக் கேட்ட ஷாஜி தான் குற்றவாளி யல்லவென்றும், சிவாஜி தனக்குக் கீழ்ப்படிந்து நடப்பதில்லையென்றும் கூறினார். அவருடைய சொற்கள் செவிடன் காதி லூதிய சங்கு போலாயின.

சிவாஜிக்குப் பீஜபூர் சுல்தானுடைய விளமபரம் தெரியவந்தது. அதைக் கண்டு அவர் முதலில் பயந்துவிட்டார். ஆனாலும் சிவாஜி தந்திரசாலி யல்லவா? உடனே ஓர் உபாயந் தேடினார். அப்போது டில்லியில் ஷாஜஹான் சக்ரவர்த்தி அரசாண்டுகொண்டிருந்தார்.

அவர்க்குச் சிவாஜி ஒரு வேண்டுகோள் அனுப்பி, அதில் தாம் அவருக்குக் கீழ்ப்பட்டுள்ள சிற்றரசரென்றும், தமக்கும் பீஜபூர் சுல்தானுக்கும் நீங்காப் பகை வருஷக் கணக்காக ஏற்பட்டிருப்பதாகவும், தம்மை அவருடைய உத்தியோகஸ்தர்களில் ஒருவராகச் சேர்த்துக் கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார். இவ்விண்ணப்பத்தைப் பார்த்த மொகலாய அரசர், சிவாஜியைத் தம் படையில் சேர்த்துக்கொண்டதல்லாமல், அவரை ஐயாயிரம் குதிரை வீரர்களுக்குத் தலைவராகிய சுபேதராகவு மாக்கினர். இதைக் கேள்வியுற்ற பீஜபூர் சுல்தான், தனக்கே ஆபத்து வந்து விடுமென்று கருதி, சிவாயிஜின் தந்தையாகிய ஷாஜியைச் சிறைச்சாலையினின்று விடுதலை செய்துவிட்டார். இன்னும் சிவாஜிக்கு என்ன வேண்டி யிருக்கிறது? அவர்க்கு முன்னைக்காட்டிலும் அதிகமான தைரியம் ஏற்பட்டுவிட்டது. மொகலாய சக்ரவர்த்திக்கு உடனே அபாயம் உண்டாக்க ஆரம்பித்துவிட்டார். மொகலாயர்களுடைய பட்டணங்களைத் தாக்கினர். கொள்ளை யடித்தார். இங்ஙனம் அடித்த கொள்ளைகளில் ஒருநாள் அவர்க்கு மோகலாயர்களுக்குச் சொந்தமான மூன்று லட்சம் ரூபாய்களும், முந்நூறு குதிரைகளும் கிடைத்தன.

இங்ஙனமாகச் சிவாஜி தக்ஷிணத்தில் பிரக்கியாதி அடைந்துகொண்டு வந்தனர். பீஜபூர் சுல்தானுக்குச் சொந்தமான கொங்கண நாட்டைச் சிவாஜி படிப்படியாகக் கைப்பற்றிக் கொண்டார். ஆனல் பம்பாய், ஜின்ஜிரா, கோவா ஆகியவை மாத்திரம் சிவாஜியின் கைக்கு

அகப்பட வில்லை. இதைக்கண்ட பீஜபூர் சுல்தான் பெரிதும் கோபமடைந்து அப்சல்கான் என்னும் தளகர்த்தனை அனுப்பிச் சிவாஜியை எதிர்த்துவரும்படி கட்டளை யிட்டார். சிவாஜி அப்சல்கானைக் கொன்று அவருடைய படைகளைச் சின்ன பின்னப் படுத்தி விட்டார். இதனால் மராட்டியர்களின் பிரதாபம் நாடெங்கும் பரவ ஆரம்பித்தது. இங்ஙனமாகவே தென்னிந்தியாவி லிருந்த இராஜ்யங்கள் மராட்டியர்களைக் கண்டு நடுக்கங் கொள்ள லாயின. பீஜபூர் படைகள் தோல்வியுற்றது மராட்டியர்களுக்குப் பெருத்த தொரு கீர்த்தியை யுண்டு பண்ணியது.

அப்சல்கான் சிவாஜியால் முறியடிக்கப்பட்டுக் கொல்லப்பட்டதைக் கேள்வியுற்ற பீஜபூர் சுல்தான், இனியும் சும்மா விருக்கலாகாதென்று கருதி, மோகலாய தளகர்த்தனை ஷெயிஷ்டகான் என்பவனைச் சிவாஜியை முறியடிக்க வேண்டிக் கொண்டார். முதலில் ஷெயிஷ்டகான் ஜெயமடைந்தான். அவன் அநேக கோட்டைகளையும் பட்டணங்களையும் கைப்பற்றினன், அவைகளில் முக்கியமானது பூனா பட்டணமாகும்.

இப்படி யிருக்கையில் சிவாஜி தந்திரத்தினால் ஷெயிஷ்டகானைத் துரத்திவிட வேண்டு மென்று எண்ணிச் சமயம் பார்த்திருந்தார். இச் சந்தர்ப்பத்தில் கலியாண ஊர்வலம் ஒன்று பூனாவில் சென்றுகொண் டிருந்தது. அதில் சிவாஜி சில இராணுவ வீரர்களுடன் மாறு வேடம் பூண்டு கலந்து கொண்டு ஷெயிஷ்டகான் தங்கியிருந்த

படுக்கையறைக்குள் நுழைந்து விட்டார். அத்துடன் நில்லாமல் அத்தளகர்த்தனை எதிர்க்க வாரம்பித்தார். உயிர் தப்பினல் போதுமென் றெண்ணிய தளகர்த்தன் சாளரத்தின் வழியாய்க் குதித்தான். அப்போது அவனைச் சிவாஜி தாக்கினர். நலத்தின் அடையாளமாகக் கைவிரல் நாசத்துடன் அத்தளகர்த்தன் தப்பிப் பிழைத்துப் போய் விட்டான். சிவாஜியும் அவரைச் சேர்ந்தவர்களும் ஒரு வித ஆபத்துமின்றித் தப்பித்துக் கொண்டனர்.

இதனல் சிவாஜியின் கீர்த்தி இன்னுமதிகமாகப் பரவலாயிற்று. அவருடைய பகையாளிகள் அவரைக் கண்டு மேலுமதிகமாக நடுக்கங்கொள்ளலானர்கள். இச்செயல் சிவாஜி தந்திரமும் தைரியமும் ஒருங்கே வாய்க்கப்பெற்றவர் என்பதைக் காட்டியது. இதனல் அவரைச் சேர்ந்தவர்கள அவரிடத்தில் முன்னினுமதிகமாகப் பக்தி விசுவாசம் காட்டி அவரைப் போற்றிக் கொண்டாட வாரம்பித்தார்கள். தம்மால் அனுப்பப்பட்ட தளகர்த்தனுக்கு நேர்ந்த ஆபத்தைக் கேட்டுப் பீஜபூர் சுல்தான் மிகவும் கோபங்கொண்டார். மொகலாய சக்ரவர்த்தியும் இவ்விஷயத்தைக் கேட்டுச் சிவாஜியின் மீது வன்மனங் கொள்ளலாயினர்.

சிவாஜி அத்துடன் நிற்கவில்லை. உடனே மொகலாய ஆட்சிக்கு உட்படடிருந்த சூரத் பட்டணத்தைத் தாக்கினர். இப்பட்டணம் அக்காலத்தில் செல்வத்திற்குப் பேர் பெற்றிருந்தது. ஆனல் அதைப் பகையாளிகளின் தாக்குகளினின்று காப்பதற்குப் போதுமான பந்தோ

பஸ்து செய்யப்பட்டிருக்கவில்லை. சிவாஜி சூரத்தின் மீது படையெடுத்து வருகிறார் என்பதைக் கேள்வியுற்ற அந்நகரவாசிகள் அனைவரும் அந்நகரினின்று வெளியேறி விட்டார்கள். ஆங்கிலேயர்களுக்கும் டச்சுக்காரர்களுக்கும் அங்கு போதுமான காவல் இருந்தமையால், அவர்கள் அவ்விடத்தை விட்டு ஓடிப்போகாமல் அவ்விடத்திலேயே யிருந்தனர். சிவாஜி அவர்களுடைய கோட்டைகளைத் தாக்குவதற்குக் கூடாமல் போய் விட்டது. ஆனாலும் அவருடைய படைகள் நகரின் மற்ற பாகங்களை நான்கு பகலும் இரவும் கொள்ளையிட்டன. சிவாஜி பொன் வெள்ளி நவரத்தினங்கள் ஆகிய இவைகளை மாத்திரம் தம்முடன் எடுத்துச் சென்றாரென்றும், மற்றவைகளை அவர் எடுத்துச் செல்லவில்லை யென்றும் தெரிகின்றது.

இது வரையில் சிவாஜியின் தந்திரங்களைப் பற்றியும் கொள்ளைகளைப் பற்றியும் படித்து வந்தோம். இனி அவரைப்பற்றி ஓர் ஆங்கிலேயர் சொல்வதைச் சற்றுச் கவனிப்போம்:—

'சிவாஜியை நேருக்கு நேராகப் பார்ப்பதற்கு முன் அவர் பேயின் முகத்தைப் போன்ற முகத்தைக் கொண்ட மானுடர் என்றும், அவரைச் சூழ்ந்திருப்பவர்கள் அனைவரும் மிகவும் கொடியவர்களாய்க் கையில் ஓங்கிய வாளுடன் இருப்பார்களென்றும் எண்ணியிருந்தேன். ஆனால் அவரை நேருக்கு நேராகப் பார்த்தபோது நான் அவரைப் பற்றி எண்ணிய தவ்வளவும் முற்றிலும் மாறுபட்டது என்பதைத் தெரிந்து கொண்டேன். நாங்கள் அவரைச்

சென்று பார்க்கும் போது அவர் தோட்டத்திலொரு கிணற்றுக் கருகாகையில் கருங்கல்லால் செய்யப்பட்ட மேடையொன்றின்மேல் உட்கார்ந்து கொண்டிருந்தார். அவரருகில் மெய்க்காவலர் ஒருவருமில்லை. அக்கிணற்றில் தண்ணீர் மொள்ள வந்த ஸ்திரீகளைக் கண்டு அவர்களுடைய குடும்ப க்ஷேமலாபங்களைப் பற்றி விசாரித்கொண் டிருந்தார். அக்கிணற்றினருகில் விளையாடிக் கொண்டிருந்த குழந்தைகள் அவரருகில் சிரித்த வதனத்துடன் வந்து நின்றன. அவைகளுக்கு அவர் பழங்களையும் இன்னுமுள்ள தின்பண்டங்களையும் கொடுத்துக்கொண் டிருந்தார். அவர் முகத்தில் கருணையும் அன்பும் பொலிவுற்றன. அத்தகைய பொலிவை நாங்கள் வேறெவர் முகத்திலும் கண்டதில்லை. தன்னுடைய பகையாளிகளிடத்தில் அவர் எப்படி நடந்து கொண்ட போதிலும் அவர் தம் பிரஜைகளுக்குப் பிதாவைப் போலிருந்தார்.'

சிவாஜி பீஜபூர் சுல்தானுடன் சண்டையிடுவதுடன் நில்லாமல், மொகலாயர்களையும் எதிர்க்க வாரம்பித்தாரல்லவா? இதைக் கண்ட மொகலாய சக்ரவரத்திகள் சிவாஜியைத் தண்டிக்க எண்ணங்கொண்டு சமயம் பார்த்திருந்தார்கள். ஷாஜஹான் காலத்தில் சிவாஜியை எதிர்ப்பதற்குரிய சந்தர்ப்பங்கள் செவ்வையாய் ஏற்படாமல் போகவே அவர் சிவாஜியைப்பற்றி அவ்வளவாகக் கவனிக்காமல் விட்டுவிட்டார். அவருக்குப் பின் பட்டத்திற்கு வந்த அவருடைய குமாரராகிய அவுரங்கசீப் சிவாஜியை அடக்கிவைக்க வேண்டுமென்று பெரிதும்

எண்ணினுர். எண்ணினவர் அத்துடன் விட்டுவிடாமல் தம்முடைய தளகர்த்தர்களில் மகா கீர்த்தி வாய்ந்தவரான ஜெயசிங் என்பவர் வசம் பெரியதோர் படையை ஒப்படைத்துச் சிவாஜியை அடக்கி விட்டு வரும்படிக் கூறினுர். ஜெயசிங் மகா பெரிய தளகர்த்தரா யிருந்ததுடன் அவர் கைவசம் இருந்த படைகள் அனைத்தும் பெருத்த சண்டைகளில் அநுபவம் பெற்றவை. அத்தகைய படைகளின்முன் சிவாஜி என்ன செய்யக் கூடும்? அப்படையை எதிர்த்துப் போராடுவது வீணென்று கருதிய சிவாஜி சமாதானத்துக்கு வருவதாகத் தெரிவித்தார். இதற்கு முன்னரே ஜெயசிங் சிவாஜி பிடித்திருந்த அநேக கோட்டைகளைத் தம் வசமாக்கிக் கொண்டார். பூரந்தர் கோட்டையும் மொகலாயர்வசம் சிக்கிவிடும்போ லிருந்தது. அதன் மேல் சிவாஜி தாம் கைப்பற்றிய அநேக கோட்டைகளை மொகலாயர் வசம் ஒப்படைத்தனர். அத்துடன் நில்லாமல் பீஜபூர் சுல்தானுக்கு எதிரியாகத் தாம் மொகலாய படையில் சேர்ந்து உத்தியோகம் ஏற்றுக்கொள்வதாகவும் கூறினுர்.

அதன்மேல் ஜெயசிங் சிவாஜியை எதிர்க்கவில்லை. சிவாஜி தில்லிக்குச் சென்று மொகலாய சக்கரவர்த்தியைக் காணவேண்டுமென்று ஜெயசிங் கூறினுர். அதற்குச் சிவாஜியும் ஒப்புக்கொண்டார். சிவாஜி தம்முடைய குமாரனுகிய சம்பாஜியைத் தம்முடன் அழைத்துக்கொண்டு தில்லி சக்ரவர்த்தியைக் காண தில்லிக்குச்சென்ருர். அவுரங்கசீப் சிவாஜியை முறைப்படி உபசரிக்கவில்லை. இதைக் கண்ட சிவாஜி, அவுரங்கசீப் தம்மை அவமரியாதை செய்ததாகக்

கண்டுகொண்டார். சிவாஜி இராஜபுத்திர ரானபடியால் அவுரங்கசீபுக்குத் தாம் தாழ்ந்தவராகக் கருதாமல் மிடுக்காகவே நடந்து கொண்டார். இதைக் கண்ட அவுரங்கசீப் சிவாஜியை இச்சமயம் விட்டுவிட்டால் அவரால் தமக்குக் கெடுதல் நேரிடுமென்று கருதி அவரைச் சிறைப் படுத்தினார்.

சிவாஜியை அவுரங்கசீப் முறைப்படி வரவேற்று மரியாதையுடன் நடத்தியிருந்தால் சிவாஜி மொகலாய ராஜ்யத்துக்குப் பெருத்ததொரு தூணைப்போலிருந்து உதவிசெய்திருப்பார். அவுரங்கசீபுக்குத் தென்னிந்தியாவைப்பற்றிய கவலையே இருந்திராது. அவுரங்கசீப் வெளியாடம்பரங்களைக் கொண்டு மயங்கிவிடுபவ ராயிருந்தபடியால், அவர் சிவாஜியைப்பற்றி உள்ளது உள்ளபடி உணரவில்லை. அதனால் அவர் தம்முடைய காலத்தை யெல்லாம் சண்டை களில் கழிக்க வேண்டியதாயிற்று அவுரங்கசீப் செய்ததவறுகளில் மிக முக்கியமானது, சிவாஜியை விரோதித்துக் கொள்ளாமல் நேசனாகப் பாவித்துக் காரியங்களை நடத்திக்கொள்ளாமல் இருந்ததே யாகும்.

தில்லியில் சிறையாளராய்க் கிடந்த சிவாஜி சும்மாவிருக்கவில்லை. தில்லியினின்று எங்ஙனம் தப்பித்து வெளியேறுவது என்பதைக் குறித்தே அவர் சதா சிந்தித்துக் கொண்டிருந்தார். அச்சந்தர்ப்பங்களில் அவருடைய தந்திரம் அவர்க்குப் பெருந்துணையாயிருந்தது. அவுரங்கசீபுக்குத்தம்மேல் சந்தேகம் ஏற்படாதவாறு சிவாஜி நடந்து கொண்டார். கடைசியில் தக்க சமயம் வாய்த்தபோது தில்லியின் சீதோஷ்ணம் தமக்கும் தம்முடன்கூட வந்தி

ருப்பவர்களுக்கும் ஒத்துக்கொள்ளவில்லை யென்றும், ஆகையால் அவர்களை ஊருக்கு அனுப்பிவிட உத்திரவு கொடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டார். இனி சிவாஜியால் தனக்கு ஒரு கெடுதலும் கிடையாதென்றெண்ணிய அவுரங்கசீப் அவருடைய வேண்டுகோளுக்கு இசைந்தார். அதன்மேல் சிவாஜி தம்முடன் வந்தவர்களை ஊருக்கு அனுப்பிவிட்டுத் தாம்மாத்திரம் தில்லியிலிருந்தார்.

இங்ஙனமாகச் சிவாஜி தில்லியிலிருக்கையில் தப்பித்துக் கொள்வதற்காக ஓர் தந்திரம் செய்தார். அவர் தமக்கு உடம்பு சௌக்கியமில்லை யென்றும், பிராம்மணர்களுக்குப் போஜனமும் பலகாரங்களும் கொடுத்தால் சௌக்கியம் ஏற்படுமென்றும் சக்ரவர்த்திக்குத் தெரிவித்தார். சக்ரவர்த்தி அவருடைய வேண்டுகோளுக் கிணங்கினர். தினந்தோறும் பிராம்மணர்களுக்குப் பலகாரங்கள் கொடுக்கப்பட்டன. இப்படி யிருக்குஞ் சந்தர்ப்பத்தில் ஒரு நாள் சிவாஜி சிறைக் கோட்டத்தின் காவற்காரனைத் தன்வச மாக்கிக்கொண்டு பக்ஷணக்கூடையில் ஒளிந்துகொண்டு தப்பித்து வெளியேறி விட்டார். இதைக் கேள்வியுற்ற அவுரங்கசீப் சிவாஜியைப் பிடிக்க என்னென்ன முயற்சிகள் செய்யலாமோ அவ்வளவையும் செய்து பார்த்தார். அவருடைய முயற்சிகள் பலனளிக்கவில்லை. கடைசியில் சிவாஜி பல விதமான மாறுவேடங்களைக் கொண்டு தன்னிருப்பிடம் போய்ச் சேர்ந்தார்.

அவுரங்கசீபினிடமிருந்து தப்பித்துக்கொண்டு வந்த சிவாஜிக்கு இரண்டு வருட காலம் வரை ஒரு விதமான அமைதி ஏற்பட்டிருந்தது. சிவாஜியின் பகையாளியான

பீஜபூர் சுல்தான் சிவாஜியை விரோதித்துக் கொள்ளக் கூடா தென்று கருதி, அவருடன் நேசபாவம் பாராட்டி வந்தான். இருவரும் தங்களுக்குள் சண்டை சச்சரவிடாமல் ஒரு மித்து வாழ்ந்து வந்தனர்.

இவைகளை யெல்லாம் கண்டு சிவாஜி மயங்கிப் போக வில்லை. எப்போதாகினும் அவுரங்கசீப் தம்மைத் தாக்கு வார் என்பதை அவர் அறிந்திருந்தார். அதற்கிணங்க, தற்காப் புக்கு வேண்டிய ஏற்பாடுகளை யெல்லாம் அவர் தயாராகச் செய்து வைத்துக்கொண்டிருந்தார், இப்படி யிருக்குஞ் சந்தர்ப்பத்தில், அவுரங்கசீப் தந்திரமாய்ச் சிவாஜியைப் பிடித்துவிடுவதென்று தீர்மானித்தார். இதை உணர்ந்த சிவாஜி வெளிப்படையாகவே மொகலாய ராஜ்யத்தின் பல பாகங்களைத் தாக்க வெளிக்கிளம்பிவிட்டார். சிவாஜிக்குப் பயம் என்பதே போய்விட்டது. கொள்ளையடிக்கப் பின் வாங்கவே இல்லை. ஒரு சந்தர்ப்பத்தில் அவர் ஒரு நகரைக் கொள்ளையிடச் சென்ற போது தம்முடன் இருபதி னாயிரம் கோணிப்பைகளை எடுத்துச் சென்றார் என்று தெரிகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஒரு பட்டணத்தைக் கொள்ளையடித்துவிட்டுத் திரும்புகையில் அவர் மூவாயிரம் எருதுகளின் மேல் கொள்ளை யடித்த சாமான்களைப் போட் டுக் கொண்டு வந்தாராம். மொகலாயர்களை வெளிப்படை யாய்த் தாக்கிய சண்டையில் சிவாஜி வெற்றியடைந்தார். அது முதல் மொகலாயர்களுடைய கீர்த்தி தென்னிந்தி யாவில் அழிந்துவிட்டது. சிவாஜியின் புகழ் தென் னிந்தியா வெங்கும் பரவ ஆரம்பித்தது.

சிவாஜி தமக்கு நாற்பத்தாறுவது வயது நடக்கையில்

ராய்காட் என்னுமிடத்தில்'இந்துக்களின் 'பாதுஷா' வென்று பட்டம் சூட்டிக்கொண்டார். அது முதல் ஆறு வருட காலம் வரை அவர் தம் காலத்தைப் படையெடுப்புகளிலும், சமாதான உடன்படிக்கைகள் நடத்துவதிலும், தம்முடைய இராஜ்யத்தைப் பலப்படுத்திக் கொள்வதிலும் கழித்தார். அவருடைய வெற்றிகளில் பிரதானமானது கர்நாடகத்தில் அடைந்த வெற்றியே யாகும்.

சிவாஜி சண்டையில் மாத்திரமல்லாமல் மற்றைய துறைகளிலும் ஜெயம் பெற்று வந்தார். இச் சாமர்த்தியம் சாதாரணமாய் எல்லாருக்கும் கிடைப்பதல்ல. இராஜ்ய நிர்வாக விஷயங்களில் அவர்க்கு யாதொரு பயிற்சியும் ஏற்பட்டிரா விட்டாலும், அவர் தம்முடைய இராஜ்யத்தின் காரியங்களை அத்துறையில் நெடுங்காலம் பயிற்சி பெற்றவரைப்போல் செய்து முடித்தார். அவர் படை விஷயமாகவும் அரசாங்க விஷயமாகவும் செய்த ஏற்பாடுகள் மெச்சத் தக்கன. அவருடைய படை காலாட் படையையும் குதிரைப்படையையும் கொண்டிருந்தது. படையில் சேர்ந்திருந்தவர்கள் சண்டைக்கு வேண்டிய பயிற்சியைப் பெற்றிருந்தார்கள்; இராஜ்ஜிய நிருவாகத்தில் சிவாஜி ஜனங்களுடைய கஷ்டங்களை யெல்லாம் நீக்கி அவர்களுக்கு ஆறுதலை யுண்டாக்கினார்; ஏழைகளைப் பணக்காரர்கள் கொடுமையாய் நடத்துவதைத் தவிர்த்தார். அவர்க்கு மதத் துவேஷம் என்பதே கிடையாது. எல்லாருக்கும் ஒரே விதமான நீதியை வழங்கினார். அவருடைய இராஜ்யத்தில் திருப்தியே குடிகொண்டிருந்தது.

சிவாஜி தம்முடைய இளவயதில் எண்ணியவைகளை

வயதானபின் செய்து முடித்தார். அவர் தம் நாட்டு மக்களை மொகலாயர்களின் ஆதிக்கத்தினின்று காப்பாற்றினர். மராட்டியர்கள் தங்களுடைய மேன்மையை உணரும்படி யாய்ச் செய்தார். அவர்கள் தங்களைத் தாங்களே முன்னேற்றிக் கொள்ள வேண்டும் என்பதை அவர்களுக்குக் காட்டினர். சிதறுண்டு கிடந்த மராட்டியர்களை யெல்லாம் ஒன்று சேர்த்து அவர்களுக்கிடையில் ஐக்கியத்தை உண்டாக்கினர். மராட்டியர்கள் அனைவரும் ஓர் இனத்தவர் என்ற உணர்ச்சியை அவர்களிடை பரப்பினர். உலக விஷயங்களிலும் அவர்களுக்கு உணர்ச்சி ஏற்படும்படியாய்ச் செய்தார்.

மராட்டியர்கள் தங்களுடைய தேசத்தின் அமைப்பு காரணமாயும், சீதோஷ்ண நிலை காரணமாயும், தன்னம்பிக்கை, தைரியம், வீரம், ஊக்கம், கபடமின்மை, உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசாதிருத்தல், ஜனசமுதாய விஷயங்களில் சமத்துவம், மனிதனுக்கு மனிதன் சுதந்திரம் பெற்றவன் என்ற உணர்ச்சி ஆகிய இவைகளைப் பெற்று விளங்குகிறார்கள். இவர்களைப்பற்றி இந்தியாவுக்கு ஏழாவது நூற்றாண்டில் போந்திருந்த சீன யாத்திரி யொருவர் பின் வருமாறு கூறுகிறார்: 'மராட்டியர்கள் செருக்குக் கொண்டவர்கள்; யுத்தத்தில் கைதேர்ந்தவர்கள்; நன்றியறிதலான குணமுடையவர்கள்; தங்களுக்குக் கெடுதல் செய்தவர்களை இலேசில் விடமாட்டார்கள்; தங்களிடத்தில் வந்தடைந்தோர்களை ஆதரிக்கும் குணமுடையவர்கள்; தங்களை அகௌரவித்தவர்களைத் தண்டனை செய்துவிட்ட பின்னரே மறுவேலை பார்ப்பர்.'

சிவாஜியின் படையில் சுமார் முப்பத்தைந்தாயிரம் குதிரை வீரர்களும் எழுபதினுயிரம் காலாட்களும் இருந் தார்களென்று மதிப்பிடப் படுகிறது. இன்னும் அவ ருடைய படையில் ஓராயிரத்துக்கு மேலான யானைகளும் மூவாயிரத்துக் குட்பட்ட ஒட்டகங்களும் இருநூறு துப் பாக்கிகளும் இருந்தனவாம்.

அரசாங்க விஷயங்களில் தமக்கு ஆலோசனை கூறவும் சமயம் நேரிட்டால் உதவி செய்யவும் சிவாஜி ஒரு மந் திராலோசனை சபையை ஏற்படுத்தி யிருந்தார். அச் சபையின் அங்கத்தினர் எண்மர். ஆகவே அதற்கு அஷ்டப்ரதானம் எனப் பெயர். ஆனால், அவர்கள் கூறுகிற ஆலோசனையின்படி அவர் நடக்கவேண்டுமென்ற திட்டம் கிடையாது. சிவாஜி தம் இஷ்டம்போல் தான் அரசாங்க காரியங்களை நடத்திக்கொண்டும் போவார்.

ஆலோசனை சபையைச் சேர்ந்த எண்மருடைய வேலை களைப்பற்றியும் ஒரு சிறிது கவனிப்போம். முதல் அங் கத்தினர் பிரதம மந்திரியாவர். இவர் அரசாங்கத்தின் பொது நலத்துக்குப் பொறுப்பாளியாவர். அரசர் ஊரில் இல்லாத போது அவருடைய காரியங்களை இவர் கவனித்து வருவர். ஆலோசனை சபையைச் சேர்ந்த மற்ற அங்கத்தி னர்கள் தங்களுக்குள் சண்டை சச்சரவு இட்டுக் கொள் ளாமல் பார்த்துக் கொள்வதும் இவருடைய வேலை. அர சாங்கக் கடிதங்களிலும் சாசனங்களிலும் அரசருடைய கையெழுத்துக்குக் கீழ் இவருடைய கையெழுத்து இருக்க வேண்டும்.

இரண்டாவது அங்கத்தினர் கணக்குப் பரிசோதகர்

ஆவா. இவர் அரசாங்கத்தின் வரவு செலவுகளைப் பரிசோதிக்கவேண்டும். பரிசோதித்தபின் அவைகளை அரசருக்கு எடுத்துச் சொல்லவேண்டும். பொதுவில் அரசாங்கக் கணக்குகளையும் ஜில்லாக்களினுடைய கணக்குகளையும் பரிசோதித்தபின் அவை சரியாயிருக்கின்றன வென்பதற்காகத் தம்முடைய கையெழுத்தை அதில் இடவேண்டும்.

மூன்றாவது அங்கத்தினர் ஆஸ்தான வித்வான் ஆவர். இவர் அரசர் தினந்தோறும் செய்யும் காரியங்களைத் தொகுக்கவேண்டும். அத்துடன் அரண்மனையில் நடைபெறும் விஷயங்களையும் எழுதி வைக்கவேண்டும். அரசருடைய அழைப்புக் கடிதங்களைக் கவனிக்கவேண்டும். அரசருக்குத் தயாரிக்கப்படும் போஜனத்தில் விஷம் முதலானவை இடப்படாமல் இருக்கிறதாவென்றும் அவர் பார்த்துக் கொள்ளுதல் வேண்டும். அரசருடைய நண்பர்கள் சதியாலோசனைக் காரர்களா யில்லாமல் இருக்கிறார்களா வென்பதையும் அவர் கவனித்து வரல் வேண்டும்.

நான்காவது அங்கத்தினர் அரசர் பேரால் அவருடைய சிப்பந்திகளுக்கு எழுதப்படும் கடிதங்கள் முறைப்படி எழுதப்பட்டிருக்கின்றனவா வென்பதைக் கவனித்து அவைகளை யெல்லாம் சரிபார்க்கவேண்டும்.

ஐந்தாவது அங்கத்தினர் வெளி நாட்டுக் காரியதரிசி. வெளிநாடுகளைப் பொறுத்த விஷயங்களில் இவர் அரசர்க்கு ஆலோசனை கூறுவர். அரசாங்கத்தின் கௌரவம் வெளிநாடுகளில் நிலைபெற்றிருக்க அவர் வேண்டிய காரியங்களைச் செய்யவேண்டும்.

இராணுவ தளகர்த்தர் ஆறுவது அங்கத்தினர். இவர் இராணுவத்தை நடத்த நியமிக்கப் பட்டவர். இவர்க்குச் சண்டை ஏற்படுங் காலங்களில்தான் வேலையுண்டு.

ஏழாவது அங்கத்தினர் புரோகிதர். படித்தபிராமணர்கள், வித்துவான்கள் முதலானவர்களுக்குச் சன்மானங்கள் கொடுப்பதும், மதசம்பந்தமான விஷயங்களை முடிவு செய்வதும், ஜாதிச்சண்டைகளை விசாரித்துத் தீர்ப்பு அளிப்பதும் இவருடைய வேலை. இவர் விரதங்கள் பண்டிகைகள் முதலியவைகளை அநுஷ்டிக்க நாட்களைக் குறிக்கவேண்டும். தெய்வதூஷணைசெய்பவர்களையும், கடவுள் இல்லை என்று சொல்லுகிறவர்களையும் தண்டிப்பது இவருடைய கடமையாகும். பிராயச்சித்தங்கள் விதிப்பதும் இவருடைய வேலை. மதவிஷயங்களுக்கு இவர் நீதிபதியாவர். இவர் அரசாங்க பஞ்சாங்கத்தைக் கணிக்கவேண்டும். ஜனங்களுடைய சன்மார்க்க விருத்திக்காகவும் இவர் பாடுபடுதல் வேண்டும்.

பிரதம நீதிபதி கடைசி அங்கத்தினர். இவர் சொத்து சம்பந்தமான வழக்குகளையும், கொலை களவு சம்பந்தமான வழக்குகளையும் தீர்த்துவைக்க வேண்டும்.

நாம் மேலே எடுத்துக் கூறிய எண்மரில் இராணுவ தளகர்த்தர் தவிர மற்றவர்களெல்லாம் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள். கடைசியில் குறிப்பிட்ட இரண்டும் அங்கத்தினர்கள்தவிர மற்றை அங்கத்தினர்கள் அனைவரும் சமயம் நேர்ந்த காலங்களில் படைகளைச் சண்டைக்குநடத்தத் தயாராயிருத்தல் வேண்டும். சிவாஜி பொன்நாணயங்களை அச்சடித்து வழங்கிவந்தார்.

சிவாஜி மதசம்பந்தமான விஷயங்களில் குறுகிய நோக்கம் கொண்டிராமல் தாராளமான நோக்கங்களையே பெரிதும் கொண்டு விளங்கினர். அவர் தேவாலயங்களையும் தெய்வஸ்தலங்களையும் மதித்து அவைகளுக்குக் கேடு சூழாமல் இருந்தார். அவர் இந்துக்களினுடைய கோயில்களுக்கு மாத்திர மல்லாமல், முகம்மதியர்களுடைய மசூதிகளுக்கும் மான்யங்கள் ஏற்படுத்தினர்; பணவுதவிசெய்தார். பிராம்மணர்களில் படித்தவர்களை வரவேற்று அவர்குச் சன்மானங்கள் செய்தனுப்பினர். அவர்களுக்குளுக்கு ஆசிரமங்கள் கட்டிக் கொடுத்தார். பிராம்மணர்கள் வேதங்களை அத்தியயனம் செய்யச் சௌகரியங்கள் ஏற்படுத்தினர்.

சிவாஜி சன்மார்க்கத்தையே அநுஷ்டித்து வந்தார். அவர் காலத்தில் ஒருத்திக்கு மேற்பட்ட பெண்களை மணந்து கொள்ளல் தகாத காரியமென்று கருதப்படவில்லை. தேவதாபக்தி யுள்ளவர்களிடத்தில் அவர்க்கு விசுவாசம் ஏற்பட்டிருந்தது. அவர்களை வரவேற்றுக் கௌரவித்து வந்தார். புராண இதிகாசங்களைக் கேட்பதில் அவர்க்கு அதிக பக்தியுண்டு. கடவுளர்களைப் பற்றிய கதைகளையும் பாக்களையும் அவர் பக்தி சிரத்தையுடன் கேட்டு வருவார். அவர் தேர்ந்தெடுக்கும் உத்தியோகஸ்தர்களின்மீது யாதொரு குற்றமும் கூற முடியாது.

சிவாஜிக்குப்பின் பட்டத்திற்கு வந்த அவருடைய குமாரன் அவ்வளவு கெட்டிக்காரனுயில்லா விட்டாலும்,

அவனுக்குப்பின் மராட்டியர்களுக்குத் தலைமை வகித்த பீஷ்வாக்கள் மூலமாய் மராட்டிய ராஜ்யம் நூறு வருடங்களுக்கு மேலாகவே தலை சிறந்து விளங்கியது.

சிவாஜி தம்முடைய ஐம்பத்து மூன்றுவது வயதில் இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தார்.

இராஜா ராம் மோகன ராய்.

இராஜா ராம் மோகன ராய் வங்காளத்தைச் சேர்ந்த ஹூக்ளி ஜில்லாவிலுள்ள இரீகாநாகூர் என்னுமிடத்தில் 1772-ம் ஆண்டில் பிறந்தார். அவருடைய தகப்பனாரின் பெயர் ராமகாந்த ராய். அவர் குலின் பிராம்மண வர்க்கத்தைச் சேர்ந்தவர். அவருடைய தாயாரின் பெயர் தாரணி தேவி. இவ்வம்மையார் பிராம்மணர்க்குள் சந்தா வகுப்பைச் சேர்ந்தவர். இவ்விரண்டு வகுப்புகளும் மிகவும் வைதிகமானவை. ஆகையால் இவ்விரண்டு வகுப்புகளைச் சேர்ந்த பெற்றோர்கள் மதவிஷயங்களில் தாராளமான நோக்கங்கொண்டிராமல் குறுகிய நோக்கங்களைக் கொண்டிருந்தது ஓர் ஆச்சரியமல்ல. எனினும் அவர்கள் இருவரும் ஈசுவர தியானத்தில் தலைசிறந்து விளங்கியவர்களாகவே இருந்தனர். தாயாரான தாரணி தேவி புருஷனுடைய சொல்லைக் கடவாத உத்தமி: கற்பினையே ஆபரணமாகப் பூண்டவள்; பசித்தோர் முகம்பாராத உத்தமி.

இராஜா ராம் மோகன ராயின் தகப்பனார் முதலில் மூர்ஷிதாபாத் நவாபிடத்தில் உத்தியோகம் பார்த்து வந்தார். பின்னர் அவர் பர்த்வான் மகாராஜாவிடத்தில் உத்தியோகத்துக் கமர்ந்தார். அவ்விரண்டு இடங்களிலும் அவர் தம்முடைய வேலைகளை ஒழுங்குடனும் சிரத்தையுடனும் செய்து முடித்து அம்மன்னர்களுடைய நன்மதிப்பையும் சிநேகத்தையும் பெற்றார். அதனால் அவர்

குடும்பகஷ்டங்கள் யாது மின்றித் தம்முடைய காலத்தை இனிது கழிக்க ஏது வேற்பட்டிருந்தது.

இவர்கள் இருவரும் செய்த நற்றவத்தின் பயனாய் இவர்களுக்கு ஏற்பட்ட குமாரராகிய இராஜாராம் மோகன ராய் சிறு வயது முதற்கொண்டே இயற்கை வளங்களில் தம் கருத்தைச் செலுத்தி இயற்கை இன்பத்தை நுகர்ந்து காலங்கழிப்பதில் பிரியங் கொள்ளலானார். அதனால் அவர் அடிக்கடி மரங்களின் அடியில் உட்கார்ந்து கொண்டு இயற்கைக் காட்சிகளைக் கண்டு இன்புறுவதல்லாமல் இயற்கை வடிவமா யிலங்கும் இறைவனையும் குறித்து ஆழ்ந்து சிந்தித்த லுண்டு. சில சந்தர்ப்பங்களில் அவர் மணிக்கணக்காகவும் மரங்களின் கீழ் உட்கார்ந்து கொண்டு பறவைகளிடத்திலும் மிருகங்களிடத்திலும் சம்பாஷிப்பது வழக்கம்.

பள்ளிக்கூடத்துக் கனுப்பும் வயது வந்தவுடன் ராம் மோகனுடைய பெற்றோர்கள். அவரைத் தங்கள் ஊரி லுள்ள பள்ளிக்கூடத்திற் கனுப்பினார்கள். அவ்விடத்தில் நமது ராம் மோகன் வங்காளி பாஷையைக் கற்றுக்கொண் டார். அவருடைய காலத்தில் வங்காளமானது மொக லாயருடைய ஆட்சிக் குட்பட்டிருந்தது. ஆதலால் அக் காலத்தில் அரபி பாஷைக்கும் பாரசீக பாஷைக்குந்தான் மதிப்பு ஏற்பட்டிருந்தது. அப்பாஷைகளைக் கற்காதவர் கள் படித்தவர்களாக அக்காலத்தில் கருதப்படுவதே கிடை யாது. அக்காரணம் பற்றி நமது ராம் மோகன ராயும் அவ்விருபாஷைகளையும் கற்க வேண்டிய அவசியம் ஏற்பட்

டது. அதற்காக அவருடைய பெற்றோர்கள் அவரை பாடலிபுத்திரத்திற்கு அனுப்பினார்கள். அவ்விடத்தில் முகம்மதிய சர்வ கலாசாலை ஒன்றிருந்ததனால், வங்காளத்தின் பல பாகங்களிலிருந்தவர்களும் அவ்விடத்திற்குச் சென்று, அரபி பாரசீகபாஷைகளை முறைப்படி கற்று அப்பாஷைகளில் பாண்டித்யமும் அடைந்தனர். அவ்விடத்திலிருந்த போது அவர் முகம்மதியர்களின் வேதமாகிய குர்ஆனையும் அரபி பாஷையில் படித்து அதனுடைய விஷயங்களைக் கிரகித்துக் கொண்டார். முகம்மதியர்களில் சூபி முகம்மதியர்கள் என்ற ஒரு பிரிவினர் இருக்கின்றனர். இவர்கள் யோகம் முதலானவைகளில் தேர்ச்சியுடையவர்கள். இவர்கள் அவ்விஷயங்கள் சம்பந்தமாக அநேக புத்தகங்களையும் எழுதியிருக்கின்றனர். அப்புத்தகங்களை ராம் மோகன ராய் படிக்கச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன. அதன் பயனால் அவர்க்கு அவர்களிடத்தில் ஒரு விதமான பக்தி விசுவாசம் ஏற்பட்டது. அப்பக்தி விசுவாசம் அவர் இறக்கும் வரை விட்டு விலகவே இல்லை.

பாடலிபுத்திரத்தில் சிலவருடங்கள் தங்கி அரபி பாஷையையும் பாரசீக பாஷையையும் கற்று அவைகளில் தேர்ச்சியடைந்தபின் ராம் மோகன் ராய் அவ்விடத்தை விட்டுக் காசிக்குச் சென்று அவ்விடத்தில் சமஸ்கிருத இலக்கியங்களை முறைப்படி கற்று அவைகளிலும் பாண்டித்தியமும் புலமையும் அடைந்தார். இந்துக்களின் மதக்கிரந்தங்களில் பெரும்பாலானவை ஆரிய மொழியிலேயே யுள்ளன. அவைகளில் முக்கியமானவை வேதங்களும் சாஸ்திரங்களும் கலைக்கியானங்களு மாம். இவைகளையெல்லாம் நமது

கதாநாயகர் ஆரியமொழியிலேயே காசியில் கற்றார். அவர் உபநிஷத்துக்களில் சொல்லப்பட்ட விஷயங்களை அங்ஙனமே கரைத்துக் குடித்துவிட்டார் என்று சொல்வது மிகையாது. உபநிஷத்துக்களின் கருத்துக்கள் அவருடைய உள்ளத்தைக் கொள்ளைகொண்டு தமக்கு அடிமையாக்கிக் கொண்டன.

ராம் மோகனராய் இயல்பாகவே விஷயங்களைப் பரிசீலனை செய்து பார்க்கும் தன்மை கொண்டவர். ஆதலால், அவர் ஒவ்வொரு விஷயத்தையும் 'இது ஏன் இப்படியிருக்கிறது? இவைகளுக் கெல்லாம் காரணம் என்ன? இவைகளை ஏன் சரிப்படுத்தக் கூடாது?' என்ற பான்மையிலேயே கவனித்து வருவர். இங்ஙனம் அவர் செய்துகொண்டு போனதினால் இந்துக்கள் அநுஷ்டித்து வரும் பல விஷயங்கள் தம் மதக்கோட்பாடுகளுக்கும் கட்டளைகளுக்கும் ஒவ்வாதனவாயிருக்கின்றன என்று எண்ணலானார். எண்ணியவர் அவ்வெண்ணத்துடன் நின்றுவிடாமல் தமக்குத் தோன்றியபடி பிறருக்குப் போதிக்கவும் முற்பட்டார்.

அவர் தமக்குப்பதினாறு பிராயம் நடக்கும்போது ஒரு புத்தகம் எழுதி அதில் விக்கிரகாராதனை இந்து மதக்கோட்பாடுகளுக்கும் கட்டளைகளுக்கும் முரண்பட்டதாயிருக்கிறதென்றும், அதற்குச் சாத்திரங்களில் ஆதரவுகிடையாதென்றும் கூறினார். முதல் முதலில் வங்காள பாஷையில் வெளியான வசன காவியம் இஃதொன்றே. இதைக் கண்ட வைதிகர்கள் தங்களுடைய மதத்துக்கே ஆபத்து வந்துவிட்டதென்று அவரைத் தூஷிக்கவும் துன்புறுத்தவும்

முற்பட்டார்கள். தம்மனதில் பட்டதை பிறருடைய நன் மதிப்பையும் தூஷணைகளையும் பொருட்படுத்தாமல் எடுத் துக் கூறும் ஆண்மையைக் கொண்ட ராம் மோகன் அவர் களுடைய தூஷணைகளையும் பூஷணைகளையும் பொருட்படுத் தாதிருந்தது ஓர் ஆச்சரியமல்ல? அவருடைய தகப்பனர் மதவிஷயங்களில் மிகுதியும் சிரத்தை கொண்டவர் என்று முன்னரே கூறியுள்ளோமல்லவா? அதற்கிணங்க அவரும் ராம் மோகன ராயிடத்தில் வெறுப்புக் கொண்டு அவரைத் தம் வீட்டினின்றும் துரத்திவிட்டார். தாயாரான தராணி தேவியும், 'பெற்றமனம் பித்து பிள்ளைமனங் கல்லு' என்ற பழமொழி பொய்ப்படும்படியாய்ச் செய்துவிட்டார். அவரும் தம்முடைய பிள்ளைபால் அன்பும் இரக்கமும் செலுத்தினரில்லை.

இங்ஙனம் பெற்றோர்களால் நிராகரிக்கப்பட்ட ராம்மோ கனராய் அதற்காக வருந்தாமல் எல்லாம் இறைவன்செயல் என்று மனதைத் திடப்படுத்திக் கொண்டு தம்முடைய காரியங்களைத் தம் மனச்சாட்சியின்படி தளராத ஊக்கத்து டன் செய்து கொண்டு போனர். இந்தியாவின் பல பாகங் களில் சுற்றுப்பிரயாணம் செய்தார். இச்சுற்றுப் பிரயாணத் தின் பயனய் அவர் அநேக விஷயங்களைத் தெரிந்துகொண் டார். பின்னர் ஆகாயத்தையளாவி நிற்கும் இமயமலையையும் கால் நடையாய்க் கடந்து திபெத்துக்குச் சென்றார். அங்கே அவர் பௌத்தமதத்தின் நுட்பங்களைப் பௌத்த சந்நியாசி களின் மூலமாய்க் கற்றுக்கொண்டார். திபெத்திலிருந்த போது அங்கே பேசப்பட்ட பாஷைகளையெல்லாம் கற் றுக்கொண்டார். அவ்விடங்களிலுள்ளவர்கள் மதசம்பந்த

மாக அநுஷ்டித்துவந்த மதக்கோட்பாடுகளையும் கட்டளைகளையும் அவர் தெரிந்துகொண்டார். திபெத் வாசிகளுக்குக் குருவாயிருக்கப்பட்டவர் லாமா என்னும் பௌத்த சந்நியாசி யாவர். இவரை திபெத் வாசிகளில் ஒரு சிலர் தெய்வமாக வணங்குகின்றனர். இதைக் கண்ட ராம் மோகனராய் அவ்வழக்கத்தைக் கண்டித்துப் பிரசங்கங்கள் செய்யலானார். இப்பிரசங்கங்களை லாமாவைச் சேர்ந்தவர்கள் விரும்பவில்லை. ஆதலால் அவர்கள் ராம் மோனகராயைக் கொன்றுவிட முயற்சித்தார்கள். இவ்விஷயம் அவருக்குத் தெரிந்தது. உடனே அவர் அவ்விடத்தை விட்டுத் தந்திரமாய்த் தப்பித்துக்கொண்டு வந்து விட்டார்.

திபெத்தினின்று தப்பித்துக்கொண்டு வந்த ராம் மோகனராயை அவருடைய பெற்றோர்கள் ஏற்று உபசரிக்கலாயினர். எனினும், அவர் இச்சந்தர்ப்பத்திலும் தம் மனதுக்குப் பட்டவைகளை எடுத்து ஜனங்களுக்குப் பிரசங்கிக்க வாரம்பித்தார். பிராம்மணர்களையும் அவர்களுடைய மூட பக்தியையும் அவர் கண்டிக்க வாரம்பித்தனர். ஆகவே அவர்கள் அவரை எதிர்த்து அவர் மதத்துரோகியாவர் என்றும், தெய்வ தூஷணை செய்யும் நாஸ்திகரென்றும் கூறினார்கள். அவைகளைக்கண்ட அவருடைய தகப்பனார் தம் புத்திரனால் தமக்கெங்கே ஆபத்து வந்துவிடுமோ வென்று கருதி அவரைத் தம் இல்லத்தினின்று துரத்தி விட்டார். எனினும் அவர் தம் புத்திரர்க்கு இரகசியத்தில் தம்மாலான உதவிகளை யெல்லாம் செய்து வந்தார். இப்படியிருந்து கொண்டிருக்கையில் காலகதியால் ராம் மோகனராயினுடைய தந்தை இப்பூவுலகை நீத்து விண்ணுலகேகி

னர். அதன் பின் தாரணிதேவி தம்முடைய புதல்வனை ஏற்று அவருக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து வந்தார்.

இப்படி ராம் மோகன் தாயாருடைய பாதுகாப்பில் இருக்கையில் அவருக்கு ஆங்கில பாஷையைக் கற்க வேண்டுமென்ற ஆர்வம் ஏற்பட்டது. அவ்வார்வம் காரணமாய் அவர் தம்முடைய இருபத்திரண்டாவது வயதில் அப்பாஷையைப் பயிலத் தொடங்கினர். 'முயற்சியுடையார் இகழ்சியடையார்' 'முயற்சி திருவினையாக்கும்' என்பதற்கிணங்க அவர் ஊக்கத்தைப் பிரதானமாகக் கொண்டிருந்தமையால் ஆறுவருட காலத்திற்குள் அம்மொழியைப் பேசுவதிலும் நிகரற்ற புலமைபெற்றார். தளரா முயற்சி காரணமாய் அவர் ஈப்ரூ, லத்தீன், கிரீக், பிரென்சு ஆகிய பாஷைகளிலும் தேர்ச்சியடைந்தார்.

1600-ம் ஆண்டில் இந்தியாவுடன் வியாபாரஞ் செய்வதற்காக எலிஸபெத் மகாராணியிடமிருந்து சாசனம் பெற்று இந்தியாவுக்குப் போந்த கிழக் கிந்திய கம்பெனியார், இந்நாட்டு மன்னர்களிடை ஏற்பட்டிருந்த ஒற்றுமை யின்மை காரணமாயும் வேறு பல காரணங்களை முன்னிட்டும் தேசங்களைக் கைப்பற்றி ஆளத்தொடங்கினர். அவர்கள் கீழ் வேலைபார்க்க உத்தியோகஸ்தர்கள் தேவையாயிருந்தது. அவர்களுக்கு வேண்டிய உத்தியோகஸதர்களையெல்லாம் இங்கிலாந்திினின்று வரவழைத்துக்கொள்வது கூடாத காரியமாயிருந்தது. ஆகவே அவர்கள் இந்நாட்டு மக்களையும் தங்களிடத்தில் வேலைக்கமர்த்திக் கொள்வது வழக்கமாயிருந்தது. இப்படி யிருக்கையில் 1800-ம் வருஷத்தில்

ரங்பூர் கலெக்டர் கச்சேரியில் திவான் அல்லது ரெவினியு கலெக்டர் என்னும் உத்தியோகம் காலியாயிருந்தது. அவ்வுத்தியோகம் ராம் மோகன ராய்க்குக் கிடைத்தது. அப்போது ரங்பூரின் கலெக்டராயிருந்தவர் டிக்பி என்ற ஐரோப்பியர். ராம் மோகன் ஊக்கத்தையும் உழைப்பையும் மேற்கொண்டு ஒழுகிவந் தவரான படியால் அவரிடத்தில் கலெக்டருக்கு மதிப்பும் விசுவாசமும் ஏற்பட ஏதுவுண்டாயிற்று. அம்மதிப்பையும் விசுவாசத்தையும் ராம் மோகன ராய் தாம் உத்தியோகத்திலிருந்த வரை காப்பாற்றிக்கொண்டு வந்தார். அவர் படிப்படியாய் உத்தியோகங்களில் உயர்ந்து கொண்டே போய்க் கடைசியில் ஷெரிஷ்தார் உத்தியோகத்தையும் பெற்றுக் கடைசியில் தேக அசௌக்கியம் காரணமாய் 1813-ம் ஆண்டில் உத்தியோகத்தினின்று விலகினர்.

டிக்பி ராம்மோகன ராயைப்பற்றிக் கூறியுள்ளதாவது: நான் எழுதி வந்த கடிதங்களைப் புத்தி சாதுர்யத்துடனும் சிரத்தையுடனும் அவர் கவனித்து வந்தார். இன்னும் அவர் ஐரோப்பிய கனவான்களுடன் கடிதப்போக்குவரத்துக்களையும் சம்பாஷணைகளையும் திறம்பட நடத்தி வந்தார். இம்மாதிரி காரணங்களால் அவர் ஆங்கில பாஷையைப் பிழையின்றி எழுதவும் பேசவும் கற்றுக்கொண்டார். அவர் விடாது தினசரி சமாசாரப் பத்திரிகைகளைப் பக்தி சிரத்தையுடன் படித்து அவைகளிலிருந்த விஷயங்களை அறிந்துகொண்டார்.

காலக்கிரமத்தில் ராம் மோகன ராயினுடைய இரண்டு

சகோதரர்களும் இறந்து விட்டார்கள். அவர்கள் இறந்து போகவே குடும்பசொத்துக்கள் அனைத்தும் ராம் மோகன ராய்க்குக் கிடைத்தன.

உத்தியோகத்தினின்று விலகிய பின்னரும் அவர் வாளா யிராமல் இந்துக்களின் மூட நம்பிக்கைகளையும் கொள் கைகளையும் தாக்கலாயினர். இதைக் கண்ட அவருடைய தாயாருக்கு அவர்பால் வெறுப்பு உண்டாயிற்று. அவ் வெறுப்பு காரணமாக அவ்வம்மையார் தம் புதல்வர்மீது வழக்குகளைத் தொடுத்தார். அவ்வழக்குகளிலெல்லாம் ராம் மோகனனே வெற்றியுற்றார். அவ்வம்மையார் தம் புதல்வரைத் தாம் சாகும் பரியந்தம் வெறுத்து வந்தார். எனினும், ராம் மோகன ராய் அவைகளைப் பொருட்படுத் தாமல் தம்மாலான உதவிகளை யெல்லாம் தம் தாயாருக்குச் செய்து வந்தார். இவைகளைக் கண்ட அவருடைய தாயார் ஒரு சந்தர்ப்பத்தில் அவரை அன்புடன் விளித்து, 'என் அருமைக் குமரா, யான் யாத்திரை நிமித்தம் ஜெகந்நாதம் செல்லுகிறேன். திரும்பி வருவேனென்ற நிச்சயமோ கிடையாது. நீ சொல்வதும் செய்வதும் முறையானவை களாயிருக்கலாம். எனக்கோ தைரியம் போதாது; வயதுமாகிவிட்டது. பாலியத்திலிருந்து மேற்கொண்டு ஒழுகிவந்த ஆசார அநுஷ்டானங்களை விட்டுவிட என் மனம் ஒருப்படவில்லை இத்தள்ளாத வயதில் அவைகளை விட்டொழித்தல் எனக்குச் சௌகரியத்தை விளை விக்கக் கூடியதே. என்றாலும், பழைய வாசனை என்னை விடாமல்பிடித் தாட்டுகின்றது. என் செய்வேன்? நான் போய் வருகிறேன்' என்று கூறிச் சென்றார். பின்னர் அவ்

வம்மையார் திரும்பிவராமல் அவ்விடத்திலேயே உயிர் துறந்தார்.

ராம் மோகனராய் உத்தியோகத்திலிருந்த காலையிலும் சும்மா இராமல் மதசித்தாந்தங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்துகொண் டிருப்பர். சாயந்திர வேளைகளில் அவர் கங்கை நதிக்கரை யோரத்தில் உட்கார்ந்துகொண்டு மத விஷயங்களில் புலமை கொண்ட சந்நியாசிகளுடனும் மற்ற வர்களுடனும் தர்க்கிப்பர். இந்துக்கள், முகம்மதியர்கள், ஜைனர்கள் என்ற வித்தியாசம் பாராட்டாமல், மத விஷயங்களில் பண்பட்டவர்கள் எவராயிருந்தாலும் அவர்களுடன் தர்க்கஞ்செய்து அவர்களுடைய கூற்றுக்களைக் கிரகித்துக் கொண்டு தம்முடைய கருத்துக்களையும் வெளியிடுவர்.

ஒரு சந்தர்ப்பத்தில் ராம் மோகன ராயினுடைய தாயார் அவரிடத்தில் வெறுப்பு கொண்டு அவரைத் தம் இல்லத்தை விட்டுச் செல்லும் படியாய்க் கட்டளையிட்டார். அதற்கிணங்க அவர் ரகுநாதபூர் எனுமிடத்திற்குச் சென்று அவ்விடத்தில் சிறியதோர் வீடு கட்டிக்கொண்டு வசிக்கலானார். அவ்விடத்திலிருந்த போதும் அவர் சும்மாயிராமல் மதக்கிரந்தங்களைப் பரிசீலனைசெய்வதிலும் மத வாராய்ச்சிக்காரர்களுடன் தர்க்கிப்பதிலும் காலங் கழித்து வந்தார். பின்னர் அவர் அவ்விடத்தை விட்டுக் கல்கத்தா வந்து சேர்ந்தார். கல்கத்தாவிலிருந்த போது அவர் வேதாந்த சித்தாந்தத்தைக் குறித்தும் வேதாந்த சாரத்தைக் குறித்தும் புத்தகங்கள் வெளியிட்டார். அவர் 1816-17-ம் ஆண்டுகளில் உபநிஷத்துக்களை வங்காள

பாஷையிலும் ஆங்கில பாஷையிலும் மொழிபெயர்த்தார். அத்துடன் நில்லாமல் தம் சொந்த செலவிலேயே இப்புத்தகங்களை அச்சிட்டு ஜனங்களுக்கு இலவசமாக வழங்கினர். இதனல் வைதிகர்கள் அவர் பால் கோபமூண்டு, அவரை வாய்க்கு வந்தபடியெல்லாம் திட்டினர்கள். துண்டுப்பிரசுரங்கள் மூலமாயும் அவருடைய கௌரவத்துக்குக் கேடு சூழ்ந்தார்கள். 'பொறுத்தவர் பூமியாள்வர்; பொங்கினவர் காடாள்வர்', 'பொறுமை கடலினும் பெரிது' என்ற திருவாக்குகளைப் பூஷணமாகக் கொண்ட ராம் மோகன்ராய் அவர்களுடைய வசைமொழிகளுக்கும் இழி செயல்களுக்கும் கோபங்கொள்ளாமல் தம் மனச்சான்றுக்குச் சரி என்று பட்டவைகளைத் தளரா ஊக்கத்துடன் எடுத்துச் சொல்லிக் கொண்டும் செய்து கொண்டும் போனர்.

ஸ்ரீமான் ராம் மோகன ராய் குர்ஆனை அரபி பாஷையில் படித்தது டன் நில்லாமல் கிறிஸ்தவர்களின் வேதமாகிய பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் ஈப்ரூ கிரேக்க பாஷைகளில் கற்றுர். அவைகளைக் கற்ற அவர் 1820-ம் ஆண்டில் 'சமாதானத்துக்கும் மகிழ்ச்சிக்கும் வழி காட்டியான இயேசுவின் கட்டளைகள்' என்ற புத்தகத்தை வெளியிட்டார். அந்நூலில் அவர் இயேசுநாதர் கடவுள் அல்லர் என்றும் தேவனுடைய அடியவர்—மதப்போதகர்—என்றும் எடுத்துக் காட்டினர். அதன் மேல் கிறிஸ்தவ பாதிரிகள் அவர் பால் கோபமூண்டு அவரைக் தாக்கவாரம்பித்தார்கள். கிறிஸ்தவர்கள் சார்பாயிருந்து ராம் மோகனரை எதிர்த்தவர்

டாக்டர் மார்ஷ்மான் என்னும் பாதிரி. இவர்கள் இருவருக்கும் பத்திரிகைகளில் சொற்போர் நடந்தது. ஒவ்வொருவரும் தங்கள் தங்கள் கட்சிக்கு ஆதாரமான சாட்சியங்களை எடுத்துக் காட்டினார்கள். டாக்டர் மார்ஷ்மான் எடுத்துக் காட்டிய ஆதாரங்கள் இங்கிலாந்திலும் பிரசுரிக்கப்பட்டன. மோகன ராய் எடுத்துக் காட்டிய ஆதாரங்கள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் பிரசுரிக்கப்பட்டன.

நிற்க, ராம் மோகன ராய் எடுத்துக் காட்டிய ஆதாரங்களைக் குறித்து டாக்டர் கார்பெண்டர் எனும் பெரியார் கூறியுள்ளதாவது: 'ஸ்ரீ ராம் மோகன ராய் அவர்களுக்குள்ள விஷய ஆராய்ச்சியும் ஆராய்ந்த விஷயங்களை எடுத்துச் சொல்லும் நேர்மையும், மத விஷயங்களைத் திரித்துக் கூறாமல் உள்ளது உள்ளபடியே எடுத்துரைக்கும் பான்மையும், சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் என்ற சாமர்த்தியமும், விஷயங்களை ஒன்று படுத்திக்காட்டும் வழியும், தெளிவுற விளக்கும் சக்தியும், அபிப்பிராயங்களை மனச்சான்று சொல்லுகிறபடி எடுத்துக் கூறும் தைரியமும் மெச்சத் தக்கன.'

பின்னரும் அநேக சந்தர்ப்பங்களில் அவர்க்கும் கிறிஸ்தவ பாதிரிகளுக்கும் மதசம்பந்தமான விஷயங்களில் வேற்றுமைகள் ஏற்படலாயின. அவைகளுக்கென்றே அவர் ஒரு அச்சுக் கூடத்தையும் நிறுவினார். கிறிஸ்தவ பாதிரிகள் இந்துக்களின் மதக்கிரந்தங்களை தூஷிக்கலாயினர். இத்தூஷணைகளுக்குப் பதிலளிப்பதற்காக அவர் ஒரு பத்திரிகையையும் ஆரம்பித்து நடத்தினார். அவர்

கடவுளே தந்தையாகவும் குமாரனாகவும் பரிசுத்த ஆவியாகவு மிருக்கிறார் என்று கிறிஸ்தவர்கள் சொல்லும் கொள்கையும் இந்துக்களுடைய மும்மூர்த்தி கொள்கையும் ஒன்றே யாகுமென்று தக்க ஆதாரங்களைக் கொண்டு ஸ்தாபிதப்படுத்தினார். இதன் பலனாக ஆடம் என்ற பாதிரியார் ' கடவுளே தந்தை யாகவும் குமாரனாகவும் பரிசுத்த ஆவியாகவு மிருக்கின்றார் ' என்ற கொள்கையை விட்டுக் 'கடவுள் ஒருவர்; அவர் தந்தையாகவும் குமாரனாகவும் பரிசுத்த ஆவியாகவும் இருக்கவில்லை' என்ற கொள்கையினரானார்.

கல்கத்தாவில் இருந்த ஞான்று ராம் மோகன ராய் 'உள்ளுவார் உள்ளத்தே உறைகின்றவனாகிய' கடவுளை வணங்குவதற்காக ஆத்மீய சபையொன்றைக் கண்டனர். வேதங்களை அத்தியயனம் செய்வதற்காக அவர் 'வேத மந்திரம்' என்ற சபையொன்றையும் ஏற்படுத்தினார். இவ்விடத்தில் வேதம் போதிக்கப்பட்டு வந்தது. இச்சபை ஏற்பட்டதன் காரணமாய் அநேகர் வேதங்களிலுள்ள விஷயங்களை அறிந்துகொள்ளச் சந்தர்ப்பங்கள் ஏற்பட்டன.

1828-ம் வருடத்தில் ராம் மோகன ராய், சர்வ வியாபகனாயும் சர்வ சக்திமானாயும் அழிவற்றவனாயும் மனோ வாக்குக் காயங்களுக் கப்பாற்பட்டவனாயும் நிர்விகாரனாயும் உலகப் படைப்புக்கும் காத்தலுக்கும் காரணனாயு முள்ள இறைவனை வணங்குவதற்காகப் பிரம்ம சமாஜம் என்ற ஒரு சபையை ஏற்படுத்தினார். கடவுள் ஒருவர் என்பதை அவர் சந்தேகமின்றி உணர்ந்திருந்தார். அவரை

அடையவேண்டியது மானுடதேக மெடுத்தவர்களின் கடமை என்பது அவருடைய சித்தாந்தமாகும். ஆகையினால் அவர் எந்த மதத்தையும் அதிகமாகப் பாராட்டாமல் எல்லா மதங்களிடத்திலும் அநுதாபங் காட்டிவந்தார். பிறர் தம்மை வேதாந்தி யென்றும் கிறிஸ்தவரென்றும் முகம்மதிய ரென்றும் ஜைனரென்றும் கூறிவந்தாலும் கூட அவைகளை அவர் பொருட்படுத்துவதே கிடையாது. நல்ல விஷயங்கள் எந்த மதத்திலிருந்தாலும் அவைகளை எடுத்துக் கொள்ளவேண்டு மென்பதே அவருடைய கோட்பாடு. மூட நம்பிக்கைகளையும் மூடக்கொள்கைகளையும் மதத்தின் பேரால் பரப்பக் கூடாது என்று அவர் கருதிவந்தார். அதற்காக அவர் தம் ஆயுட்காலமெல்லாம் உழைத்தார்.

ராம் மோகன ராய் மதசம்பந்தமான விஷயங்களுடன் நின்று விடாமல், ஜனசமுதாய சீர்திருத்தங்களிலும் ஈடுபட்டு அத்துறையில் அபாரமான காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். 1829-ம் வருஷத்திற்கு முன் இந்துக்களிடை 'சககமனம்' அல்லது 'உடன் கட்டை யேறல்' என்ற ஒரு கொடிய வழக்கம் இருந்தது. அவ்வழக்கத்தின்படி புருஷன் இறந்துவிட்டால் அவனுடன் அவனுடைய மனைவியையும் சேர்த்துக் கொளுத்திவிடுவது வழக்கம். மோகனருடைய தமையனார் இறந்தபோது அவருடைய மனைவியும் உடன் கட்டை யேறத் துணிந்தாள். அதற் கிணங்க அவளையும் கயிறுகளால் பிணைத்துக் கட்டிப் பிரேதத்துடன் சுடுகாட்டிற்கு எடுத்துச் சென்றார்

கள். கணவனுடைய பிரேதத்துடன் இவளையும் வைத்துத் தீமூட்டினார்கள். தீயானது கொழுந்துவிட்டெரிய வாரம்பித்தது. அதைக் கண்ட அப்பெண் உயிர் தப்பித்துக் கொள்ள வெண்ணிக் கைகால்களை உதறிக்கொண்டு எழுந்திருக்க வாரம்பித்தாள். இதைக் கண்டவர்கள் அவள் எழுந்திருக்க வொட்டாதவாறு அவளைக் கழிகளாலும் மூங்கில்களாலும் புடைத்துத் துன்புறுத்திச் சாகும்படி செய்தனர். இக்காட்சியை யுடனிருந்து கண்ட ராம் மோகனரின் மனம் படாதபாடு பட்டது. இக் கொடிய வழக்கத்தை ஒழிக்க அன்று முதற்கொண்டே அவர் கங்கணங் கட்டிக்கொண்டு துண்டுப் பிரசுரங்கள் மூலமாய் உடன்கட்டை யேறல் கொடிய வழக்கமென்றும், அதற்குச் சாத்திரங்களில் ஆதாரங் கிடையாதென்றும் பிரசாரஞ் செய்தார். அத்துடன் நில்லாமல் பிரசங்கங்கள் செய்தும் அவ்வழக்கத்தை யொழிக்க அவர் பாடுபட்டார். மதாசாரியர்களுடன் சம்பாஷித்து அவர்களையும் தம் கொள்கைகளுக்குத் திருப்ப முயன்றார். இங்ஙனமாக அவர் உடன்கட்டை யேறல் என்னும் கொடிய வழக்கத்தை ஒழிப்பதற்காகப் பன்னிரண்டு வருடகாலம் பாடுபட்டார். இப்படி அவர் பாடுபட்டுக் கொண்டு வருகையில் அவருடைய முயற்சி கைகூடும் காலம் வந்தாற்போல் ஜனங்களின் முன்னேற்றத்தில் சிரத்தை கொண்ட லார்டு வில்லியம் பெண்டிங் என்பார் கவர்னர் ஜெனரலானார். அவருடைய ஆதரவு ராம் மோகனருக்குக் கிடைத்திருந்தது. அவர் சந்தர்ப்பங்கள் வாய்த்தபோதெல்லாம் நமது ராம் மோகன ராயுடன்

உடன்கட்டை யேறல் எனும் விஷயத்தைப்பற்றி ஆலோசிப்பர். இப்படியாக இருவருங் கலந்து பேசி உடன்கட்டை யேறல் எனும் கொடிய வழக்கத்தை நிறுத்திவிடுவது அத்தியாவசியமென்று கருதினார்கள். அதன்படி 1829-ம் வருடத்தில் ஒரு சட்டம் பிறப்பித்து உடன்கட்டை யேறல் சட்ட விரோதமானதென்று தீர்மானித்தார்கள். அது முதற் கொண்டு உடன் கட்டை யேறல் எனும் கொடிய வழக்கம் நின்றுவிட்டது. இச்சட்டத்திற்கு விரோதமாகச் சிலர் கிளம்பிப் பார்லிமென்ட் சபைக்கு விண்ணப்பித்துக் கொண்டார்கள். அவர்களுடைய விண்ணப்பத்தை ஏற்ற பார்லிமென்ட் சபையார் விசாரணை செய்து இறுதியில் அதைத் தள்ளி விட்டனர். அப்போது ராம் மோகன ராய் இங்கிலாந்து சென்றிருந்தபடியால் அவ்விண்ணப்பம் விசாரிக்கப்படுங் காலையில் பார்லிமென்டில் இருந்து அவர் விஷயங்களைக் கவனிக்கக் கூடியவரானார்.

ஒருவன் இரண்டு மூன்று மனைவிகளைக் கலியாணஞ் செய்துகொள்ளும் வழக்கத்தையும் ராம் மோகன ராய் கண்டித்தார். குலின் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் பணத்திற்காக ஆசைப்பட்டு அநேக பெண்களை மணந்து கொள்வது வழக்கமாயிருந்தது. இக்கொடிய வழக்கத்தை ஒழிக்கவும் அவர் வெகு பாடுபட்டார். இந்து விதவைகளின் பரிதாப நிலையும் அவருடைய கவனத்தை ஈர்த்தது. இத்துறையிலும் அவர் பாடுபட்டார். நம் நாட்டுப் பெண்மக்கள் இப் பெரியாருக்கு எவ்வளவு கடமைப்பட்டிருக்கிறார்கள் என்பதை வாசகர்களே ஊகித்தறியலாம். விதவைகளின் புனர் விவாகத்திற்கு மூலகாரணமா யிருந்தவர்

ராம் மோகனராயே யாவர். அவர் விதவைகளின் புனர் விவாகத்திற்குச் சாத்திரங்களினின்றும் தக்க ஆதாரங்களை எடுத்துக் காட்டினார்.

நம் நாட்டில் ஆங்கில பாஷை அபிவிருத்தியடைவதற்காக ராம் மோகன ராய் பெரிதும் பாடுபட்டார். தாய்ப் பாஷைகளில் தோன்றும் இலக்கியங்களின் அபிவிருத்திக்காகவும் அவர் பாடுபட்டார். ஆரம்பமுதற்கொண்டே இந்தியாவின் கல்வி அபிவிருத்தி விஷயத்தில் கிறிஸ்துவ பாதிரிமார்கள் தளரா ஊக்கங் காட்டி வந்திருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்களில் ஒருவர் அலெக்சாண்டர் டப் என்பவர். அவர் கல்கத்தாவில் ஆங்கில பாடசாலை யொன்று ஸ்தாபிக்க முயன்றபோது அவர்க்குப் பெருந்துணையா யிருந்தவர் நமது கதாநாயகரே யாவர். பின்னர் அவர் டேவிட் ஹேர், சர் எட்வர்ட் ஹைட் என்பவர்களின் துணை கொண்டு, 1817-ம் வருஷத்தில் கல்கத்தாவில் ஹிந்து காலேஜ் என்ற ஒரு கல்லூரியை ஏற்படுத்தினார். இப்போது நம்மவர்கள் படித்துவரும் ஆங்கில கல்விக்கு மூலகாரணமாயிருந்தவர் லார்டு மெக்காலே என்னும் ஆங்கில கனவான் ஆவர். அவர் இந்தியர்களுக்கு ஆங்கிலபாஷையின் மூலமாகக் கல்வி போதிக்கப்பட வேண்டுமென்று கருதி, அதற்கான ஏற்பாடுகளைச் செய்தபோது அவர்க்குப் பெருந்துணையாய் நின்றவர் ராம் மோகனராயே. பெண்மக்களுக்குக் கல்வி அவசியமென்பதை நமது கதாநாயகர் உணர்ந்து அதற்காகவும் பெரிதும் பாடுபட்டார். 'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்ற மகற்கு' என்பதற் கிணங்க நம் நாட்டுப் பெண்கள் தங்களுடைய

கல்விக்காக ராம் மோகன ராயிக்குப் பெரிதும் கடமைப் பட் டிருக்கிறார்கள்.

நடை உடை பாவனைகளிலும் அரசியல் முன்னேற்றத் திலும் இங்கிலாந்து மக்கள் எங்ஙனமிருக்கிறார்கள் என்பதைத் தெரிந்துகொள்வதற்காக ராஜா ராம் மோகன ராய் இங்கிலாந்துக்குச் செல்லவேண்டுமென்று எண்ணியிருந்தார். இப்படியிருக்கையில் அவர் இங்கிலாந்துக்குச் செல்லச் சந் தர்ப்பம் ஒன்று வாய்த்தது.

மாஜி தில்லி சக்ரவர்த்தி இங்கிலாந்து அரசரிடத்தில் தமக்குள்ள குறைகளை முறையிட்டுக் கொள்ள எண்ணி யிருந்தார். அவர், ராஜ ராம் மோகன ராயின் அபார சக்தி களைக் கண்டு அவரை இங்கிலாந்துக்குத் தூதனுப்பி அவர் மூலமாய்த் தம் குறைகளை நிவர்த்தித்துக் கொள்ள எண்ணி, அவர்க்கு இராஜா யென்ற பட்டத்தை நல்கி, அவரை இங் கிலாந்துக்கு அனுப்பினர். 1830- வருஷம் நவம்பர்மீ 15-ந் தேதியன்று ராம் மோகன ராய் இங்கிலாந்துக்குப் பிரயாண மானார். அவருடைய கீர்த்தி இதற்கு முன்னமே இங்கிலாந் தில் பரவியிருந்தபடியால் அவருக்குக் கஷ்டமென்பது இல் லாமல் போய்விட்டது. அவர் தகுந்த மரியாதைகளுட னும் கௌரவங்களுடனும் வரவேற்கப் பட்டார். அவரைத் தூதராகக் கருதி அம்முறையிலேயே அவரை நடத்தினர் கள். அவரைக் கௌரவிப்பதற்கு விருந்தொன்றும் நடத் தப்பட்டது.

காமன்ஸ் சபையைச் சேர்ந்த ஒரு சில அங்கத்தினர்கள்

கொண்ட கமிட்டியொன்று இந்தியாவின் நீதிபரிபாலனத்தையும் நிலவருமானத்தையும்பற்றிக் கவனிப்பதற்காக அப்போது இங்கிலாந்தில் நியமிக்கப்பட்டிருந்தது. அக்கமிட்டியின் முன்னிலையில் நமது கதாநாயகர் சாட்சியங் கொடுத்தார். இந்தியாவிலுள்ள சுதேசிகளின் நிலையைக் குறித்தும் அக்கமிட்டியார் நமது கதாநாயகரை விசாரித்தார்கள். அவர் கொடுத்த சாட்சியங்கள் அக்கமிட்டிக்கு மிக்க துணைசெய்தன.

1831-ம் வருஷத்தில் ராம் மோகனர் பிரான்சுக்குச் சென்றிருந்தார். அப்போது பிரான்சு அரசரைக் கண்டு அவருடன் சம்பாஷித்ததல்லாமல், இரண்டு தடவைகளில் அவருடன் விருந்தும் சாப்பிட்டார். ஏஷியாடிக் சொசைடியின் கௌரவ அங்கத்தினராகவும் அவர் நியமிக்கப்பட்டார். பின்னர் 1833-ம் ஆண்டில் இங்கிலாந்துக்குத் திரும்பி வந்து இந்தியா மசோதா சட்டமாகும் வரை அவ்விடத்திலேயே யிருந்தார்.

இங்கிலாந்திலிருந்தபோது, ராஜா ராம் மோகன ராய் இந்துக்களின் மதக் கிரந்தங்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து அச்சிட்டு ஜனங்களுக்கு வழங்கினார்; மதவிஷயங்களில் பாண்டித்யம் அடைந்தவர்களைக் கண்டு அவர்களுடன் சம்பாஷித்தார். இங்கிலாந்தி லிருந்தபோது அவர்க்கு அநேகம் பெரிய மனிதர்கள் சிநேகிதராயினர். அவர்களில் முக்கியமானவர்கள் கவியாகிய காமெலும், பண்டைமொழி ஆராய்ச்சியாளரான ரோசனும், சரித்திராசிரியரான ராஸ்கோவும், மதசிந்தாந்தியான பென்

தாமும் ஆவர். ரோசன் என்பவர் இருக்குவேதம் சம்பந்தமாகத் தமக் கேற்பட்டிருந்த சந்தேகங்களை நமது கதாநாயகர் மூலமாய் நீக்கிக்கொண்டார். மதசிந்தாந்தியான பென்தாம் என்பார் நமது கதாநாயகர் மானுடவர்க்கத்தின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்டதைக் குறித்துப் புகழ்ந்துள்ளார்.

பத்திரிகைகளின் சுதந்திரத்துக்காகவும் நமது கதாநாயகர் பாடுபட்டிருக்கிறார். வங்காள பாஷையில் முதல் முதலாக வசனகாவியம் செய்தவர் ராம் மோகன ராய் என்றேமல்லவா? இவர் பாக்கள் பாடுவதிலும் சமர்த்தராயிருந்தனர். அவைகள் விஷயச் செறிவுடனும் அர்த்த புஷ்டியுடனும் கூடியவைகளாயிருக்கின்றன. அப்பாக்களை இன்றைக்கும் வங்காளிகள் தங்களுடைய இல்லங்களில் பாடிவருகின்றனர்.

அரசியியல் சம்பந்தமான வேலைகளை இங்கிலாந்தில் செய்ததுடன் திருப்தியடையாமல் ராம் மோகன ராய் இந்தியாவிலும் செய்யவாரம்பித்தார். இவர் அதற்கென்று ஒரு பத்திரிகையை ஏற்படுத்தி அதன்மூலமாய் இந்துக்களுக்கும் முகம்மதியர்களுக்கும் அரசியல் ஞானத்தை ஊட்டி வந்தார். அவர் தம்முடைய சொத்தைப் புத்தகங்கள் துண்டுப் பிரசுரங்கள் ஆகிய இவைகளை அச்சிட்டு ஜனங்களுக்கு வழங்குவதில் பெருபாலும் செலவிட்டார் என்று கூறுவது மிகையாகாது.

ராம் மோகன ராயின் குடும்பவாழ்க்கையைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். அவருக்கு மூன்றுதரம் விவாக

மாயிற்று. முதல் மனைவி அவருடைய பன்னிரண்டாவது வயதில் இறந்தனள். பின்னர் அவருடைய தகப்பனார் அவருக்கு வேறொரு மனைவியைக் கலியாணஞ் செய்து வைத்தார். அவள் உயிருடனிருக்கும்போதே அவருடைய தகப்பனார் இன்னொரு பெண்ணையும் அவர்க்குக் கலியாணம் செய்து வைத்தார். அவருக்கு இரண்டாவது மனைவி மூலமாய் இரண்டு புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் ஒருவர் கல்கத்தா ஹைகோர்ட்டின் முதல் இந்திய நீதிபதியாக நியமிக்கப்பட்டார். ராம் மோகன ராய் சாந்த குணங் கொண்டவர்; எல்லாரிடத்திலும் அடக்க ஒடுக்கமாய் நடந்து கொள்வார்; பொறுமையையே பூஷணமாகக் கொண்டவர்; தன்னலமென்பது கருதாத உத்தமர். பிள்ளைகளே, இத்தகைய குணங்களை நீங்களும் கொண்டு வாழ்வீர்களாக!

இராஜா ராம் மோகன ராயின் குணங்களைப்பற்றி எழுதுகையில் ஒருவர் 1845-ம் ஆண்டில், கல்கத்தா ரெவ்யூவில் பின்வருமாறு எழுதியிருக்கிறார் : 'ராம் மோகன ராய் உண்மையிலேயே பெரிய மனிதர். அவர் பல துறைகளிலும் புத்தி சாதுர்யத்துடன் விளங்கியதல்லாமல், கீர்த்தி பெற்றும் வந்தார். அவருடைய உழைப்புகள் அனைத்தும் தகுதியான பலனையே அளித்தன. அவருடைய தீர்ப்புகள் முறையானவை. அவர் மனதைப் பலவிதத்திலும் அலையவிடமாட்டார். அவரைக் கல்விக்கடலென்னலாம். அவருக்கிருந்த ஆராய்ச்சித் திறமை ஒப்பற்றது. அவர் அறிவிலும் நற்குணங்களிலும் தலைசிறந்திருந்தவர்;

கனிவுடன் கூடிய இருதயத்தைக் கொண்டவர். மானிட வர்க்கத்துக்கு உழைப்பதே எல்லாக் கடமைகளிலும் மேலான கடமை என்பதை அவர் உணர்ந்து அதன்படி காரியங்களைச் செய்துகொண்டு போனார்.'

இங்கிலாந்திலுள்ள பிரிஸ்டல் நகரில் டாக்டர் கார்ப் பெண்டர் வசித்து வந்தார். அவருக்கும் நமது கதாநாய கருக்கும் அத்தியந்த சிநேகம் ஏற்பட்டிருந்தது. அச் சிநேகம் காரணமாய் அவர் நமது கதாநாயகரைத் தம் இருப்பிடத்திற்கு அழைத்திருந்தார். அவ்வேண்டுகோளை ஏற்ற ராஜா ராம் மோகன ராய் 1833-ம் வருஷ ஆரம்பத் தில் டாக்டர் கார்ப்பெண்டரின் விருத்தினராய்ப் பிரிஸ்டல் நகரம் சேர்ந்தார். அங்கு அவர் தக்க விதமாய் வரவேற் கப் பெற்றுக் கௌரவமடைந்தார், இப்படி யிருந்து கொண்டிருக்கையில் அவர்க்குச் சுரம் கண்டது. தகுந்த வைத்திய சிகிச்சைகள் செய்யப்பட்டும் அவைகள் பிரயோ ஜனப்படவில்லை. கடைசியில் ராம் மோகன ராய் 1833-ம் ஆண்டு செப்டம்பர்மீ 27-ந் தேதியில் பிரிஸ்டல் நக ரிலேயே காலஞ் சென்றார்.

அவர் இறந்த பத்து வருடங்களுக்குப் பிறகு 1844-ம் வருஷத்தில் அவருடைய நண்பரான துவாரக நாத் தாகூர் என்பார் பிரிஸ்டலில் சமாதி ஒன்று கட்டி அதன்மேல் பின் வருமாறு எழுதினார் :—

'இக்கல்லின் கீழ் ராஜா ராம் மோகன ராய் அடக்கஞ் செய்யப்பட்டிருக்கிறார். அவர் ஒரே ஒரு கடவுள் தான்

உண்டு என்ற கொள்கையில் திடமான அபிப்பிராயங் கொண்டவர். அவ்வொரு கடவுளிடத்திலேயே தம் உடல் பொருள் ஆவியை யெல்லாம் அவர் தத்தஞ் செய்தார். அவர்க்கு இயற்கையிலேயே சாமர்த்தியங்கள் ஏற்பட்டிருந் தன. அச்சாமர்த்தியங்களின் துணைகொண்டு அவர் தம் முடைய தளரா ஊக்கத்தினால் பல பாஷைகளில் பாண்டித் யம் நிரம்பப்பெற்றவ ரானார். அவர் இந்தியாவை சமு தாய சீர்திருத்தத் துறையிலும் நல்லொழுக்கத் துறை யிலும் இன்னுமிவை போன்ற பிற துறைகளிலும் முன் னேற்றப் பாடுபட்டார். விக்கிரகாராதனையைக் கண் டித்து, உடன் கட்டை யேறல் எனும் கொடிய வழக்கத் தையும் ஒழிக்க அவர் செய்த பெரு முயற்சிகள் பாராட் டத்தக்கன. பொதுவாக அவர் மானுடவர்க்கத்தின் முன் னேற்றத்திற்காகக் கஷ்டப்பட்டுக் கடவுளின் கீர்த்தி யை அதிகப்படுத்தினார். அத்தகைய பெரியாரின் ஞாப கார்த்தமாக இக் கல் இங்கே நடப்பட்டிருக்கிறது.'

ஸ்ரீ கோபால கிருஷ்ண கோகலே.

ஸ்ரீமான் கோபால கிருஷ்ண கோகலே அவர்கள் 1866-ம் ஆண்டில் இரத்தினகிரி ஜில்லாவைச் சேர்ந்த சிப்லன் தாலுக்காவிலுள்ள ஒரு கிராமத்தில் பிறந்தவர். அவருடைய பெற்றோர்கள் எளிய குடும்பத்தைச் சேர்ந்தவர்களாயிருந்த போதிலும் கௌரவம் வாய்ந்தவர்களாகவே இருந்தனர். அவருடைய தகப்பனார் கோல்ஹாபூர் சமஸ்தானத்துக்குட் பட்ட காகால் சமஸ்தானத்தில் ஒரு சிறிய உத்தியோகம் வகித்து வந்தார்.

அவர் கோபால கிருஷ்ணர் பன்னிரண்டு வயது சிறுவரா யிருக்கையிலேயே இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவனுடைய திருவடி நிழலை அடைந்தனர். ஆகையால் நமது கோகலே தம்முடைய காலத்தைக் காகாலிலும் கோல்ஹாபூரிலும் கழிக்கவேண்டிய தாயிற்று. அவருக்கு மூத்த சகோதரர் ஒருவர் இருந்தார். அவருடைய பெயர் கோவிந்த ராவ். அவர் கோகலேயின் உற்ற துணையாயிருந்து அவருக்குக் கல்வி போதித்தார்.

கோபால கிருஷ்ண கோகலே ராஜாராம் ஹைஸ்கூலில் படித்து 1881-ம் ஆண்டில் மெட்ரிக்குலேஷன் பரீட்சையில் தேறினர். பின்னர் 1884-ம் ஆண்டில் பம்பாய் எல்பின் ஸ்டன் கல்லூரியிலிருந்து பி. ஏ. பரீட்சையில் தேறினர். அவர் பள்ளிக்கூடத்திலும் கல்லூரியிலும் படிக்குங் காலத்

தில் சாதாரண சிறுவர்களைப் போலவே இருந்தார். கல்வித் துறையில் அதிகமான முன்னேற்றங்களை அவர் காட்டவில்லை யெனினும், மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் வகுப்பில் முன்னேற்றமடைய அவர் அடிக்கடி விரும்புவ துண்டு. அவ்விருப்பம் அவர்க்குக் கைகூடாமலே இருந்தது.

பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்த போதே அவர்க்கு அபாரமான ஞாபகசக்தி ஏற்பட்டிருந்தது. அதை அவர் நாளடைவில் விருத்தியாக்கிக்கொண்டார். இத்தகைய ஞாபகசக்தி அவருக்குப் பிற்காலத்தில் பெருந்துணையா யிருந்தது. அவருடைய ஞாபக சக்தியைக் கண்டு அவர் எதிரிகளும் அவரைக் கொண்டாடினார்கள். ஒரு விஷயத்தை ஒரு தரம் படித்துவிட்டால் அதற்குப்பின் எத்தனை வருடங்களானாலும் அவ்விஷயம் அவர் மனத்தினின்று அகலவே அகலாது. இத்தகைய ஞாபக சக்தி காரணமாய் அவர் எந்த விஷயங்களையும் பிசகின்றி எடுத்துரைக்கும் வல்லமை பெற்றிருந்தார். அவர் பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயராயிருந்த காலையில் தாம் காலையில் தினசரி பத்திரிகையில் வாசித்த விஷயங்களை எதிரில் பத்திரிகை ஒன்றுமின்றி அப்படியே 'சொல்வதெழுதல்' என்ற பாடத்தில் கொடுப்பார். பத்திரிகையையும் அவர் சொன்ன விஷயங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் வித்தியாசமின்றிக் காணப்படும்.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் தம்முடைய பதினெட்டாவது வயதில் பி. ஏ. பட்டம் பெற்றார். அக்காலத்தில் பட்டதாரிகளுக்குச் சுலபமாய்த் துரைத்தனத்தில் வேலை

கிடைக்கச் சந்தர்ப்பங்கள் வாய்ந்திருந்தன. இச்சந்தர்ப் பங்களை யெல்லாம் பொருட்படுத்தாமல் அவர் உபாத்தி மைத் தொழிலில் கொண்ட பிரியத்தினால் அத்துறையில் இறங்கினார்.

அக்காலத்தில் ஆங்கிலக்கல்வி அவ்வளவாகப் பரவியிருக் கவில்லை. எனினும், மகாராஷ்டிரவாசிகள் தங்களுடையமுன் னேற்றத்திற்கு ஆங்கிலக்கல்வி அத்தியாவசியமென்பதை உணர்ந்தனர். அதற்கிணங்க மகாராஷ்டிரர்களில் ஒரு சிலர் 1880-ம் ஆண்டில் பூனாவில் 'புதிய ஆங்கில பள்ளிக்கூடம்' என்ற ஒரு பள்ளிக்கூடத்தை ஏற்படுத்தினார்கள். இப் பள் ளிக்கூடத்துக்கு மூலகாரணமாயிருந்தவர்கள் ஸ்ரீமான்கள் திலகரும் அகர்க்கரு மாவர். புதிய ஆங்கில பள்ளிக்கூடத் தைச் சேர்ந்தவர்கள் தங்களுடைய முயற்சி வேறொன்றி இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் 'தக்ஷிண கல்விச் சங்கம்' என்ற ஒரு சங்கத்தைக் கூட்டினார்கள்.

இக்கல்விச் சங்கத்தில் ஸ்ரீமான் கோகலேயும் ஓர் அங்கத்தினரானார். அவர் முதலில் இப்பள்ளிக்கூடத் தைச் சேர்ந்த கீழ் வகுப்புக்களுக்கே பாடம் சொல்லிக் கொடுத்து வந்தார். நாளடைவில் பள்ளிக்கூடமானது கல்லூரியாக மாறிவிட்டது. அங்ஙனம் மாறிவிடவே ஸ்ரீமான் கோகலே அவர்களுக்குக் கல்லூரியின் வகு ப்புக்களுக்குக் கல்வி போதிக்கும் வேலையும் ஏற் பட்டது. இங்ஙனம் அவர் போதித்துக்கொண்டு வருங்காலையில் தக்ஷிண கல்விச்சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்

பட்டன. அவ்வபிப்பிராய பேதங்களின் காரணமாய் ஸ்ரீமான் திலகர் அச்சங்கத்தில் தான் வகித்திருந்த உத்தியோகத்தை இராஜிநாமா செய்துவிட்டார். அவருடைய வேலையை ஸ்ரீமான் கோகலே பார்க்க வேண்டியதாயிற்று.

அவ்வேலையை ஏற்றுக்கொண்ட அவர் தாம் கணித சாஸ்திரத்தைப் போதிப்பதற் கென்றே பிறந்தவரைப்போல் போதித்து மாணுக்கர்களின் நன்மதிப்பைப் பெற்ருர். அவர் கணித சாஸ்திரத்தைப் பற்றி ஒரு புத்தகம் வரைந்திருக்கிருர். அப்புத்தகம் கணிதசாஸ்திர சம்பந்தமான எல்லா விஷயங்களேயும் தன்னகத்துக் கொண்டிருக்கிறது. அதனுல் அவருக்கு வருடந்தோறும் ஏராளமான பணமும் வந்துகொண்டிருந்தது. அவர் கணித சாஸ்திர போதகாசிரியராயிருந்ததுடன் நின்றுவிடாமல் ஆங்கில போதகாசிரியராகவும் சரித்திர போதகாசிரியராகவும் செல்வவிருத்தி விளக்க சாஸ்திர போதகாசிரியராகவும் வேலே பார்த்து வந்தார். கல்லூரியை நன்னிலேக்குக் கொண்டு வரும்படியான துறைகளிலும் அவர் அதிக ஊக்கத்துடன் பாடுபட்டார்.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் மாணவர்களிடத்தில் அன்பாய் நடந்துகொள்வார். மாணவர்களுக்கு அவரைக் கண்டால் சிறிது அச்சந்தான். அவர் மாணவர்களிடத்தில் கலக்கமற்றுப் பேசுவார். அவர் தங்களுக்கு ஏற்படும் கஷ்டங்களே எடுத்துரைக்கும்படித் தம் மாணுக்கர்களேக் கேட்பார். மாணுக்கர்களுக்குத் தகுதி

யான புத்திமதிகள் சொல்லி அவர்கள் அமிதவாதக் கொள்கைகளில் நுழைந்து தங்களுக்குக் கேடு சூழ்ந்து கொள்ளாமல் இருக்கப் பார்த்துக்கொள்வார். நன்ருய்ப் படித்து விருத்தியாகக் கூடிய மாணுக்கர்களைக் கண்டால் அவர்க்கு அவர்களிடத்தில் அதிகமான பிரீதியுண்டாகும். முன்னுக்கு வரக்கூடியவர்களென்று அவர்புத்திக்குத் தோன் றும் மாணுக்கர்களை அவர் சங்கத்தில் சேரும்படியாய் வற்பு றுத்துவ துண்டு. ஒவ்வொருவரும் தங்களால் கூடுமான அளவுக்குத் தேசத்தின் முன்னேற்றத்திற்காக உழைக்க வேண்டுமென்பதை அவர் அடிக்கடி மாணவர்களிடத்தில் எடுத்துரைப்ப துண்டு தன்னலத்தை விட்டிருக்க வேண் டியதன் அவசியத்தையும் மாணுக்கர்களுக்கு அவர் அடிக்கடி எடுத்துரைப்பார்.

மகாகமல பூனுவைசு மசாநத கல்வி ஸ்தாபனங் களில் எல்லாம் சம்பதப்பட்டிருந்தார். அவர் பம் பாய் சர்வகலாசாலை அங்கத்தினராயிருந்து சாதித்த காரி யங்களை ஒரு சிறிது கவனிப்போம். 1895-ம் வருஷத்தில் அவர் பம்பாய் சர்வகலாசாலையின் அங்கத்தினராஞர். அதுமுதற்கொண்டு இறக்கும் பரியந்தம் அவர் அச்சங்கத் தின் அங்கத்தினராகவே இருந்தார். அவர் அச்சபையின் முன்னிலையில் வந்த விஷயங்களை மிக சிரத்தையுடனும் ஆர்வத்துடனும் கவனித்துக் காரியங்களைச் செய்திருக் கிருர். அநேக வருடங்கள்வரை அவர் சர்வகலாசாலைக்கு ஆங்கிலம் சரித்திரம் ஆகிய இப்பாடங்களின் பரீட்சாதி காரியாகவுமிருந்தார். 1903-ம் வருடத்திய சர்வகலாசாலை

சம்பந்தமான மசோதா வாதத்தின்போது அவர் அதிக மான சிரத்தை யெடுத்துக்கொண்டார்.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் அரசியல் விஷயங்களில் மும்முரமாய்த் தலையிடாததற்குமுன் பத்திரிகைத் தொழிலிலும் சமுதாய சீர்திருத்த விஷயங்களிலும் அதிகமான சிரத்தை யெடுத்துக்கொண்டிருந்தார். புதிய ஆங்கில பள்ளிக்கூடம் ஏற்பட்ட அக்காலத்திலேயே திலகரும் கோகலேயும் 'கேசரி', 'மராட்டா' என்ற இரண்டு பத்திரிகைகளை ஆரம்பித்தார்கள். 'ஆரிய பூஷண அச்சுக்கூடம்' என்னதையும் ஏற்படுத்தினார்கள். கொஞ்ச காலத்துக்குப்பின் அவர்களுக்குள் அபிப்பிராய பேதங்கள் ஏற்பட்டன. அதன் பயனாய் அகர்க்கார் என்பவர் 1889-ம் ஆண்டில் 'சுதாரக்' என்ற ஆங்கில மராத்தி பத்திரிகை ஒன்றை ஆரம்பித்து நடத்தலானார். இப்பத்திரிகைக்கு வேண்டிய மராத்தி விஷயங்களை அகர்க்கரும், ஆங்கில விஷயங்களைக் கோகலேயும் எழுதி வருவது வழக்கம். ஸ்ரீமான் அகர்க்கர் இப்பத்திரிகையில் ஜனசமுதாய சீர்திருத்தங்களைப்பற்றிய விஷயங்களை மராத்தி பாஷையில் திறம்பட எழுதிவந்தார். கோகலே சிற்சில சந்தர்ப்பங்களில் மராத்தி எழுதிவந்தபோதிலும், அவர் பெரும்பான்மையாய் எழுதிவந்தது ஆங்கில பத்திகளுக்கு வேண்டிய விஷயங்களே யாகும். அவர் அரசியல் சம்பந்தமான விஷயங்களையே பெரும்பான்மையாக எழுதி வந்தார். சர்வ ஜனிக் சபையைச் சேர்ந்த மும்மாத பத்திரிகைக்கும் கோகலே விஷயதானம் செய்தார். இப்படி

யாகப் பத்திரிகையில் கோகலே நான்கு வருடங்கள் வரை ஈடுபட்டிருந்தார். அதற்குப்பின் அவருடைய மற்ற வேலைகள் அதிகரிக்கவே அவர் பத்திரிகைத் தொழிலி னின்று விலகிவிட்டார். தம்முடைய பிற்காலத்தில் பத்திரிகைகள் படிப்பதில் அவர் காலங்கழித்தாரே யல்லாமல் அவ்வளவாகப் பத்திரிகைகளுக்கு விஷயதானங் கள் செய்யவில்லை.

கோகலே சமுதாய சீர்திருத்த விஷயங்களில் அவ்வளவாகச் சிரத்தை யெடுத்துக் கொள்ளவில்லை. அவர் சமுதாய விஷயங்களில் அதிகமாய்த் தலையிட்டுக் கொள்ளாததற்குக் காரணம், அவருக்கு அரசியல் துறை யிலேயே அபரிமிதமான வேலைகள் இருந்ததாகும். ஆனாலும் அவருடைய அநுதாபம் மாத்திரம் சீர் திருத்தக்காரர்கள் பக்கமே இருந்துவந்தது. அவர் ஜன சமுதாய விஷயமாகப் பொது ஜனங்களின்முன் வந்து பேசியது தாழ்த்தப்பட்டோர்களை முன்னுக்குக் கொண்டுவரவேண்டு மென்ற விஷயமாகத்தான். அவர் களை முன்னுக்குக் கொண்டுவர வேண்டியதன் அவசியத்தை அவர் செவ்வையாய் உணர்ந்திருந்தார். நம் நாட்டிலேயே ஒரு சாராரை நாம் கொடுமைக்கு உள்ளாக்குவது அடாத செயலென்பதை அவர் முற்றிலும் உணர்ந்திருந்தார். நம்மிடையில் ஏற்பட்டுள்ள குறைகளை முதலில் களைவது அவசியமென்று அவர் கருதினார். தென்னாப்பிரிகாவில் வெள்ளையர்கள் இந்தியர்களைச் செவ் வையாய் நடத்தவேண்டுமானால் நாம் நம் நாட்டிலுள்ள

தாழ்த்தப்பட்டவர்களைச் செவ்வையாய் நடத்திக் காட்ட வேண்டுமென்று அவர் அடிக்கடி கூறுவர்.

அரசியல் விஷயங்களில் கோகலே மிதவாதக் கட்சியைச் சேர்ந்தவராகவே இருந்தார். அவர் அரசாங்கத்தார் இந்தியர்களுக்குச் செய்துவரும் நன்மைகளையும் துன்மைகளையும் எடுத்துக் காட்டிவந்தார். அரசாங்கத்தார் இந்தியாவுக்குப் பாதகமான வழிகளில் நடந்தால் அப்போது அவர் சிறிதும் பயப்படாமல் தம் மனதில் பட்டதை உள்ளது உள்ளபடியே எடுத்துக் கூறி வந்தார். ஆனால் அரசாங்கத்தாருடைய குறைபாடுகளை மாத்திரம் எடுத துக் கூறுவதற்கு அவர் இஷ்டப்படுவதே கிடையாது. அவர் வெறும் பேச்சுக்களை வெறுத்துவந்தார். இதனால் அவருக்குப் பொது ஜனங்களிடத்தில் அரசியல் விஷயமாக அதிகமான செல்வாக்கு இல்லாமற் போய்விட்டது. படித்தவர்களே அவருடைய கருத்துக்களை உணர்ந்திருந்தார்கள்.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் சர்வ ஜனக்சபையின் காரியதரிசியாயிருந்து அரிய பெரிய காரியங்களைச் சாதித்திருக்கின்றனர். அவர் எழுதிய கடிதங்களை அரசாங்கத்தார் சர்வ ஜாக்கிரதையுடன் கவனித்துத் தக்கவிதமான பதில்களை அளித்திருக்கின்றனர். இவர் எடுத்துக் காட்டிய விஷயங்கள் அனைத்தும் உண்மையாயிருந்ததே இதற்குக் காரணமாகும்.

1896-ம் வருஷத்தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியாவின் அரசிறை சம்பந்தமான விஷயங்களைக் கவனிப்பதற்காக ஒரு கமிஷனை நியமித்தார்கள். அக் கமிஷ

னின் தலைவர் வெல்பி என்பவராவர். அதனால் அதற்கு வெல்பி கமிஷன் என்ற பேர் வந்தது. இக் கமிஷன் முன்னிலையில் சாட்சியங் கொடுப்பதற்காக ஸ்ரீமான் கோகலே தக்ஷிண கல்விச் சங்கத்தின் சார்பாய் இங்கிலாந்துக்குச் சென்றார். தம் முன்னிலையில் நமது கோகலே கொடுத்த சாட்சியத்தைக் கேட்டு கமிஷன் அங்கத்தினர்கள் மிகவும் மெச்சினார்கள்.

கோகலே இங்கிலாந்திலிருந்தபோது பம்பாயில் முதல் முதலாகப் பிளேக் நோய் ஆரம்பித்தது. இதற்கு முன் இந் நோய் வந்ததில்லை யாதலால், அரசாங்கத்தாருக்கும் ஜனங்களுக்கும் இதைப்பற்றி அதிகமாய்த் தெரியவில்லை. அரசாங்கத்தார் தங்களால் ஆன முயற்சிகளையெல்லாம் செய்து இப் பிளேக் நோயைத் தடுக்க முயன்றார்கள். இப்படி யிருந்துகொண்டிருக்கையில் கோகலேயின் நண்பர்களில் சிலர் அவர்க்கு எழுதிய கடிதங்களில் பிளேக் நோய் பரவியுள்ள இடங்களில் இராணுவ வீரர்கள் அதிக்கிரமமான காரியங்களைச் செய்தார்கள் என்று எழுதினார்கள். இதை ஆதாரமாகக் கொண்டு ஸ்ரீமான் கோகலே பத்திரிகைகளில் வியாசங்கள் எழுதி அரசாங்கத்தின்மீது குறை கூறினர்.

வெல்பி கமிஷன் முன்னிலையில் சாட்சியங் கொடுத்துவிட்டு ஸ்ரீமான் கோகலே இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இந்தியாவுக்குத் திரும்பி வந்தவுடன் அரசாங்கத்தார் அவரைப் பிடித்துக்கொண்டு பத்திரிகைகளில் தம்மால் எழுதப்பட்ட விஷயங்களுக்குத் தக்க சான்றுகள் கொடுக்க

வேண்டுமென்று கேட்டார்கள். அக்காலத்தில் அவருடைய நண்பர்கள் அவரைக் கைவிட்டுவிட்டார்கள். இதைக் கண்ட கோகலே அரசாங்கத்தாரை மன்னிப்புக் கேட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

கோகலே பூனா வந்து சேர்ந்தவுடன் தமக்கு நேரிட்ட இடையூறுகளையும் கவனிக்காமல் பிளேக்கைத் தடுப்பதற்காகத் தீவிரமான முயற்சிகள் செய்தார். அதனால் ஜனங்களுக்குப் பெருத்த நன்மையும் ஏற்பட்டது.

1899-ம் வருஷத்தில் கோகலே சட்டசபையில் ஓர் அங்கத்தினரானார். இச்சபையின் அங்கத்தினர் பதவியை அவர் இரண்டு வருட காலந்தான் வகித்திருந்தார். அவ்விரண்டுவருட காலத்திற்குள் அவர் அநேக விஷயங்களில் தலையிட்டு உழைத்திருக்கின்றனர். அவர் பம்பாய் சட்டசபையில் அங்கத்தினரா யிருந்தபோது ஜில்லா முனிசிபல் சட்டம் திருத்தத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அதுவல்லாமல் நிலவருமான வரிச் சட்டமும் அக்காலத்திலேயே திருத்தத்துக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. அவ்விரண்டுக்காகவும் அவர் ஊக்கத்துடன் உழைத்தார்.

அநேக வருடங்கள் வரை கோகலே பூனா நகர சபையின் அங்கத்தினராக விருந்து நகர பரிபாலன விஷயங்களில் அதிக சிரத்தை காட்டினார். 1905-ம் வருஷத்தில் இவர் அச்சபையின் தலைவராகவும் தெரிந்தெடுக்கப்பட்டார். மூன்று வருடகாலம் அப்பதவியை அவர் வகித்தார். அம்மூன்று வருடகாலத்தில் அவர் அநேக சீர்திருத்தங்களைச் செய்தனர்.

ஸ்ரீமான் பீரோஷ்ஷா மேட்டா அவர்கள் பம்பாய்ச் சட்டசபையின் பிரதிநிதியாக இந்திய சட்டசபையில் நியமனம் பெற்றிருந்தார். அவர் இறந்துவிடவே அவருடைய ஸ்தானத்திற்குப் பம்பாய் சட்டசபையினர் ஸ்ரீமான் கோகலேயைத் தெரிந்தெடுத் தனுப்பினர். அப் பதவியை அவர் இறக்கும்வரை வகித்திருந்தார். கோகலே இந்திய சட்டசபையில் இந்தியாவின் வரவு செலவுதிட்டம் சம்பந்தமாக நிகழ்த்திய பிரசங்கங்கள் இன்றைக்கும் கொண்டாடப்பட்டு வருகின்றன. அவை விஷய ஞானத்தையும் ஆழ்ந்த கருத்துக்களையும் பிற பாரமான விஷயங்களையும் தம்மகத்துட் கொண்டு விளங்குகின்றன. ஜனங்களின் நன்மைக்கான விஷயங்களில், அரசாங்கத்தாருடைய நன்மதிப்பையும் பொருட் படுத்தாமல், வெகு தைரியமாக அவர் வாதாடி யிருக்கின்றனர். உப்பு வரியைக் குறைக்கவேண்டு மென்று அவர் வாதாடி யுள்ளது மெச்சத் தக்கதாம். அவர்க்கு அரசிறை விஷயங்களில் அபாரமான மூளை இருந்தது. அவருடைய அரசிறை ஞானம் அரசாங்கத்தாருக்குப் பெருத்த துணையாயிருந்தது. அவருடைய ஞானத்தைக் கண்டு அரசாங்க பொக்கிஷ மந்திரிகளும் அடிக்கடி மெச்சுவதுண்டு. சர்வ கலா சங்க சீர்திருத்த விஷயமாகவும் அவர் இந்திய சட்டசபையில் அதிகமாகப் பாடுபட்டிருக்கின்றார். அவருடைய பிரயாசைகளினால் அத்துறையில் நன்மையும் ஏற்பட்டிருக்கிறது.

ஸ்ரீமான் கோகலே அவர்கள் சொன்ன சொல் தவறுதவர். தக்ஷிண கல்விச் சங்கத்தைச் சேர்ந்தவர்கள்

குறைந்தது இருபது வருடம் உழைக்க வேண்டுமென்ற விதி ஒன்றிருந்தது. அதன்படி ஸ்ரீமான் கோகலே அவ் விருபது வருட காலத்தில் அச்சங்கத்திற்காகத் தம் உடல் பொருள் ஆவியையெல்லாம் தத்தஞ் செய்தார். அவர் 1904-ம் ஆண்டில் தக்ஷிண கல்விச் சங்கத்தின் ஆயுள் அங் கத்தினர் பதவியினின்று நீங்கிவிட்டார். அவர் கல்லூரி யை விட்டு விலகிய போது இவர்க்கு அவருடைய மாணவர் கள் உபசாரப் பத்திர மொன்றை வாசித்துக் கொடுத்தனர். அவ் வுபசாரப் பத்திரத்திற்குப் பதிலளிக்கு முகத்தான் அவர் கூறியதாவது: 'என்னுடைய ஆயுட்காலத்தில் நான் செய்த உயர்ந்த வேலையை என் பின்னால் விட்டுச் செல்கி றேன். உங்களில் சிலரை யான் இதர துறைகளில் சந்திக்கக் கூடுமென்று நம்புகிறேன். சமயம் வாய்க்குங் காலங்களி லெல்லாம் கல்லூரியிலேயே உங்களைக் காணக் கூடுமென் றும் நான் நம்புகிறேன். இக் கல்லூரியையும் உங்களையும் கடவுள் ஆசிர்வதிப்பாராக.' ஸ்ரீமான் கோகலே அவர்கள் கல்லூரியை விட்டு விலகிவிட்ட போதிலும் சமயம் வாய்த்த போதெல்லாம் கல்லூரிக்கான நன்மைகளைச் செய்து கொண்டு வந்தார்.

தக்ஷண கல்விச்சங்கத்தைவிட்டு விலகிய பின்னர் ஸ்ரீ கோகலே அவர்கள் அதைப்போலொத்த சங்க மொன்றினைக் கண்டு அதன் மூலமாய் ஜனங்களைப் பொருளாதாரத் துறைகளிலும் கல்வித் துறையிலும் கைத் தொழில் சம்பந்தமான துறைகளிலும் இன்னுமுள்ள இவை போன்ற பிற துறைகளிலும் முன்னேற்றக் கருதி யிருந்தார். அதற்கிணங்க அவர் 1905-ம் வருடத்தில்

இந்திய ஊழியர்கள் சங்கம் என்ற ஒன்றினைக் கண்டார். இச்சங்கத்துக்கு அஸ்திவாரக்கல் நாட்டியவர் அவருடைய நண்பராகிய ஸ்ரீமான் சிவராம் ஹரிசேத் என்பவராவர். சங்கத்தின் அமைப்பு ஒருவருடைய அதிகாரத்தையே பெரிதாகக் கொண்டதாயிருக்கின்றது. ஸ்ரீ கோகலே உயிருடன் இருந்த வரையில் அதன் முதல் அங்கத்தினரா யிருந்து அதிகாரங்களைச் செலுத்தி வந்தார். அவருடைய அதிகாரத்துக்கு மீறிய செயல் ஒன்றும் நடைபெறுவதே கிடையாது. அவர் வைத்தது சட்டமாயிருந்தது. அவருக்குப் பிறகு அங்கத்தினர்கள் முதல் அங்கத்தினருக்குப் பதிலாக மூன்று அங்கத்தினர்களைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். இவர்கள்தான் சங்கத்தின் காரிய நிர்வாகிகளாவர்.

இச்சங்கத்தில் அங்கம் பெற வேண்டுமானால், அங்கம் பெற விரும்புகிறவர்களை முதல் அங்கத்தினரும் நிருவாக சபையும் ஆதரிக்கவேண்டும். அவர்கள் ஆதரிக்காவிட்டால் அவர் சங்கத்தில் அங்கம் பெறவே முடியாது. சங்கத்தில் அங்கம் விரும்புகிறவர்கள் சரியான நடத்தை கொண்டவர்களாயிருக்கவேண்டும். இன்னும் அவர்கள் ஊக்கத்துடனும் சிரத்தையுடனும் உழைக்கக் கூடியவர்களாகவுமிருக்கவேண்டும். சாதாரணமாய் ஒவ்வோர் அங்கத்தினரும் குறைந்தது ஐந்து வருடம் பயிற்சி பெறல் வேண்டும். முதல் மூன்று வருட காலத்தைப் படிப்பில் செலவழிக்க வேண்டும். அக்காலத்தில் சரித்திரம் பொருளாதாரம் ஜன சமுதாய விஷயங்கள் முதலானவைகளைக் கற்க வேண்

டும். வேலைகளை அநுபவத்தில் கற்றுக்கொள்வதற்காகப் புதிதாய்ச் சேரும் ஒவ்வோர் அங்கத்தினரும் சங்கத்தின் வேலைகள் நடைபெறும்படியான இடங்களுக்கு அனுப்பப் படுவர். புதிதாய்ச் சேரும் அங்கத்தினர்கள் வேலையில் திறமை வாய்ந்தவர்களாயிருந்தால் அவர்கள் மூன்று வருட பயிற்சியுடன் நிறுத்தப்படுவர். பயிற்சி பெறுங் காலையில் அங்கத்தினர்களுக்கு மாதந்தோறும் முப்பது ரூபாய் சம்பளம் கொடுக்கப்படும். பின்னர் மாதமொன்றுக்கு ஐம்பது ரூபாய் சம்பளம் கொடுக்கப்படுகிறது. சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தினர்கள் தங்களுடைய சொந்த ஹோதாவில் பணம் சம்பாதிக்கக் கூடாது. அப்படி அவர்கள் சம்பாதித்தாலும் அதைச் சங்கத்திற்குக் கொடுத்துவிட வேண்டும். குழந்தை குட்டிகளுடன் கூடிய அங்கத்தினர்களுக்கு மேல் பணமும் கொடுக்கப்படுகிறது.

சங்கத்துக்குச் சொந்தமான புத்தகாலயம் ஒன்று இருக்கின்றது. அதில் அரசியல் வாதிகளுக்கு வேண்டிய புத்தகங்களெல்லா மிருக்கின்றன. இச்சங்கத்தார் பஞ்ச நிவாரண வேலைகளைச் செய்து ஏழை ஜனங்களின் கஷ்டங்களை நீக்கி வருகின்றனர். இவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அவைகளின் மூலமாயும் ஏழை ஜனங்களின் கஷ்டங்களை நிவர்த்தித்து வருகின்றனர். ஏழைகளுக்குச் சொல்ப வட்டிக்குக் கடன் கொடுத்து அவர்களைக் கடனினின்று நீக்குகின்றனர். இவர்கள் 'சர்வென்ட் அப் இந்தியா' என்ற ஆங்கிலப் பத்திரிகையை நடத்தி அதன் மூலமாயும் ஜனங்களுக்கு அரசியல் ஞானத்தை ஊட்டி வருகின்றனர். இச் சங்கத்தார் சென்னையில் 1908, 1914-ம்

வருடங்களில் கூடிய அகில இந்திய தேசிய மகா நாடு களுக்கு மகத்தான உதவிகளைப் புரிந்திருக்கின்றனர்.

கோகலேயின் அரசியல் குரு மகாதேவ கோவிந்த ரானடே ஆவர். அவர் இறந்த பின் அவருடைய ஞாபகம் நிலைத்திருக்கும்படியாகப் பற்பல மாகாணங்களில் பற்பல விதமான முயற்சிகள் செய்யப்பட்டன. பூனாவில் கோகலே ஒரு லட்ச ரூபாய் தண்டல் செய்து அவர் பேரால் அங்கே 'ரானடே இண்டஸ்டிரியல் அண்டு எகனுமிக் இன்ஸ்ட்டியூட்' என்ற ஒரு கல்விச்சாலையும் தொழிற்சாலையையும் ஏற்படுத்தினர். அப்பள்ளிக்கூடமும் தொழிற்சாலையும் சீரும் சிறப்பும் பெற்று விளங்கி வருகின்றன.

1905-ம் வருடம் காசியில் கூடிய காங்கிரஸ் மகா சபைக்கு ஸ்ரீமான் கோகலே தலைவராகத் தெரிந்தெடுக்கப் பட்டார். அவர் தம்முடைய தலைமைப் பிரசங்கத்தில் இந்தியாவுக்கும் குடியேற்ற நாடுகளுக்குக் கொடுக்கப்பட்டுள்ள சுதந்திரங்கள் கொடுக்கப்படவேண்டு மென்றார். அத்துடன் நில்லாமல் அவசரப்பட்டுக் காரியங்களைச் செய்தல் தகாதென்றும், முன்விளைவு பின்விளைவு முதலியவைகளைக் கவனித்துக் காரியங்களைச் செய்துகொண்டு போகவேண்டு மென்றும் கூறினர். அதே தோரணையில் அரசாங்கத்தாரின் கிரமமற்ற செயல்களையும் அவர் கண்டித்துப் பேசினர். இவருடைய தலைமைப் பிரசங்கம் அமித வாதிகளுக்கும் மிதவாதிகளுக்கும் அதிருப்தியையே உண்டு பண்ணியது. சுதேச கைத்தொழில்களை ஆதரிக்கவேண்டிய அவசியத்தைக் குறித்தும், கிராமாந்திரங்களிலுள்ளவர்

களுக்குக் கல்வியைப் புகட்டுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டியதன் அவசியத்தைப் பற்றியும், தாழ்த்தப் பட்டவர்களைச் சகோதரர்களாகப் பாவித்து அவர்க்கு ஏற் பட்டுள்ள குறைபாடுகளை நீக்க வேண்டியதன் அவசியத் தைக் குறித்தும், அவர் தம்முடைய பிரசங்கத்தில் கூறி ஞர். அவர் கூற்றுக்களில் ஒரு சில அவர் உயிருடன் இருந்த காலத்திலேயே பயனை அளிக்க வாரம்பித்தன.

அதன் பிறகு இந்தியாவின் முன்னேற்றத்திற்காக இங்கிலாந்தில் பாடுபடுவது அவசியமென்று கருதி அவ்விடத்திற்குச் சென்றார். சென்றவர் அநேக தடவை களில் இந்தியா மந்திரியைக் கண்டு சம்பாஷித்தார். அத் துடன் நில்லாமல், இந்தியா விஷயத்தில் சம்பந்தப்பட்ட இதர உத்தியோகஸ்தர்களையும் கண்டார். இந்தியாவின் முன் னேற்றத்தில் சிரத்தை காட்டிய அநுதாபிகளையும் கண்டு இந்தியாவின் நிலையை அவர்களுக்கு உள்ளங்கை நெல்லிக் கனிபோல விளங்க எடுத்துரைத்தார். இவருடைய விஷய ஞானத்தைக் கண்ட ஆங்கிலேயர்களும் இவர் பால் பரிவு காட்டினர்.

மிண்டோ மார்லி சீர்திருத்தங்களுக்குக் கோகலே இங்கிலாந்து சென்றது ஒரு விதத்தில் நல்லதேயாம். அவருடைய பெரு முயற்சிகளின் பலனாய்த்தான் இந்தியா மந்திரி சபைக்கு இரண்டு இந்தியர்களும், இராஜப் பிரதிநிதி, மாகாண கவர்னர் ஆகிய இவர்களுடைய நிர்வாக சபைகளுக்கு ஒவ்வோர் இந்தியரும் நியமிக்கப்பெற அநு கூலங்கள் ஏற்பட்டன. சட்டசபைகளுக்கும் அதிகமான

அதிகாரங்கள் கொடுக்கப்பட்டன. வரவு செலவு திட்டத்தைப்பற்றி வாதிக்கச் சட்டசபை அங்கத்தினர்களுக்கு அதிகாரமும் ஏற்பட்டது. பொதுஜன சம்பந்தமான விஷயங்களைக் கவனிக்க அங்கத்தினர்கள் தீர்மானங்கள் கொண்டு வரவும் கேள்விகளைக் கேட்கவும் அதிகாரங்கள் கொடுக்கப் பெற்றனர். உத்தியோகஸ்தர்களும் ஜனங்களுடைய அபிப்பிராயத்தை மதித்து நடக்க வாரம்பித்தனர். இதுவரையில் இந்தியா அரசாங்கத்தினரே எல்லாவித அதிகாரங்களையும் கைக்கொண்டு மாகாண அரசாங்கங்களுக்குப் போதுமான அதிகாரங்கள் கொடுக்காமல் இருந்தனர். மிண்டோ மார்லி சீர்திருத்தங்களுக்குப் பிறகு மாகாண அரசாங்கங்களின் அதிகாரங்கள் அதிகமாயின.

இத்தகைய நலன்களுக்குக் காரண பூதராயிருந்த நமது கோகலே அவர்களுக்கு இந்தியா மந்திரி சபையில் ஓர் அங்கத்தினர் பதவியை அரசாங்கத்தினர் வழங்கினர். அதை நமது கோகலே ஏற்றுக்கொள்ளவில்லை. பதவி ஏற்காமலே அபரிமிதமான காரியங்களைச் செய்யலாமென்பதே அவருடைய எண்ணம். அவ்வெண்ணத்தின் படியே அவர் பதவிகளை யேற்றுக் கொள்ளாமல் ஜனங்களுக்கான அநேக நன்மைகளைச் செய்து முடித்தார்.

கோகலே இலவச கட்டாய கல்விக்காகத் தம் உடல் பொருள் ஆவியை யெல்லாம் தத்தஞ் செய்த பெரியாராவர். அவர் ஆரம்ப கட்டாய கல்விக்காக இந்திய சட்டசபையில் செய்த பிரசங்கங்கள் கல்லையும் உருகச் செய்யும். ஆனால் அக்காலத்திலிருந்த நிலையின்படி அவரால் அவ்விஷயமாக

அதிகமாகச் சாதித்துவிட முடியவில்லை. எனினும் அவருடைய முயற்சிகள் வீண்போகாமல் இப்போது பலனளிக்க ஆரம்பித்துள்ளன.

கோகலே அவர்கள் தென்னாப்பிரிக்கா இந்தியர்கள் விஷயத்தில் மிகவும் அநுதாபம் கொண்டவர். முதலில், இந்தியர்கள் தென்னாப்பிரிக்காவுக்கு ஒப்பந்தக் கூலிகள் என்ற முறையில் சென்று காடுமேடுகளையும் பள்ளங்களையும் தரிசாய்க் கிடந்த நிலங்களையும் பண்படுத்தி வசிப்பதற்குத் தகுதியான இடமாகச் செய்தார்கள். ஒப்பந்தகாலம் முடிவடைந்த பின்னர் அவர்களில் பெரும்பாலோர் தம் சொந்த நாடாகிய இந்தியாவுக்குத் திரும்பி வராமல் அவ்விடத்திலேயே நிலம் புலம் முதலானவைகளை வாங்கிக் கொண்டும் வர்த்தகம் வியாபாரம் செய்து கொண்டும் ஜீவிக்கலாயினர். இப்படி யிருந்தவர்கள் நாளடைவில் பசையுடன் கூடியவர்களாகவும் போய்விட்டார்கள். இதைக் கண்ட அந்நாட்டு வெள்ளையர்கள் அவர்கள்மேல் பொறாமை கொண்டு அவர்களை நாட்டை விட்டுத் துரத்துவதற்காகப் பற்பல கொடுஞ் சட்டங்களை இயற்றித் துன்புறுத்த வாரம்பித்தனர். நாளா வட்டத்தில் இத்துன்பங்கள் சகிக்கக் கூடாமல் போய்விட்டன.

இப்படி யிருக்கையில் வழக்கொன்றினை நடத்துவதற்காக உலகம் போற்றும் காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவுக்குச் செல்ல வேண்டியதாயிற்று. காந்தியடிகளும் துன்புறுத்தப்பட்டார். அதைக் கண்ட அவர் விஷயத்தை ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டுமென்று

கருதி அவ்விடத்திலேயே தங்கிவிட்டார். இந்தியர்களுக்கு நாளாவட்டத்தில் சுதந்திரம் என்பதே போய்விட்டது. அவர்கள் மிருகங்களிலும் கேவலமாய் நடத்தப்பட்டார்கள். காந்தியடிகள் ஆற்றொணுத் துயரிலாழ்ந்து தென்னுப்பிரிக்காவிலுள்ள தம் சகோதரர்களின் கஷ்டங்களை நீக்குவதற்குரிய வழி யாது என்பதைக் குறித்து ஆலோசித்துக் கொண்டிருந்தார். அப்படியிருக்குஞ் சந்தர்ப்பத்தில் தென்னுப்பிரிக்காவிலிருந்து காந்தி கோகலே அவர்களுக்குக் கடிதம் எழுதி அவர் தென்னுப்பிரிக்காவுக்குப் போந்து விஷயங்களை நேரில் பார்த்துவிட்டுச் செல்லவேண்டுமென்று விண்ணப்பித்துக் கொண்டார். அதைக் கண்ட கோகலே இனியும் சும்மா விருக்கலாகாதென்று கருதி, தம்முடைய தேக நிலையையும் பொருட்படுத்தாமல், இங்கிலாந்தி லிருந்தபடியே தென்னுப்பிரிக்காவுக்குப் பிரயாணமானுர்.

தென்னுப்பிரிக்காவுக்குச் சென்ற நமது கோகலே அவ்வரசாங்கத்தைச் சேர்ந்த முக்கிய உத்தியோகஸ்தர்களுடன் இந்தியர்களுடைய கஷ்ட நஷ்டங்களைப்பற்றிப் பேசினுர். அவர்கள் ஸ்ரீகோகலேயின் பெருந்தன்மையையும் கல்வி வன்மையையும் இன்னு முள்ள பிற நற்குணங்களையும் கண்டு ஆச்சரிய முற்றனர். தாங்கள் அதுவரையில் தென்னுப்பிரிக்கா இந்தியர்களுக்கு விளைத்த கேடுகள் அநியாயமானவை என்று உணர்ந்து அதற்காக வருத்தப்பட்டார்கள். அத்துடன் நில்லாமல் தென்னுப்பிரிக்கா இந்தியர்களின் குறைகளை நீக்குவதாகவும் வாக்களித்தார்கள். அப்போது இந்தியாவின் இராஜப் பிரதி

நிதியா யிருந்தவர் லார்டு ஹார்டின்ஜ். அவர் இந்தியர்கள் விஷயத்தில் மிக்க பரிவு கொண்டவர். அவரும் தென் னுப்பிரிக்கா இந்தியர்களின் குறைகளை நீக்குவதற்காகப் பெரிதும் பாடுபட்டார். இவரனைவருடைய முயற்சிகளால் தான் தென்னுப்பிரிக்கா இந்தியர்கள் விஷயம் ஒருவா ருக முடிவடைந்தது.

இந்திய மக்களுள் சில மேதாவிகள் 1885-ம் ஆண்டில் இந்திய தேசிய மகா சபை யெனும் காங்கிரஸ் மகாசபை யைக்கண்டு அதன் மூலமாய் இந்தியர்களுக்குப் பெருத்த உத்தியோகங்கள் கொடுக்கப்பட வேண்டுமென்று ஆண்டு தோறும் கிளர்ச்சி செய்து வந்தார்கள். இக் கிளர்ச்சி களைப் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் எவ்வளவு காலம் கவ னிக்கா திருக்கமுடியும்? கடைசியில் 1912-ம் வருடத் தில் பிரிட்டிஷ் அரசாங்கத்தார் இந்தியர்களுடைய கிளர்ச்சி களுக்குச் செவிசாய்க்க வேண்டியதாயிற்று. அதற் கிணங்க அவர்கள் ஒரு கமிஷனை நியமித்தார்கள். இக் கமிஷனுக் குப் பப்ளிக் சர்வீஸ் கமிஷன் என்று பெயர். இதனுடைய தலைவர் லார்டு ஐலிங்டன் என்பவர். இக் கமிஷனில் நமது கதா நாயகரான ஸ்ரீமான் கோகலேயும் ஓர் அங்கத்தின ராக நியமிக்கப்பட்டார். இக் கமிஷன் முன்னிலையில் சாட்சியங் கொடுத்த ஆங்கிலேய உத்தியோகஸ்தர்கள் ஒரே மொத்தமாய் இந்தியர்களுக்குக் காரியங்களை நிர் வகிக்குஞ் சக்தி போதாதென்று கூறினார்கள். இதைக் கேட்ட கோகலேஅவர்களுக்குச் சொல்லொணு மன வருத்தம் ஏற்பட்டது. சாட்சியங் கூறியவர்களைக் குறுக்கு

விசாரணை செய்து அவர்கள் வாயிலிருந்தே இந்தியர்கள் திறமைசாலிகள் என்று கூறும்படி செய்தார். இக்கமிஷனில் அவர்க்கு அபரிமிதமான வேலை இருந்தபடியால் அவர் இரவும் பகலும் உழைக்கவேண்டிய தாயிற்று. இங்ஙனம் உழைத்ததன் பயனாய் ஸ்ரீ கோகலே அவர்களுக்குத் தேக அசௌக்கியம் ஏற்பட்டது. அதையும் பொருட்படுத்தாமல் அவர் கமிஷன் வேலைகளைச் செய்து வந்தார். கடைசியில் அவருடைய தேக நிலை அளவுக்கு மீறிப்போய் விட்டது. இதைக் கண்ட அவருடைய நண்பர்கள் அவரைச் சுதேசம் சென்று ஓய்வு எடுத்துக்கொள்ளும்படியாய் வற்புறுத்தினார்கள். அவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி ஸ்ரீகோகலே இங்கிலாந்தைவிட்டு இந்தியாவுக்குத் திரும்பி வந்தார். இந்தியா சேர்ந்தும் அவருடைய தேக நிலை முன்னைப் போலவே இருந்தது. கடைசியில் அதே நோயாய்க் கிடந்து அவர் 1915-ம் வருஷம் பிப்ரவரி மீ 19-ம் தேதி இவ்வுலக வாழ்க்கையை நீத்து இறைவன் திருவடி நிழலை யடைந்தனர். இறக்குங் காலையிலுங்கூட அவருடைய எண்ணமெல்லாம் பப்ளிக் சர்விஸ் கமிஷன் மேலே இருந்தது. இக்கமிஷன் மூலமாய் இந்தியர்களுக்கு அநேக நன்மைகள் கிடைக்கு மென்று அவர் எண்ணியிருந்தார்.

கோகலே அவர்கள் இந்தியாவின் முன்னேற்றத்திற்காக இரவென்றும் பகலென்றும் பாராமல் உழைத்து வந்தாரல்லவா? இதைக் கண்ட இந்திய அரசாங்கத்தார் அவர்க்கு சி. ஐ. இ. பட்டம் நல்கப்பட வேண்டுமென்று மன்னர்பிரானுக்குச் சிபார்சு செய்தார்கள். இதைப் பற்றி லார்டு கர்ஸன் அவருக்கு எழுதியுள்ள கடிதத்தில்,

'உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் இக்கௌரவமானது தாங்கள் தங்களுடைய தேச மக்களுக்காக உழைக்கும் பான்மையை மெச்சி அளிக்கப்பட்டிருக்கிறது. இனியும் தாங்கள் முன்னைப்போலவே தங்களுடைய தேசமக்களின் நன்மைக்காக உழைக்க வேண்டுமென்பதே என்னுடைய விருப்பமாகும். தங்களைப்போலொத்தவர்கள் இன்னு மதிகமாக இந்தியாவில் ஏற்பட வேண்டுமென்பது என்னுடைய கோரிக்கை யாகும்' என்று கூறியுள்ளார். இந்தியாவின் இராஜப் பிரதிநிதியாயிருந்த லார்டு ஹார்டின்ஜ் 1914-ம் வருடத்தில் கோகலே அவர்களுக்கு கே. ஸி. ஐ. இ. பட்டம் வழங்கப்பட வேண்டுமென்று சிபார்சு செய்திருந்தார். அப்போது இந்தியா மந்திரியாயிருந்த லார்டு க்ரூ என்பாரும் அச்சிபார்சை ஏற்று மன்னர் பிரானுக்கு அறிவிக்க இசைந்திருந்தார். எனினும் கோகலே இதை அறிந்து தமக்கு அத்தகைய பட்டம் இல்லாதிருத்தலே நலம் என்று தெரிவிக்க, அவ்விஷயம் அத்துடன் நிறுத்தப்பட்டுப் போய்விட்டது. கோகலேயினுடைய இத் தன்னல மறுப்பு மிகவும் போற்றத் தகுந்ததாகும்.

எமது பிரசுரங்கள்

(* இக்குறியுள்ளவை இராஜாங்க அங்கீகாரம் பெற்றவை)

கணித புத்தகங்கள்

* அனுபவமுறை கணிதம் :	IV வகுப்பிற்கு	0	6	0
* ,,	V வகுப்பிற்கு	0	8	0
* ஆரம்ப கணிதம் :	முதல்பாகம் (I Form)	0	12	0
* ,,	இரண்டாம் பாகம் (II Form)	0	10	0
* ,,	மூன்றாம் பாகம் (III Form)	0	12	0

கதாவாசகங்கள்

ஜீவகன் : துப்பறியும் வித்தகன்	I Form	0	3	0
மாயா விநோதக் கதைகள்	II ,,	0	5	0
* கனகமலைக் காவலன்	II ,,	0	5	0
* நீதிக் களஞ்சியம்	III or IV ,,	0	5	0
* சாணக்கியன்	IV or V ,,	0	8	0
* புகழேந்தி	IV or V ,,	0	8	0
* நாமதேவர்	IV or V ,,	0	10	0
பாரதநாட்டுப் பஞ்சரத்தினங்கள்	IV or V Form	0	8	0
தசரதராமன்	I or II ,,	0	6	0

பிரதம சாஸ்திர புத்தகங்கள்

* பௌதிக சாஸ்திரம் :	I பாகம் I From	0	10	0
,,	II ,, II ,,	0	10	0

குறிப்பு:—இதர கம்பெனி புத்தகங்களும் நோட்டுப் புத்தகங்களும் எம்மிடம் கிடைக்கும்.

ஆசிரியர் நூற்பதிப்புக் கழகம்
199-200 தம்பு செட்டித் தெரு, சென்னை.

கதா வாசகங்கள்

பண்டிதர் சக்கரவர்த்தி நயினர் இயற்

சாணக்கியன் (For Higher Forms) .... 7 அணா
தசரத ராமன் 6 அணா

பண்டிதர் S. வேலாயுத முதலியார் இயற்றியவை

கனகமலைக் காவலன்(I or II Form—) 5 அணா
நீதிக் களஞ்சியம் (III or IV Form)— 5 அணா

S. அருணகிரிநாதர் இயற்றியவை

புகழேந்திப் புலவர் 8 அணா

திரு. P. M. G. வேங்கடகிருஷ்ண முதலியார் இயற்றியவை

நாமதேவர் (From iv or v)	10 அணா
பாரதநாட்டுப் பஞ்சரத்தினங்கள்	8 ,,
மாயா விநோதக் கதைகள்	5 ,,
ஜீவகன்-துப்பறியும் வித்தகன்	3 ,,

ம. சண்முகசுந்தர முதலியார், எம். ஏ. எல

செய்யுட் கதைகள்

இது உயர்தரப் பாடசாலை வகுப்புகளில் வதற்கு உபயோகிக்கும்படி செய்யுள் நடையிலு கள் தொகுக்கப்பெற்றது. ஆங்கில பாஷையில் பழக்குவதற்குச் செய்யுட் கதைகளைப் போல் யுள் ரூபமாகவுள்ள கதைகளை வியாச ரூபமா உபயோகமானது.

ஆசிரியர் நூற்பதிப்புக் க
தம்புசெட்டி